
கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



KALKI • 29.06.2008 • ரூ.10.00 • 96 பக்கங்கள்




தசாவதாரம்
திரைப் பார்வை பக்கம் 12ல்


பொற்கோவில் ஆகிறது
உங்கள் ஸ்ரீ குமரன் தங்கமாளிகை
ஈரோட்டிலேயே மிக பிரம்மாண்டமான புதிய கட்டிடத்தில்
ஜுன் 23 முதல் கோலாகல ஆரம்பம்
ஸ்ரீ குமரன்
தங்கமாளிகை
(தி சென்னை சில்க்ஸ் பக்கத்தில்)
80, R.K.V.ரோடு, ஈரோடு. Ph: 0424-2213888
Shop online at www.sktm.in
கடையுடன் கூடிய விசாலமான கார் பார்க்கிங்



சிதம்பரம் காதில் விழுமா?

தலையங்கம் ரொம்ப ஜோருங்க! அன்னாடங்காய்ச்சி அங்குசாமி, சிதம்பரம் ஐயாவுக்கு எழுதிய மடல் ஒரு பக்காக் கடிதம்ங்க! விலைவாசியைக் குறைக்க அங்குசாமி கொடுத்த யோசனை, சிதம்பரம் ஐயா காதிலே விழுங்களா?

- ஜே.துரைராஜ், சென்னை

மௌன கீதமாய் இசைக்கப் பட்ட பாவண்ணனின் கவிதை, சருகுகளின் வரைபடத்துக்கு வண்ணம் சேர்த்த புகைப்படம் - கலர் ஃபுல்!

- சி.என்.ரமாதேவி, சென்னை - 86

பிரமிப்பூட்டும் கிராஃபிக்ஸ் பற்றிய ரகசியங்களை விவரித்த கட்டுரை விறு விறுப்பாக இருந்தது. மனத்தில் ஃபிக்ஸ் ஆகிவிட்டது.!

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

உள்ளதை உள்ளபடி கூறியதற்காகவும், வாய்ப்பிருந்தும் நமீதாவின் படத்தைப் போடாததற்கும் (சினிமா விமர்சனம்) கல்கிக்கு ஒரு தொ.ஒ.பா!

- சு.ஸ்ரீகாந்த், நெய்வேலி

ஆன்டிக் சிறுகதை இன்றைய யதார்த்த நிலையைத் தெளிவாய் எடுத்துரைத்தது.

- என்.காளிதாஸ், சிதம்பரம்

உருளைக் கிழங்கை எப்படிச் சாப் பிட்டால் உடலுக்கு நலம், எவ்வாறு சாப் பிட்டால் உடல் நலனுக்குக் கேடு என் பதை, உற்சாக கிழங்கு கட்டுரை மூலம் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிந்தது.

- எஸ்.விஜயலட்சுமி, ஸ்ரீவில்லிபுத்தூர்

தாங்கள் அன்புடன் அனுப்பிய விஜய் வின்னருக்கான இளைய தளபதி விஜய்யின் வண்ணப் புகைப்படம் கிடைக்கப் பெற்று மகிழ்வடைந்தேன். வாசகர்களை உவகையில் ஆழ்த்துவதில் கல்கிக்கு நிகர் கல்கியே! நான் கல்கி இதழின் மூன்றாவது தலைமுறை வாசகி.

- எம்.எஸ்.இராஜராஜேஸ்வரி, சென்னை

திருமதி விசாலி கண்ணதாசன், பெண் சுதந்திரத்தைப் பற்றி தெரிவித்த கருத்து அருமையிலும் அருமை. பெண் சுதந் திரத்தைத் தவறாகப் புரிந்து வைத்திருக்கும் இக்கால மகளிருக்கு நல்ல அறிவுரை. பாராட்டுகள்.

- எஸ்.வி.நாகராஜ், பெங்களூரு

ஸ்பீட் போஸ்ட்

பார்வையற்ற இரு நெஞ்சங்கள் - பள்ளிப் பருவ காதல் கொண்டனர் - அபூர் வமாக, அவர்கள் இறைவன் அருளால் ஒன்று சேர்ந்த சுவாரசியமான கதையைப் படிக்கும்போது பரவசம் ஏற்பட்டது! சங்கீத ஆசிரியருக்கு ஆங்கில ஆசிரியை!

- பி.ஆர்.மஹேந்திரநாத் ராவ், சென்னை - 28

கல்கியின் ஸர் ஜிலானி ஜங் ஜங் பகதூர் (புலிராஜா) படித்துச் சிரித்துச் சிரித்து வயிற்றில் ணங், ணங் வலி! உடனே மருந்து அனுப்புங்கள், ஸ்டூகர் விமானத்தில்.

- துரை. சுப்பிரமணியன், அவிநாசி

‘சட்’டெனத் திறந்து ‘டக்’ன்னு படிக்க...

பட்டியல்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்


தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் :
044 - 4343 8899

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com
சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ.2,700/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஆடைக் கட்டுப்பாடு அவசியமா?



வீரமணி

கல்லூரிகளில் வலியுறுத்தப்படும் ஆடைக் கட்டுப்பாடு தங்களது சுதந்திரத்தைப் பறிப்பதாய் ஒரு சாராரும், எது சுதந்திரம் என்று கேள்வி எழுப்பும் இன்னொரு சாராருமே இந்நாள் வரை தென்பட்டுவர, இந்த முறை மாணவர்களைச் சந்தித்தபோது மகத்தான மாற்றம். 'ஆடைக் கட்டுப்பாடு அவசியம்' என்பதே பெரும்பாலானோரின் கருத்தாக மலர்ந்தது.

''ஆடைக் கட்டுப்பாடுங்கறது நம்ம நல்லதுக்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு விஷயம். கண்டபடி உடுத்தாம, அடுத்தவங்களைக் கலவரப்படுத்தாம, எல்லோரும் ஒரே மாதிரி பின்பற்றணும்னு உருவாக்கப்பட்ட பண்புன்னுகூட இதைச் சொல்லலாம். இங்கு அவசியமாங்கற கேள்வியே எழக்கூடாது. யாரோ ஒரு சில மேல் தட்டு வர்க்கப் பெண்கள் வேணா, இதை எதிர்க்கலாம். குடும்பம்ங்கற அமைப்பிலிருந்து வர்ற பெரும்பாலான கல்லூரிப் பெண்கள், இதை வரவேற்கத்தான் செய்றாங்க'' என்று அழுத்தம் திருத்தமாகத் தன் எண்ணங்களை, எம்.ஒ.பி.யில் சோஷியாலஜி படிக்கும் ஸ்ரீதேவி வெளிப்படுத்த, அவருக்குப் பதில் தரும் விதமாக இருந்தது இன்ஜினியரிங் மாணவர் ஜீவாவின் கருத்து.



முனைவர் மீனா

வின்சென்ட்



''ஆடைக் கட்டுப்பாடு அவசியம்ங்கறதுல மாற்றுக் கருத்தில்ல. ஆனா, யாருக்குங்கறதுதான் இங்க கேள்வி. புடைவை, சுரிதார், மிடி, டீ-ஷர்ட், ஜீன்ஸுன்னு விதவிதமான டிரஸ்ங்க இருக்கு. பெண்கள் போட்டுத் தாக்கறாங்க. ஆனா, ஆண்கள் பாவம். பேண்ட், சட்டையைத் தவிர பெருசா எதையும் அவங்க காலேஜுக்குப் போட்டுட்டு வர முடியாது. இதுல டிரஸ் கோட் கொண்டு வந்து ஆண்கள்கிட்ட என்ன சாதிக்கட முடியும்! எல்லாப் பெண்களும் இல்லைன்னாலும் ஒரு சிலர் போடற டிரஸ்ஸப் பார்த்தா அருவருப்பா இருக்கு. ஆக, அவங்களுக்காகவாவது ஆடைக் காட்டுப்பாடு அவசியம்தான்'' என்கிறார் ஜீவா.

''முன்னோக்கி அழைத்துச் செல்கிறோம் என்று கூறிக்கொண்டு, பின்நோக்கி இழுத்துச் சென்று விடக் கூடாது'' என்கிறார் திருச்சி ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரியின் முதல்வர் மீனா.



ஜீவா

''ஆடை உடுத்துவது என்பது அவரவர் சுதந்திரம் சார்ந்த விஷயம். அதில் ஓரளவுக்குத்தான் தலையிட முடியும். பண்பாட்டோடு சேர்ந்த கட்டுப்பாடு மிகவும் அவசியம். ஆனால், கட்டுப்பெட்டித்தனம் தேவையில்லை. உடை விஷயத்தில் எது உன்னதமானது என்பதை

காலேஜ் ரிப்போர்ட்





✱ நாகலக்ஷ்மி

மாணவர்களே உணரச் செய்ய வேண்டும். பிறகு கட்டுப்பாட்டுக்கு அங்கு வேலை ஏது? இன்றைய இளைய சமுதாயத்தினர் மிகுந்த ஆற்றல் உடையவர்கள். சிந்தித்துச் செயல்படக்கூடிய வல்லமை படைத்தவர்கள். சிறிதளவே தென்படும் அயல் நாட்டுக் கலாசாரத்தைக்கூடத் துடைத்தெறிந்துவிட்டால், வாழ்வில் மிக உன்னதமான நிலையை அவர்கள் அடைய முடியுமென்பது கண்கூடு'' என்கிறார் மீனா.

''மேடம் சொல்றது சரிதான். ஆனா, எவ்ளோதான் சொன்னாலும் கேக்கறவங்கதான் கேக்கறாங்க; உணர்றவங்கதான் உணர்றாங்க. சிலருக்குக் கட்டுப்பாடு விதிச்சாத்தான் சரியா வருது. நானும் ஒரு பெண்தான். ஆனா, வேற வழியில்ல, சொல்லித்தான் ஆகணும். என் வீட்ல சின்ன வயசுலேர்ந்தே எங்கே, எப்படி உடை உடுத்



* வித்யா



* ஸ்ரீதேவி

தணும்னு சொல்லி வளர்த்தாங்க. அது இப்ப எனக்குக் கைகொடுக்குது. அந்த மாதிரி எல்லா பெண்களுக்கும் அமையறது இல்லை. அதனால கட்டுப்பாடு விதிச்சா தப்பில்லை'' என்கிறார் ஜர்னலிஸம் படிக்கும் வித்யா.

''பெத்தவங்களப் பின்பற்றித் தான் இன்னைக்குப் பிள்ளைகள் வளர்றாங்க. அவங்கள மாடர்னா வளர்க்க வேண்டியது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் பண்பா வளர்க்கறது. படிக்கும்போது, வேலைக் குப் போகும்போது, ஃபங்ஷனுக்குப் போகும்போது எப்படியெல்லாம் உடை உடுத்தணும்னு பேரன்ட்ஸ் குழந்தைங்களுக்கு கைடு பண்றது ரொம்ப நல்ல விஷயம். ஆனா, சில பெற்றோருக்கே இந்த விஷயத்துல இப்போ தடுமாற்றம் ஏற்படறதால, கட்டுப்பாடு விதிக்கறதை நிச்சயமா வரவேற்கலாம்'' என்கிறார் குடும்பத் தலைவி நாகலக்ஷ்மி.

''ஒரு நடிகை பொது இடத்துல அரைகுறையா டிரஸ் பண்ணிட்டு வரும்போது எவ்ளோ திட்டறோம்! பொது இடத்துக்கே அப்படின்னா, எதிர்காலம் தர்ற கல்லூரிகளுக்கு வரும்போது எவ்ளோ அடக்கமா உடை உடுத்தணும்! இன்னைக்கு கல்லூரிகள்ல நடக்கற பல தப்பான விஷயங்களுக்கு அடிப்படையா அமையறது, தவறான உடை உடுத்தறதுதான். ஆண், பெண் இனக் கவர்ச்சிக்கும் சமயங்கள்ல இது காரணமாகுது'' என்கிறார் பி.பி.ஒ. மாணவர் வின்சென்ட்.

''நான் கல்லூரில படிச்சப்போ என் தோழி ஒருத்தி, இப்படித்தான் ரொம்ப சுதந்திரமா உடை உடுத்துவா. ஒரு சமயம் அதுவே அவளுக்கு வினையா அமைஞ்சிடுச்சி. அப்பல்லாம் நான் நினைச்சதுண்டு, கல்லூரிகள்ல டிரஸ் கோட் கொண்டு வந்தா எவ்ளோ நல்லா இருக்கும்னு. அது இன்னைக்கு சாத்தியமாகி இருக்கு'' என்று தமது கடந்த காலத்தை ஒப்பிட்டுப் பேசினார், பிசினஸ்மேன் வீரமணி.




* பூஜா

மாணவி பூஜா நம்மிடம் கூறும்போது, ''உலகம் நவீனமாயிட்டு வரும்போது, புதுசு புதுசா, டிசைன் டிசைனா டிரஸ் பண்ணி அடுத்தவங்கள அசத்தணும்ங்கற வேட்கை நம்ம மனசுல பிறக்கும்தான். அது இயற்கை. ஆனா, நடை முறையை நாம பார்க்கணும். தினம் ஒரு பாலியல் பலாத்காரம், ஈவ் டீசிங், பெண்களுக்குப் பாதுகாப்பின்மை - அதீதமான கவர்ச்சியோடு கவனத்தை ஈர்க்கறது அபாயத்துல முடியும். அதனால, ஆசை இருந்தாலும் மனசை அடக்கப் பழகிக்கணும். விபரீதத்தை நாமே வழிகாட்டி அழைக்கக் கூடாது. இதுக்கு டிரஸ் கோட் கண்டிப்பா ஹெல்ப் பண்ணுது'' என்றார்.

- மு.மாறன்

அட்டை மற்றும் படங்கள் :
ஸ்ரீஹரி



உ

சிவமயம்

திருவாரூர் மாவட்டம் குடவாசல் வட்டம்

ஸற்குணேஸ்வரபுரம் என்கிற

கருவேலி

ஸ்ரீ ஸர்வாங்கஸுந்தரி ஸமேத

ஸ்ரீ ஸற்குணேஸ்வர ஸ்வாமி திருக்கோயில்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

தஞ்சைத் தரணியின் குடவாசல் வட்டத்தில், காவிரியின் தென்கரையில் உள்ளதுதான் அப்பர் ஸ்வாமிகளால் பாடப் பெற்ற, கருவேலி என்னும் கருவிலி திருத்தலம். சற்குண ராஜனால் திருப்பணி செய்யப் பெற்றதால், சற்குணேஸ்வரபுரம் என்றும் பெயர் பெற்ற கோயிலில், அருள்மிகு ஸ்ரீ சற்குணேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீ ஸர்வாங்க சுந்தரி அம்பாளுடன் சேர்ந்து அருள்பாலிக்கிறார். சிதிலமுற்றிருந்த இவ்வாலயத்தில்,1997ம் ஆண்டு கருவேலி குழந்தை ஐயர் சந்ததியினரால், கிராமவாசிகள், மற்றும் நண்பர்களின் ஒத்துழைப்புடன் திருப்பணிகள் செய்யப் பெற்று, 27.3.1997ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இப்பொழுது ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமி சன்னிதிகள், ஸ்வாமி, அம்பாளுக்கு ராஜகோபுரங்கள் புதிதாகக் கட்டப்பட்டும், பிராகாரம், நந்தவனம், திருக்குளம் ஆகியவை புதுப்பிக்கப் பட்டும், ***நிகழும் ஸர்வதாரி வருஷம் ஆனி மாதம் 30ந் தேதி (14.7.2008) மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.*** 9.7.08 புதன் காலை 9 மணி அளவில் விக்னேஸ்வர பூஜையுடன் தொடங்கி, வியாழன் வாஸ்து சாந்தி. 11.7.08 வெள்ளிக்கிழமை முதல் யாகசாலை பூஜைகள் 6 காலம் தொடர்ந்து நடக்கின்றன. நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பாக **14.7.2008 திங்கட்கிழமை காலை 9.30 மணி அளவில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.** அன்று மாலை, திருக்கல்யாணமும், ஸ்வாமி வீதி உலாவும் நடைபெறும்.

15.7.08 செவ்வாய் அன்று மண்டலாபிஷேகம் தொடங்குகிறது. *

அன்பர்கள் அனைவரும் மகா கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு இறைவனை தரிசித்து, இகபர பேறு அடைய பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்

அவ்வண்ணமே கோரும்
Dr.V. கிருஷ்ணமூர்த்தி,
பரம்பரை தர்மகர்த்தா

திரு.பொன் சிவசங்கரன், M.A
நிர்வாக அதிகாரி, கூடுதல் பொறுப்பு

தெய்வத் திருப்பணியில்,
கிராமவாசிகள் மற்றும்
ஸ்ரீ ஸற்குணேஸ்வரர்
கைங்கர்ய சபா (Regd)


* மண்டலாபிஷேகம் செய்ய விரும்புபவர்கள் ஆலய அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

ஸ்ரீ ஸற்குணேஸ்வரர் திருக்கோயில், கருவேலி - 609 501. போன் : **04366 273900.**

சென்னை அலுவலகம் :

Sri Sarguneswara Swami Temple Management Committee,
6A, Warren Road, Mylapore, Chennai - 600 004. Phone : 044-2499 4535

கருவேலி: கும்பகோணம் - பூந்தோட்டம் சாலையில் கூந்தலூருக்கு வடக்கே ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. கருவேலிக்குப் பேருந்து வசதி உண்டு.



கிரேஸியைக் கேளுங்கள்

● எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி

ஓசியில் பத்திரிகை படிப்பவர்க்கு என்ன பட்டம் தரலாம்?

'இலவச இணைப்பு'?

● சவிதா, ஸ்ரீரங்கம்

பத்திரிகை தர்மம் என்றால் என்ன?

ஓசியில் படிக்கக் கொடுப்பதும் பத்திரிகை தர்மம்தான்...!

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்கிறார்களே... என்ன அர்த்தம் அதற்கு?

'ஐந்தில்', 'ஐம்பதில்' உள்ள முதலெழுத்தான 'ஐ'யை எழுதும்போது, தப்பாக வளைத்துவிட்டால், அது 'ஜ' ஆகிவிடும். சரியாக சிறு வயதில் வளையாததால் 'ஐந்து' வெறும் 'ஜந்து' ஆகிவிடும். அதனால் 'ஐம்பதில்' வளைய முற்பட்டு, வீண் 'ஜம்பத்தில்' முறிந்துவிடும்.

● என்.கோமதி, நெல்லை

வழுக்கைத் தலையில் முடி முளைத்தால் சாதனை... செடி முளைத்தால்...?

பூக்களின் வாசனை! என்ன... உதிர்ந்து 'காதுல பூ' நமக்கு நாமே வைத்துக்கொள்ள வேண்டி வரும். மாதத்துக்கு ஒரு தபா, முடி வெட்டிக்கொள்வதுபோல, சிரசில் முளைத்த செடியை வெட்டிக் கொள்ளப் போக வேண்டி வரும். ஜுராசிக்-பார்க் போல, தலை சிராசிக்-பார்க் ஆகிவிடும். இலையுதிர் காலம், நமக்கு மட்டும் தலையுதிர் காலமாகிவிடும். ஒரு வசதி... மனைவி நம்மிடம், 'என்னை ஒரு நாளாவது பீச்சு, பார்க்குக்கு அழைத்துக்கொண்டு போனதுண்டா?' என்று ஆதங்கப்பட்டால், அவளைத் தலையில் வைத்துக் கொண்டாடி குஷிப்படுத்தலாம்.

● நர்மதா, பெங்களூரு

உங்கள் முகவரி...?

முகத்தில் ஐம்பதைக் காட்டிக் கொடுக்கும் ஓரிரு வரிகள்...!

● பி.சிவா, பாளையங்கோட்டை

பணம் ஆபத்துக்கு உதவுமா, இல்லை ஆபத்தைப் பணம் உருவாக்குமா...?

பணம் பத்தும் செய்யும். ஆ'பத்தும்' செய்யும்.

● த.சத்தியநாராயணன், அயன்புரம்

உலகம் உருண்டையாக இல்லாமல் சதுரமாக இருந்திருந்தால்...?

சுற்றும்போது சதுராட்டம் போடும்...!

● மு.ரா.பாலாஜி, கோலார் தங்கவயல்

கிரேஸியாரே... நீங்கள் ஈடுபடுவது ஆன்மிகத் தேடலா? அறிவியல் தேடலா?

வயித்தெரிச்சலைக் கிளப்பாதீங்க சார். செல்ஃபோன், கார் சாவி, பேனா, பர்ஸ்

'ஓசி' பற்றிய

இதையெல்லாம் எங்கே வச்சுத் தொலைச் சேங்கற தேடலுக்கே நேரம் பத்தலை...!

● ஜே.வி.ஜே. கண்ணன், திருச்சி
ஆழ்நிலை உறக்கத்துக்கு... மல்லாக்க, ஒருக்களித்து, குப்புறப்படுப்பது - இதில் எந்தமுறை சிறந்தது?

முதலில் வெதுவெதுப்பான வெந்நீரில் சுகமாகக் குளியுங்கள். பிறகு வாயில் காக்காய் கொத்தும் அளவுக்கு வயிறார கொட்டிக்கொள்ளுங்கள். யாரும் நுழைய முடியாதபடி, படுக்கையறைக் கதவு, ஜன்னல்களை மூடி, பூட்டு போடுங்கள். மெத்தை, தலைகாணி உறைகளை மாற்றுங்கள். மின்விசிறியை முழு வேகத்தில் சுழல விட்டு, கட்டிலின் மீது ஏறி நில்லுங்கள். வெறித்தனமாகச் சுழலும் மின்விசிறியின் பிளேடு தலையில் பட, நீங்கள் 'ஆ'வென்று சத்தமிட்டபடி மெத்தையில் மயக்கமாக விழுவீர்கள். கதவு, ஜன்னல்கள் மூடப்பட்டிருப்பதால் உங்களுடைய 'ஆ' சத்தம் யார் காதிலும் விழாது. உங்களை எழுப்ப யாரும் வர மாட்டார்கள். முக்கியமாக, நீங்கள் போடும் 'ஆ' சத்தத்தால் நீங்களே எழுந்திராமல் இருக்க, முன்னெச்சரிக்கையாக காதில் பஞ்சை அடைத்துக்கொள்ளுங்கள். இதுதான் ஆ(ழ்)நிலை உறக்கம்!

● என்.காளிதாஸ், சிதம்பரம்
தங்களின் குரு யார்...?

தற்சமயம் வேகாத வெய்யிலால் வேர்க் 'குரு'.

● ரா.பிரசன்னா, மதுரை
தானத்தில் சிறந்தது நிதானம் என்கிறேன். நீங்கள்...?


கொடுக்க முடிந்ததே தானம்... நிதானமாக யோசித்துப் பார்த்தால், எனக்கென்னமோ தானத்தில் சிறந்தது சமாதானம் என்று தோன்றுகிறது.

● ஏ.கே.நாசர், திருப்பட்டினம்
பட்டிமன்றம் பார்ப்பதுண்டா...?

'பாப்பையா' நடுவராக இருந்தால், 'பாப்பேன் அய்யா'. ●



குறிப்புகள்



★ பிரபா



★ ஜகதீஷ்



★ வைஷ்ணவி

இளமைக்குப்

'பொய் சொல்லப் போறேன்... பொய் சொல்லப் போறேன்...'னு தம்பட்டம் அடிச்சிக்கிட்டு யாரும் ரீலு விடறது இல்ல. சில நேரம் அதுவா அருவியா கொட்டும்; சில நேரம் ஐந்தாண்டுத் திட்டம் மாதிரி பக்கா பிளானோட பவர்ஃபுல்லா பொய் (உண்மை) படை எடுக்கும்.

சிலர் தங்களோட 'ரீலு' மேட்டர்ஸை 'ரியலா' சொல்றாங்க...

வைஷ்ணவி:

★ காலேஜ்ல படிச்சிட்டுப் பொய் சொல்லாம இருந்தா எப்படி? என் ஃப்ரெண்ட்ஸ் 'என்னடி, படிச்சிட்டியா?'ன்னு எப்பக் கேட்டாலும், 'இல்லவே இல்லை'ன்னு ஃபெவிக்கால வைச்சு ஒட்டின மாதிரி, உறுதியா ரீலு விடுவேன். ஆனா, வீட்ல இருந்து படிச்சு, கரைச்சுக் குடிச்சுடுவேன் *(சமத்துப் பொண்ணு!)*

★ நிறைய பேரு நான் என்ன சொன்னாலும் நம்பிடறாங்க. *(இன்னும் உங்களக் குழந்தையாவே நினைச்சுக்கிட்டு இருக்காங்க!)*

★ நான் சொன்ன பொய்யால யாருக்கும் இதுவரைக்கும் எந்தப் பிரச்னையும் வந்ததில்ல! *(இதுவாச்சும் உண்மையா?)*

பிரபா:

★ நான் இதுவரைக்கும் பொய் சொன்னதே கிடையாது... *(இதைவிட பெரிய பொய் உலகத்துல எதுவுமே கிடையாதுங்க!)*

ராஜலட்சுமி:

★ சின்னச் சின்ன விஷயங்கள, குட்டிக்குட்டியா கொஞ்சமா... லேசா... மாத்திச் சொல்வேன் அவ்வளவுதான்... *(அதுக்குப் பேருதாங்க பொய்!)*

எல்.கே.காவ்ய ப்ரியதர்ஸன்:

★ எங்க டாடிக்கு ஒரே கவலை, நான் லவ் பண்ணலேன்னு. நான் லவ் பண்ணா பார்ட்டி கொடுக்கற இதுமாதிரி டாடி இருக்கறப்ப, எனக்குப் பொய் சொல்ல என்ன அவசியமிருக்கு...?

(நைனா... 'லவ்வுங்கறது பண்றதில்ல, தானா வர்றது! லவ்வுங்கறது



பொய்யை, சாப்பாட்டில்
ஊறுகாய் மாதிரி தொட்டுக்கிட்டா காதலன்
மொத்தமா பிசைஞ்சுக்கிட்டா தலைவன்!



✱ பழனிச்சாமி



✱ காவ்ய ப்ரியதர்ஸன்



✱ ராஜலட்சுமி

பொய் அழகா?

ஒருமையா பன்மையான்னு டாடிய மொதல்ல கேளு.)

ஜகதீஷ்:

★ ஸ்கூல் படிக்கும்போது பொய்க்கு அளவே கிடையாது. வாய் வண்டி வண்டியா கொட்டும். எப்ப, எதுக்கு 'லீவ்' எடுத்தாலும் ஒரே மாதிரிதான் 'லீவ் லெட்டர்' ஆரம்பிக்கும். 'ஐ ஆம் சஃபரிங் ஃப்ரம் ஃபீவர்' அப்படீன்னு. 'பொய்'னு தெரியும். இருந் தாலும் அப்படியே பழகிப் போச்சு!

(இப்பவும் சஃபரிங் ஃப்ரம் ஃபீவர் தானா?)

பழனிச்சாமி:

★ என் ஃப்ரெண்ட் ஒருத்தன் ரொம்ப ஜாலிக்காகத்தான் பொய் சொல்வான்; ஆனா ரொம்ப நல்ல பையன்!

(பொய் சொல்றவங்கள கெட்டவங்கன்னு, நாங்க சொல்லவே இல்லையே...!)

விஜயகுமார்:

★ 'ஸ்கிரிப்ட்' பக்காவா இருந்தாத்தான் பந்தாவா பொய் சொல்ல முடியும்.

★ பிரைவேட் இன்ஷூரன்ஸ் கம்பெனி... அந்த மாதிரி எதுவும் ஃபோன் கால் வந்தா, சும்மா விட மாட்டேன். எனக்கு இதுல இத்தனை ஆயிரம் வருது; அதுல அத்தனை ஆயிரம் வருது...ன்னு ரீலு விட்டுட்டு, அதயெல்லாம் எப்படி 'சேவ்' பண்றதுன்னு கேட்டுட்டு, அடுத்து ஆறு மாசங்களுக்கு அந்த நம்பர் வந்தா, அட்டெண்ட் பண்ணவே மாட்டேன்.

ஜாலிக்காக, சும்மா பொய் சொல்லிக் கலாய்க்கலாம். தப்பில்லை; இல்ல, வள்ளுவர் சொன்ன மாதிரி 'நன்மை பயக்குமெனில்' பொய் சொல்லலாம்.

'ரீலு அந்துபோச்சுடா சாமி...! அட்வைஸ் போதும்... ஆள விடு'ன்னு சொல்றீங்களா?


- எம்.திரவியமுருகன்

Mr.மக் மொழி



பொய்யான உடம்புக்கு 'மெய்'ன்னு பேர் வெச்சதில் இருந்து தெரியல, எல்லாமே பொய்தான்னு...!

தசாவதாரம்



வித்தியாசங்களின் விளைநில மான கமலஹாசனின் சினிமா பட்டறையிலிருந்து வெளிவந்திருக்கும் வீரியமிக்கதொரு படைப்பு, தசாவதாரம்.

ஒரு சாதாரண நிகழ்வுக்கும், மற்றுமோர் அசாதாரணமான பிரளயத்துக்கும் இடையே மெல்லிய தொடர்பு உண்டு என்பதுதான் கதை. சாதாரணம் - அசாதாரணம் இந்த இரண்டுக்கும் இடையில் கமல் நிகழ்த்திக் காட்டியிருக்கும் ரசவாதங்கள், படத்தின் ரசனையான ஹைலைட்!

பன்னிரண்டாம் நூற்றாண்டில், குலோத்துங்க சோழனின் வைஷ்ணவ துவேஷத்துக்கு எதிராகக் குரல் கொடுத்ததால், ரங்கநாதர் சிலை

திருக்கிறது ரவிவர்மனின் கேமரா. சோழர் கதை, அமெரிக்க ரிசர்ச் சென்டர்... என சுழன்று சுழன்று மிரட்டுகிறது. ஹிமேஷ் ரேஷ்மியாவின் இசையில் 'முகுந்தா முகுந்தா' பாடல் மனசுக்குள் கற்கண்டு. தேவிஸ்ரீ பிரசாத், பின்னணி இசை மூலம் முன்னணிக்கு வருகிறார்.

இதுவரை தமிழ் சினிமாவில் கண்டிராத சுனாமி பிரளயம் திகைக்க வைக்கிறது. கிராஃபிக்ஸின் உதவியோடு ஹாலிவுட் பட ரேஞ்சுக்கு உழைத்திருக்கிறார்கள். படத்தின் இறுதியில் கமலின் மேக்கப் ரகசியம் வெளிப்படும்போது இதயத்தில் சந்தோஷம் சில்லிடுகிறது.

திரைக்கதையிலும், காட்சி நேர்த்தியிலும் காட்டியிருக்கும் அக்கறையைக் கதையிலும் காட்டியிருக்கலாம். முஸ்லிம் இளைஞன், குங்ஃபூ மாஸ்டர் பாத்திரங்கள் கதையோடு ஒட்டாதிருப்பது குறைதான்.

விஞ்ஞானத்தையும் - மெய்ஞானத்தையும் இணைத்து, ஆங்கிலப் பட விறுவிறுப்போடு திரைக்கதையை நகர்த்தியிருக்கும் கமலுக்காக, தமிழன் என்கிற வகையில் ஒவ்வொருவரும் பெருமைப் படலாம்.

யோடு கடலுக்குள் மூழ்கடிக்கப்படுகிறார் 'ரங்கராஜ நம்பி' கமல். இருபத்தோராம் நூற்றாண்டில், உலகத்தையே அழிக்கவல்ல 'பயோ வெப்பன்', தீயசக்திகளின் கையில் கிடைத்துவிடக்கூடாது என்பதற்காகப் போராடுகிறார் 'விஞ்ஞானி கோவிந்த்' கமல். பன்னிரண்டையும், இருபத்தொன்றையும் முடிச்சுப் போட்டுப் படத்தை முடித்திருப்பது தான் பாராட்டத்தக்க, கமலின் திரைக்கதை உத்தி!

இப்படியொரு திரைக்கதையைப் படமாக்க முன்வந்திருக்கும் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமாருக்கு ஸ்பெஷல் பாராட்டுகள். அதுவும் சோழர் காலத்துக் கதையை ஹாலிவுட்டுக்கு இணையாகப் படமாக்கி இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

கமலின் பத்து வேடங்களில், நம் மனத்தைவிட்டு அகல மறுப்பது ரங்கராஜ நம்பியாக வரும் கமல்தான். அவரது டயலாக் டெலிவரியாகட்டும், அடிபடும்போது முனகுவதாகட்டும், ஓம் நமோ நாராயணா... என முழங்குவதாகட்டும், இன்னும் கொஞ்ச நேரம் பார்க்கமாட்டோமா என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விடுகிறார். தமிழ் சினிமாவின் ஹாலிவுட் லுக் வில்லன் 'ஃப்ளெட்சர்' கமல். ஹெலிகாப்டரிலிருந்து அடுக்குமாடி கட்டடம், அங்கிருந்து கார் என்று பரபரவென்று அவர் தாவும் காட்சிகளில் மனசுக்குள் தீ பற்றிக் கொள்கிறது. புலனாய்வு அதிகாரி 'பலராம் நாயுடு' கமல் பேசும் வசனங்கள், அக்மார்க் முத்திரை குத்தப்பட்ட நகைச்சுவை. ''அழகிய சிங்கர் என்றால் யார் மடோனாவா?'' என்று அவர் அடிக்கும் லூட்டியில் தியேட்டர் வெடித்துச் சிரிக்கிறது. கிருஷ்ணவேணி பாட்டியாக வரும் கமலின் பாத்திரம் மனிதநேயத்தின் உச்சம். சுனாமியில் இறந்தவனை, தன் மகன் என மடியில் அள்ளிப் போட்டு அழுகையில், நமக்கும் மனசு கனமாகிறது. எட்டடி உயரத்தில் கலிஃபுல்லா கான், மணல் திருட்டை எதிர்க்கும் பூவராகன்... என மாறி மாறி கமலால் மட்டுமே நடிக்கமுடிவது நம்ப வேண்டிய ஆச்சர்யம்.

பத்து கமல்களுக்கு ஈடாக நடித்திருக்கிறார் அசின். அவர் 'பெருமாளே... பெருமாளே...' எனப் பதறும் காட்சிகளில் ரசிக்க வைக்கிறார். 'ஏ' கிளாஸ் வில்லியாக மல்லிகாஷெராவத். அவர் யானை தாக்கி இறப்பது பரிதாபம். பதினோராவது அவதாரம் என்று சொல்லும் அளவுக்கு உழைத்



ஆனால், இந்த இரண்டையும் இணைக்கும் உயிர்ச்சரடு மனிதநேயம் தான் என்பதை ரசிகர்கள் இலகுவாகப் புரிந்து கொள்ளவேண்டாமா? ''கமல் என்ன சொல்ல வர்றார்?'' என்று படம் பார்த்த பிரமிப்பினூடேயும் அவர்களைக் கொஞ்சம் குழப்பத்துடன் கேட்க வைத்திருப்பது மேலும் குறை என்றாலும், கமல் பிராண்ட் குறை!

- கதிர்பாரதி



கல்கி



2008 ஜூன் 29
ஸர்வதாரி ஆனி 15
மலர் : 66
இதழ் : 48

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா


- பாரதியார்

கடலூர் மாநாடு - கடலளவு ஏமாற்றம்!

கடலூரில் தி.மு.க. பெண்கள் அணியினரின் குத்தாட்டம் நடைபெற்ற அதே நேரத்தில், புதுவையில் மதுக்கடைகளில் ஆண்கள் கூட்டம் அலை மோதியிருக்கிறது! வழக்கத்துக்கதிக மான இக்கூட்டம், மகளிரணி மாநாடுக்கு வந்த பெண்களின் துணைவர்கள் கூட்டம் என்று ஆதாரபூர்வமான செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்கு மேலாக, தி.மு.க. மகளிர் அணி மாநாடு எதையாவது சாதித்ததா என்று பார்த்தால், நமக்கு ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது!

கனிமொழி, தமிழச்சி போன்றோர் தி.மு.க.வில் முக்கிய பொறுப்பு ஏற்ற பின், புதுவெள்ளம் பாய்ந்து, புதிய சிந்தனைகளும் செயல்திட்டங்களும் பிறக்கும் என்று ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. அந்த எதிர்பார்ப்புக்கு மாறாக, கடலூர் மாநாடு, கலைஞர் புகழ் பாடுதல், எதிர்க்கட்சியினரைத் தாக்குதல், பெண்களுக்கு முப்பத்து மூன்று சதவிகித இட ஒதுக்கீடு கோருதல், இறைநம்பிக்கையை ஏளனம் செய்தல், ஹிந்து மதக் கோட்பாடுகளைத் திரித்துப் பேசுதல் போன்ற வழக்கமான தி.மு.க. ஃபார்முலாவிலேயே அரங்கேறி முடிந்துள்ளது.

ஒரே கேஸ் சிலிண்டர் வைத்துள்ளவர்களுக்கு, அதன் விலையில் முப்பது ரூபாய் தள்ளுபடி அறிவித்திருப்பது அநீதி. வேறு எரிபொருளுக்கே வழியில்லாத நிலையில், எத்தனையோ ஏழை, நடுத்தர வர்க்கத்தினர் வயிற்றை, வாயைக் கட்டி இரண்





டாவது சிலிண்டருக்கு டெபாஸிட் கட்டிப் பெறுகின்றனர். இவர்களுக்குச் சலுகை மறுக்கப்படுகிறது!

ஒரு முக்கிய கட்சியின் பெண்கள் அணி, கையில் எடுக்கக் கூடியவையாக இன்று அனேக விஷயங்கள் தமிழ்நாட்டில் உள்ளன:

பெண் கல்வி, பெண் சிசுக் கொலை, பெண்களை இழிவுபடுத்தும் கலாசார சீரழிவு, இதனைத் தூண்டும் ஊடகங்கள், பெண்களுக்குச் சட்டம் குறித்த விழிப்புணர்வு, பெண் வாழ்வில் பெரும் சுமையாக அழுத்தும் குடிநீர்ப் பிரச்னை... என்று பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். இவற்றுள் எது குறித்தும் ஆக்கபூர்வமான விவாதங்கள் நடக்கவில்லை; செயல்திட்டங்கள் வகுக்கப்படவில்லை.

மதுக்கடைகளைத் திறந்து வைத்து, தமிழகப் பெண்களின் வாழ்க்கையைச் சீரழித்து வரும் தி.மு.க. அரசுக்கு, மகளிர் அணியினரே சிந்தித்து மாற்று வருமானத்துக்கும் சிக்கன நடவடிக்கைகளுக்கும் ஆலோசனை வழங்கியிருக்கலாம்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் அரசியல் மயமாவதையும் அரசியல் கட்சிகளின் பிடிக்குள் சிக்குவதையும் எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கலாம். அக்குழுவினரை எச்சரித்து, கட்சி நிர்ப்பந்தங்களுக்குப் பணியாமல் இயங்க, துணிவூட்டியிருக்கலாம். இவற்றையெல்லாம் கடலூர் மாநாட்டில் செய்திருந்தால், தமிழ்நாடே புத்துணர்ச்சி பெற்றிருக்கும்.

இதற்கெல்லாம் பதிலாக, கனிமொழியுடன், கருணாநிதி குடும்பத்தின் அழகிரி பிரிவையும் அரசியலில் அசைக்க முடியாமல் அமர்த்தும் முயற்சியாக மட்டுமே கடலூர் மாநாடு நடந்துள்ளது. அதற்கு ஸ்டாலின் குடும்பத்தினர் வராமல் போனது, கட்சியில் நிலவும் குடும்பப் பிணக்கைப் பட்டவர்த்தனமாக்கியிருக்கிறது.

மொத்தத்தில், கடலூர் மாநாடு ஏமாற்றம் அளித்ததுடன் தி.மு.க.வின் எதிர்காலம் குறித்து, கேள்வியும் எழுப்பியிருக்கிறது! கவலைக்குரிய அக்கேள்வியில் தமிழகத்தின் எதிர்காலமும் சிக்கியிருப்பது வருத்தத்துக்குரிய உண்மை! ●

பாட்டிலில் 'சடலம்'!

பெரிய குக்கரில் காய்கறி, அரிசி வேக வைத்துப் பார்த்திருக்கிறோம். இறந்த உடலை வேக வைத்து அடக்கம் செய்யும் முறை தெரியுமா? ஆம். அல்கலின் ஹைட்ராலிஸிஸ் எனும் புது முறையில் அப்படித்தான்! அதிர்ச்சியாக இருக்கிறதா?



பதினாறு வருடங்களுக்கு முன்பிருந்தே அமெரிக்காவில் இறந்த மிருகங்களை அப்புறப்படுத்த, இம்முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. குக்கரைப் போலிருக்கும் பெரிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சிலிண்டரில் இறந்த உடலைப் போட்டு 150 டிகிரி செல்ஷியஸ் வெப்பத்தில், (ஒரு சதுர அங்குலத்துக்கு 60 பவுண்டு அழுத்தம்) வைக்கப்படுகிறது.

இம்முறையில் உடல் சிதைந்து பிரவுன் நிறத்தில் திரவமாகி அடித் தேக்கம் (ரெஸிட்யூ) வெளியேறுகிறது. மொத்தத்தில் 50 மி.லி. பாட்டிலில் நாம் அடக்கம்! இதனுடன் எலும்புப் பொடியும் கிடைக்கிறது!

உடலை எரிக்கும்போதோ அடக்கம் செய்யும்போதோ கிடைக்கும் எலும்பு போல், இம்முறையிலும் எலும்புகளை வேண்டுவோருக்குப் பொட்டலம் போட்டுப் பொடியாகக் கொடுப்பார்கள்!

காஃபி போன்று இருக்கும் இத்திரவம், மோட்டார் ஆயிலின் அடர்த்தியுடனும் அடர்ந்த அம்மோனியா வாடையுடனும் இருக்குமாம்.

சுற்றுப்புறச் சூழலைக் கெடுக்கும் புகை இல்லை; அடக்கம் செய்ய இடம் தேவையில்லை; சிறு பாட்டில் திரவத்தை உறவினர் கண்ணில் காண்பித்து விட்டு, சாக்கடையில் கொட்டிவிடலாம்!

அமெரிக்காவில் இரண்டு மருத்துவ மையங்கள் மட்டுமே இம்முறையைக் கடைப்பிடிக்கின்றன. மின்னஸோடா மாநில 81 வயது பெண் ஆளுநர், தம்முடைய சவ அடக்கமும் இம்முறையிலேயே நடக்க வேண்டும் என்கிறார்.

அதற்கு அவர் சொல்லும் காரணங்கள், சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதைத் தவிர்க்கலாம் என்பதுதான். ஆனாலும், சில மத அமைப்புகள் இதனைக் கடுமையாக எதிர்த்து வருகின்றன. எதிர் காலத்தில் எல்லோரும் இம்முறைக்கு மாறித்தான் ஆகவேண்டும் என்கிறார்கள்!

– லக்ஷ்மி மோகன்

உங்கள் வளத்திற்கு

BLB
PLEDGED TO ETHICS

வழிகாட்டும்

அற்புதமான மனைகள்



சென்னைக்கு மிக அருகில் உள்ள BLBயின் இந்த மனைப் பிரிவுகள் இலாபகரமான முதலீடாகும் என்பதில் சந்கேமில்லை

கடந்த 10 ஆண்டுகளாக வளர்ச்சி வாய்ப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில், அரசு அனுமதிப் பெற்ற மனைகளை ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கு வழங்கி அவர்கள் வாழ்வில் வளமையையும் மகிழ்ச்சியையும் அளித்துள்ளோம். எங்கள் கொள்கை அடிப்படையிலான அணுகுமுறை, தொழில்முறை செயல்பாடு மற்றும் தனிப்பட்ட சேவை ஆகியவை இத்துறையில் எங்களுக்கு மிகவும் நம்பகமான பெயரை பெற்றுத் தந்துள்ளன. இப்போது எங்கள் தற்போதைய திட்டங்கள் வளமைக்கான உத்தரவாதத்துடன் சிறந்த பலன்களை உங்களுக்கு அளிக்கும் என உறுதியளிக்கிறோம்.

ஸ்ரீ நரசிம்மா நகர்

(CMDA Approval No. 37/2007)

ஆவடி/பட்டாபிராம்/திருநின்றவூர்/பூந்தமல்லி ஆகிய இடங்களிலிருந்து செல்லும் வசதி உண்டு.

ஸ்ரீ ஹயக்ரீவா நகர்

(DTCP Approval No. 117/2007)

மஹிந்திரா வேர்ல்ட் சிட்டி மற்றும் GST ரோடு (NH) அருகில்

சிறப்பம்சங்கள்: ✓ முழுவதும் தார் சாலைகள் ✓ சுற்றிலும் வேலியிடப்பட்டது ✓ உடனே வீடு கட்டலாம் ✓ அருகிலேயே வீடுகள் ✓ சுவையான நிலத்தடி நீர் ✓ சுலபமாக சென்று வர ரயில் மற்றும் பஸ் வசதி ✓ தெளிவான பத்திரங்கள் ✓ 5 ஆண்டு காலம் பாதுகாப்பு சேவை.

ஸ்ரீமத் ராமானுஜர் டவுன்

(DTCP Approval No. 151/2006)

வண்டலூர் மற்றும் OMR-க்கு இடையில்

ஸ்ரீ பத்மநாபா அவன்யூ

(DTCP Approval No. 188/2004)

காஞ்சிபுரம் டவுன்

சுபம். சீக்கிரம்.

விலையேற்றத்திற்கு முன்பாக மனையைப் பார்வையிட்டு தேர்வு செய்யவும்.

இலவசமாக மனையை பார்வையிட அழைக்கவும் :

28345104 / 05 / 06

IDBI HOMEFINANCE LTD.

BLB ESTATES PRIVATE LIMITED

"SREE AUDISESHA BHAVAN", New No. 21, Chinnaiah Street, (Off. G.N. Chetty Road & Thirumalai Pillai Road),
T.Nagar, Chennai - 600 017. E-Mail: blbestmail@vsnl.net Website: www.blbestates.com



அமரர் கல்கி நினைவு அறக்கட்டளை

ஏழை மாணவ மணிகளுக்கு உதவி: ரூ.3,00,000



சென்ற ஆண்டைவிட நடப்பு கல்வி ஆண்டுக்கு (2008 - 2009) ரூ.15,500 அதிகரித்து, ரூ.3,00,500/- உதவித் தொகைகளாக பின் வருமாறு விநியோகமாகும்.

* ஒருவருக்கு ரூ.3,000/- வீதம், எட்டு பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சி மாணவர்களுக்கு ரூ.24,000/-.
* ஒருவருக்கு ரூ.2,000/- வீதம், 65 பட்டப் படிப்பு மாணவர்களுக்கு ரூ.1,30,000/-.
* ஒருவருக்கு ரூ.1,500/- வீதம், 81 மேல்நிலைப்பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ரூ.1,21,500/-.
* ஒருவருக்கு ரூ.5000/- வீதம் சிறப்புக் கல்விப் பயிற்சி தேவைப்படும் ஸ்பாஸ்டிக், டிஸ்லெக்ஸிக், ஆட்டிஸ்டிக் போன்ற பாதிப்புக்கு உட்பட்ட மாணவர்கள் ஐந்து பேருக்கு ரூ.25,000/-.
* இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிகளில் மூன்று மேல்நிலை மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற மாணவ மாணவியர் விண்ணப்பிக்கலாம்.

முக்கிய நிபந்தனைகள் :

- விண்ணப்பங்களை மாணவர்கள் தங்கள் கைப்பட எழுத வேண்டும். தட்டச்சு, கம்ப்யூட்டர் கடிதங்கள் நிராகரிக்கப்படும். பார்வையற்ற மாணவர்கள், பிறர் எழுதித் தர கைநாட்டு பதிக்கலாம். சிறப்புக் கல்விப் பயிற்சி தேவைப்படும் (ஸ்பாஸ்டிக் போன்ற) மாணவர்கள் சார்பில் பெற்றோர் விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றை உறுதி செய்து, கல்வி நிலையத்தின் முதல்வருடைய முத்திரை, கையெழுத்துடன் சான்றிதழ் தேவை.

(அ) அரசு அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையத்தில் சேர்ந்து படிக்க அனுமதி பெற்றுள்ளது குறித்து (தாற்காலிக அனுமதி செல்லாது).

(ஆ) படிப்பில் சிறந்து விளங்கி, பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர் / மாணவி என உறுதியளித்து.

(இ) உடல் ஊனமுற்றவர் எனில் அது பற்றிய விவரம்.

(ஈ) சென்ற ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் நகல் - முதல்வரின் முத்திரை, கையெழுத்துடன்.

தபால் மூலம் மட்டுமே விண்ணப்பங்களை அனுப்பவும். கூரியர் கூடாது. நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தேவையற்ற சான்றிதழ்களை அனுப்புதல் விண்ணப்பதாரருக்குப் பின்னடைவாகி விடும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும். கடிதப் போக்குவரத்து ஏதும் கிடையாது. சான்றிதழ்கள் / நகல்கள் திருப்பி அனுப்ப இயலாது.

உதவித் தொகை பெற தகுதி உடையவர்களைத் தேர்வு செய்வதில் அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,
புது எண் 14, நான்காவது பிரதான சாலை,
கஸ்தூர்பா நகர், அடையாறு, சென்னை-600 020

விண்ணப்பங்கள் வந்து சேர கடைசி தேதி : ஜூலை 31, 2008

எகிறுவாரா யெதியூரப்பா?

கர்நாடகத்தில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியதன் மூலம் முதன்முறையாக தென்னிந்தியாவில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்திருக்கிறது பா.ஜ.க. இதற் கிடையில் ஒக்கேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேறுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இது குறித்தும் இதர பிரச்னைகள் பற்றியும் நம்மோடு பேசினார் தமிழக பா.ஜ.க. தலைவர் இல.கணேசன்.



''ஜன நாயகத்தில், மக்களின் பிரச்னையை அரசாங்கத்தின் கவனத்துக்கு எடுத்துச் செல்வதும், அரசாங்கம் செய்கிற தவறுகளைச் சுட்டிக்காட்டுவதும்தான் பொறுப்பான எதிர்க்கட்சியின் கடமை. அதை நாங்கள் சிறப்பாகவே செய்து கொண்டிருக்கிறோம். மத்தியில் ஆள்கிற காங்கிரஸ் கூட்டணி அரசு, எதிர்க் கட்சிகள் சொல்லும் ,ஆக்கபூர்வமான யோசனைகளை ஏற்று, அவற்றைச் செயல்படுத்துவதில்லை'' என்று ஆரம்பித்தார் இல.கணேசன்.

சரி! உங்களுடைய ஆக்கபூர்வமான யோசனைகள்தான் என்ன?

''விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று பாராளுமன்றத்திலும் பா.ஜ.க. உறுப்பினர்கள் வலியுறுத்திப் பேசினார்கள். ஆனால், சிதம்பரம், 'ராகுல் காந்தி சொன்னதால் விவசாயக் கடன்களை ரத்து செய்கிறோம்' என்று கூறினார். காங்கிரஸ் எல்லா விஷயங்களையும் அரசியல் நோக்கத்துடன்தான் செய்துகொண்டிருக்கிறது. சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களிலும் ஓட வேண்டிய அவசியமுள்ள அரசாங்கக் கார்கள் எவை என்று கண்டறிந்து, அவற்றுக்குத் தனி வண்ணம் பூசி விடுங்கள். மற்ற கார்கள் எல்லாம் விடுமுறை நாட்களில் ஓடினால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுங்கள். அப்புறம் கிழக்குக் கடற்கரை சாலையிலும், திரை அரங்குகளிலும், ஷாப்பிங் சென்டர்களிலும், நகை, புடைவைக் கடைகளிலும் விடுமுறை நாட்களில் அரசாங்கக் கார்கள் கண்ணில் படாதல்லவா? அரசாங்கம் இதைச் செயல்படுத்தத் துணியுமா? குஜராத்தில் நரேந்திர மோடி, கடந்த பல வருடங்களாக வரிகள் எதையும் உயர்த்தாமல் அரசாங்க வரி வருவாயை மட்டும் அதிகரித்திருக்கிறாரே! அது எப்படி?

ஆண்டுதோறும் பெட்ரோல் விற்பனை வரி மூலமாக, மத்திய அரசுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. மத்திய அரசு தன் வருவாயைக் குறைத்துக் கொள்ளத் தயாராக இல்லை; ஆனால், சாதாரண மக்களை மட்டும் விலை உயர்

வால் திண்டாட விடுவது என்ன நியாயம்? வாஜ்பாய் அரசு உருவாக்கிய ஆயில் பூல் அக்கவுன்டை அடாவடியாக அரசு செலவுக்கு எடுத்துக்கொண்டது என்ன நியாயம்!''

கர்நாடகத்தில் யெடியூரப்பா முதலமைச்சராகி இருக்கிறார். இனியாவது ஒக்கேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேறுமா?

''கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்நாடு, கர்நாடகத்தின் கருத்தைக் கேட்க வேண்டிய அவசியமில்லை. ஜீரோ பாயின்டிலிருந்து ஒன்பது கி.மீ. தள்ளி, தமிழ்நாட்டுப் பக்கம் உள்ள கரையிலிருந்து நாம் தண்ணீர் எடுக்கிறோம். அதைக் கேள்வி கேட்க கர்நாடகத்துக்கு உரிமை இருக்கிறது என்றால், நாளைக்கு நாம் ஸ்ரீரங்கத்தில் தண்ணீர் எடுத்தால்கூட அவர்களுக்குக் கேள்வி கேட்கும் உரிமை இருப்பதாக ஆகிவிடும். தேர்தல் முடிந்து புதிய முதலமைச்சர் வந்தவுடன் பேசி முடிவு எடுக்கலாம் என்று தமிழக முதலமைச்சர் தானே சொன்னார்? கர்நாடக முதலமைச்சரும் பேச்சு வார்த்தைக்குத் தயார் என்று சொல்லியிருக்கிறார். அவருக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுத்தால், பலரிடமும் பேசி உண்மை நிலை என்னவென்று அவர் தெரிந்து கொள்ள முடியும். அதன் பிறகு தமிழக முதல்வர், யெடியூரப்பாவுடன் பேச்சு வார்த்தை நடத்தினால், கர்நாடகம், ஒக்கேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்துக்குக் குறுக்கே நிற்காது.''

ஒக்கேனக்கல் திட்டம் பற்றிய உண்மை நிலையை யெடியூரப்பாவுக்கு எடுத்துச் சொல்வீர்களா?

''யெடியூரப்பாவைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். காஷ்மீர் முதல், கன்னியாகுமரி வரை ஒரே நாடு என்ற தேசிய சிந்தனை கொண்டவர் அவர். தேசியவாதியான அவரைப் பற்றிய தவறான கருத்தைப் போக்குவதற்காக அவரைச்





நாளைக்கு நாம் ஸ்ரீரங்கத்தில் தண்ணீர் எடுத்தால் கூட அவர்களுக்குக் கேள்வி கேட்கும் உரிமையிருப்பதாக ஆகிவிடும்

சந்தித்து உண்மை நிலையை எடுத்துச் சொல்வேன்.''

தி.மு.க. மகளிர் மாநாட்டில், ஜெயலலிதாவை விமர்சிக்கும்போது, மோடியையும் சேர்த்து கனிமொழி விமர்சித்திருக்கிறாரே?

''வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இன்று குஜராத் முதல் இடத்தில் இருப்பது அனைவருக்கும் தெரியும். அதுபோல தமிழ்நாடும் வளம் கொழிக்க வேண்டும். அப்படி இல்லாமல் நரேந்திர மோடி பற்றிப் பொய்யான பிரசாரங்கள் மக்கள் மத்தியில் எடுபடாது. புதிதாக அரசியலுக்கு வந்தவர்கள் விவரம் தெரியாமல் பேசியிருக்கிறார்கள். ஆனாலும், கனிமொழி குறிப்பிட்டது பொய்யான கருத்து; தவறான கருத்து.''

தி.மு.க. கூட்டணியிலிருந்து பா.ம.க. விலக்கப்பட்டுள்ளதால் தமிழக அரசியலிலும், தேசிய அளவிலும் விளைவுகள் எப்படி இருக்கும்?

''இதனால் ஆட்சிக்கு இப்போது ஆபத்து ஏதும் இல்லை. ஏற்கெனவே, காங்கிரஸ் தலைமைக்குக் கட்டுப்பட்டு நடப்பவர் என்ற பெயர், தமிழக முதலமைச்சருக்கு உள்ள நிலையில், காங்கிரஸின் கட்டுப்பாடு அதிகரிக்கும். அதே சமயம், காங்கிரஸ் கட்சி, மத்திய அரசில் தி.மு.க.வைச் சார்ந்து இருக்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். ஆகவே, பா.ம.க. வெளியேற்றம் மாநிலத்திலோ, மத்தியிலோ பெரிய அளவுக்கு மாற்றம் எதையும் ஏற்படுத்தாது.''

பா.ஜ.க. ஆட்சி செய்யும் மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில், ஆட்சிக்கு எதிராக மக்கள் போராடுகிறார்களே...?

''பொதுவாகவே ஐந்தாண்டுகள் ஆட்சி செய்யும் எந்த ஒரு கட்சியின் மீதும் மக்களுக்கு ஒருவித அதிருப்தி இருக்கும். ஆனால், ராஜஸ்தான், ம.பி., சதிஸ்கர் போன்ற மாநிலங்களில் மக்கள் தற்போதைய ஆட்சியை, முந்தைய காங்கிரஸ் ஆட்சியுடன் ஒப்பிட்டுப் பார்த்து, பா.ஜ.க.வைப் பாராட்டுகிறார்கள்.

ஆன்டி-இன்கம்பன்சி என்று சொல்லப்படும் ஆளும் கட்சிக்கு எதிரான அதிருப்தி குறித்து அத்வானி கூறிய கருத்து இது: மக்களின் அதிருப்தி என்பது ஆளும் கட்சிக்கு எதிரானதாகத்தான் இருக்கும் என்பது கட்டாயமில்லை; மக்களின் அதிருப்தி உள்ளூர் எம்.எல்.ஏ. அல்லது எம்.பி. மீதாகக்கூட இருக்கலாம். கவனமாக இருந்து அதைக் கண்டறிந்து களைந்து விட்டால், மக்களுடைய ஆதரவு கிடைத்து விடும். குஜராத்தில் அந்த அணுகுமுறை வெற்றி பெற்றது. அதை மற்ற இடங்களிலும் முயற்சி செய்ய இருக்கிறோம்.

சந்திப்பு : **மௌலி**

படங்கள்: **ஸ்ரீஹரி**



ஆண்களுக்கும் ஒரு தொடர்!

நான்கரை ஆண்டுகளைத் தாண்டி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது சன் டீ.வியில் 'கோலங்கள்' தொடர். அதன் இயக்குநர் திருச்செல்வத்திடம் நாம் கேட்ட சூடான கேள்விகளும், அவர் அளித்த பதில்களும்...

டீ.வியை ஆன் செய்தாலே ஒரே ஒப்பாரியாக இருக்கிறதே! தொடர்கள் என்றாலே அழுகை என்றாகிவிட்டது உறுத்தவில்லையா?

உங்கள் கேள்வியில் உள்ள உண்மை புரிகிறது. சில விஷயங்களை பேசித்தான் ஆக வேண்டும். எல்லா டீ.வி.லயும் 'தொடர்கள்' வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் இருக்கிறதோ இல்லையோ, சின்னத்திரை தயாரிப்பாளர்களிடமும் இயக்குநர்களிடமும் இருக்கிறது. தொடர்கள் ஒன்றையொன்று காப்பியடிப்பதால் எல்லா தொடர்களும் ஒரே பிம்பத்தைத் தருகின்றன!

கோலங்கள் தொடரில் நீங்கள் தொல்காப்பியன் என்ற கேரக்டரில் நடிக்கிறீர்கள். உங்கள் கேரக்டர் அநியாயத்துக்குப் பேசுகிறதே...!

வேறு வழியில்லை. அவ்வளவுதான்!

பெண் உணர்வுகளை, உங்கள் தொடர் முழுமையாக பிரதிபலித்துவிட்டதா?

நிச்சயமாக! பெண்களின் எல்லா விதமான உணர்வுகளையும் வெளிக்கொணர முயல்கிறேன்! அதற்கு எனக்கு வரும் கடிதங்களே சாட்சி!

பெண்கள் பிரச்னையை முன் வைக்காமல் ஒரு தொடர்கூட எடுக்க முடியாதா?

ஏன் எடுக்க முடியாது... நன்றாக எடுக்கலாம். தயாரிக்க ஆட்கள் முன் வர வேண்டும். எனக்குங்கூட ஒரு ஆசையுண்டு! ஆண் உணர்வுகளை மையப் படுத்தி ஒரு தொடரை இயக்க!

பெரும்பாலான தொடர்களில் கள்ளக் காதல், வில்லித்தன விஷயங்கள் அதிகம் பேசப்படுகின்றன . நமது கலாசாரம் கெட்டுச் சீரழிந்து கொண்டிருக்கும் நிலையில் இத்தொடர்களின் இது போன்ற பிரதிபலிப்புகள் பற்றி...

அப்படிச் சொல்ல முடியாது! நடக்கின்ற விஷயங்களை அப்படியே தொடர்களில் சொல்வது என்பது, ஊக்கப்படுத்துவது என்று அர்த்தம் கிடையாது.


டாக் ஷோக்கள் பக்கம் 'மக்கள்' திரும்பி விட்டார்கள். இதற்கு மலினமான தொடர்கள் தான் காரணம் என்று சொல்லலாமா?

அப்படிச் சொல்ல முடியாது! இது ஒரு ட்ரெண்ட்! அவ்வளவுதான்! அரை மணி நேரம் சுவையூட்டக்கூடிய எந்த நிகழ்ச்சியையும் பார்க்க, மக்கள் தயாராக இருக்கிறார்கள்!

மினிபேட்டி

செய்தியும் சித்திரமும் : மாசி

10



திருவடி தொடங்கி திருமுடி ஈறாக எம் பெருமானின் திவ்ய திருமேனி முழுவதுமே லாவண்யமும் சௌந்தர்யமும் நிரம்பியதுதான். ஆனால், அவனுடைய கண்களின் அழகுக்கு அடியார் மனத்திலும் சரி, அவனைப் புகழ்ந்து அவர்கள் பாடும் பாக்களிலும் சரி, தனியானதொரு இடம் உண்டு. அடுத்து நாம் தேடி வந்துள்ள கண்ணன், செந்தாமரைக் கண்ணன் என்ற பெயராலேயே அழைக்கப்படுகிறான்! அரவிந்தலோசனன் என்பது இவனது வடமொழி திருநாமம். இரட்டைத் திருப்பதி என்று கொண்டாடப்படுகிற திருத்தொலை வில்லிமங்கலம், இவனது திவ்ய தேசம். மூலமூர்த்தி, அரவிந்தலோசனன் என்றும் உத்ஸவ பெருமாள், செந்தாமரைக்கண்ணன் என்றும் பெயர் ஏற்றிருக்



கண்ணனைத் தேடி...

சிந்தை கொள்ளை கொள்ளும் செந்தாமரைக் கண்ணன்

கிறார்கள்.

இந்த திருத்தொலைவில்லிமங்கல திவ்ய தேசம் நவதிருப்பதிகளுள் ஒன்று - இரு திருப்பதிகளாகக் கணக்கில் கொள்ளப் படுகிறது. நவதிருப்பதி திவ்ய தேசங்கள், ஆழ்வார்த்திருநகரி என்கிற திருக்குருகூர் திவ்ய தேசத்தைச் சுற்றி, அருகருகே இருக் கின்றன. இவற்றுள், தாமிரபரணி ஆற்றுக்கு வடகரையிலே ஆறு திவ்ய தேசங்கள் அமைந்துள்ளன. தென்கரையில் உள்ளவை மூன்று. வடகரை க்ஷேத்திரமான திருத் தொலைவில்லிமங்கலம் எவ்வாறு இரட்டைத் திருப்பதி அந்தஸ்தை அடைந் தது என்பது சுவாரஸ்யமான கதை:

இங்கே ஆதியில் இருந்த எம்பெரு மான் ஸ்ரீநிவாஸன் என்கிற திருநா மத்துடன் கூடியவன். இவனது சன்னிதி இந்தத் திருத்தொலை வில்லிமங்கலம் ஆலயத்தின் தெற் குப் பக்கத்திலே உள்ளது.

முனிவர் ஒருவர் வட திசையி லிருந்து இங்கே வந்து தவமியற்றி னார். அவர் தமது ஹோமத்தை முடித்து ஹவிர்பாகத்தை (அதாவது புரோடாசத்தை) தேவதைகளுக்கு வழங்கினார். அப்படி வழங்கு வதற்கு இந்த திவ்யதேசத்து எம்பெருமானே காரணமாயினான் என்பதால், 'தேவர்பிரான்' என்று அவனது பெயர் விளங்கலாயிற்று. (தேவர் பிரான் - தேவர்களுக்கு உதவுகிறவன்) - ஸ்ரீநிவாஸ பெருமாளின் உத்ஸவர் தேவர் பிரான் என்ற இந்தத் திருநாமத்தை ஏற்றான்.

இந்த முனிவர் மிக விரும்பி, தேவர் பிரானுக்கும் மூலவரான ஸ்ரீநிவாஸ பெரு மாளுக்கும் புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். நிறைய தாமரை மலர்களைப் பறித்து வந்து, மாலையாகத் தொடுத்து சமர்ப்பித்து, வணங்கி வந்தார். 'நித்யப்படி இவர் புஷ்பங்களை எங்கேயிருந்து கொண்டு வருகிறார்' என்று வியந்து, பெரு மாளே ஒருநாள் அவரைப் பின்தொடர்ந்து போனான். ஆற்றங்கரைக்குப் பக்கத்தி



விருந்த தோட்டத்திலிருந்து அவர் புஷ்பங்களைப் பறிப்பதைப் பார்த்தான். அவர் பூ பறிக்கும் அழகையும் தொடுக்கும் அழகையும் பார்த்துக்கொண்டே பெருமான் நின்றான்! சட்டென்று திரும்பிய முனிவர், சாக்ஷாத் எம்பெருமானை ஸேவித்தார். 'நான் பறித்ததோ தாமரை மலர்கள். நின்று அதைப் பார்த்துக்கொண்டிருப்பவனோ அந்தத் தாமரைகளையே கண்களாகக் கொண்டவன். என்ன அழகான விந்தை!' என்று வியந்தவர், உடனே பிரார்த்தித்தார்: "இப்படியே நீ செந்தாமரைக் கண்ணனாகவே இங்கே எப்போதும் ஸேவை சாதிக்க வேண்டும்!"

தாமரைப் பிரியனான எம்பெருமானும் இந்த வேண்டுகோளை ஏற்றான். தேவர் பிரானே தனது ஆலயத்துக்கு வெகு அருகே மற்றோர் திருமேனியுடன் திருக்கோலத்துடன் அரவிந்தலோசனனாக நிலைத்தான்.

இந்த இரண்டு எம்பெருமான்களுமே நம்மாழ்வாருக்கு மிகவும் நெருக்கமானவர்கள். ஆழ்வார், தமது ஆறாம் பத்து ஐந்தாம் திருவாய்மொழியில், கடைசி பாசுரத்தில் சொல்கிறார்:

சிந்தையாலும் சொல்லாலும்
செய்கையினாலும்
தேவபிரானையே தந்தை
தாயென்றடைந்த
வண்குருகூர் அவர் சடகோபன்

'மனம், மொழி, மெய் என்கிற முக்கரணங்களினாலும் **அவனை** அடைந்த அற்புதத்தைப் பத்து பாசுரங்களில் பாடினேன்' என்கிறார்!

ஆழ்வார் பிறந்தபோதே ஜாதகத்தைக் கணித்த ஜோஸ்யக்காரர்கள் அவருடைய பெற்றோருக்கு எச்சரிக்கை செய்தார்களாம். - "இந்தப் பெண் குழந்தை உங்கள் குழந்தையாக இருக்க வேண்டுமென்றால், தொலைவில்லிமங்கலத்துப் பெருமானை ஸேவை பண்ணி வைக்க வேண்டாம். அப்படி ஸேவித்தால், இந்தக் குழந்தை அந்தப் பெருமானுடையதாகிவிடும்!" என்று அச்சுறுத்தியிருக்கிறார்கள்.

ஆழ்வார் எவ்வாறு பெண் குழந்தையாக முடியும் என்று கேட்கலாம். அவர்



ஆணாகப் பிறந்திருந்தாலும் நாயிகா பாவம் என்கிற பெண் பாவனையில் எம்பெருமான் மேல் மாளாத காதல் கொண்டுதான் நிறையப் பாசுரங்களைப் பாடினார். ஆகவே பெண் குழந்தை என்றார்கள்!

இப்படி நம்மிடம் யாரேனும் சொல்லியிருந்தால், குழந்தையை இழக்க நேருமே என்று பயந்து போய், 'இந்த எம்பெருமானின் ஸேவையே வேண்டாம்' என்றல்லவா முடிவு செய்திருப்போம். ஆனால், ஆழ்வாரின் பெற்றோர், 'உன்னைப் போல் பிள்ளை வேண்டும்' என்று எம்பெருமானிடமே வேண்டி அவரைப் பெற்றார்களல்லவா! அதனால், குழந்தையை இங்கே கொண்டுவந்து, தேவர் பிரானையும் அரவிந்தலோசனனையும் ஸேவை பண்ணி வைத்தார்கள். அன்றிலிருந்து ஆழ்வார், பெருமானுக்கென்றே வசப்பட்டுப் போய்விட்டார் அல்லவா! அவர் மனமும் புலன்களும் பெருமானிடத்திலே லயித்துவிட்டதால், அப்படியே கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன. அதிலும் அரவிந்தலோசனன்தான் எப்பேர்ப்பட்ட அழகன். நம் கண்களால் மட்டுமின்றி,

காதுகளாலும் வாயாலும் எல்லாவற்றாலும் பருகி மாளாத அழகன். இந்த அழகை ஆழ்வார் பருகிவிட்டபடியாலேதான் மற்றொரு விஷயத்திலும் அவர் சிந்தை செல்லவில்லை!

நம்மாழ்வார், ஸேனை முதலியாரின் அம்சமாகவே திருக்குருகூரில் பிறந்தார் என்பதைப் பார்த்தோம். அவருடைய அவதார ஸ்தலம் திருக்குருகூர் என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், அந்தத் திருத்தலத்துக்கு மிக அருகிலே, அப்பன் கோயில் என்னுமிடத்தில்தான் அவர் அவதரித்திருக்கிறார். இங்கே கோயில் கொண்டுள்ள ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு, திருவேங்கடத்து அப்பன் என்கிற திருநாமம் விளங்குவதால் ஊருக்கும் அப்பன் கோயில் என்று பெயர். இந்த ஸ்ரீநிவாஸ பெருமாளிடம் வேண்டி பூஜித்தார்கள் நம்மாழ்வாரின் பெற்றோர். இதே திவ்ய தேசத்தில், சிறிய மேடை போன்ற இடத்தில் ஓர் அறையில் அவதரித்தார். இதன் அருகிலே செல்வதற்குக்கூட நம்போல்வருக்கு யோக்யதை கிடையாது. இருந்தாலும், 'வரலாறு ஒன்றில்லையால் வாழ்வினிதால் என்றும் எந்நன்றி செய்தேனா என் நெஞ்சில் திகழ்வதுவே' என்றும் ஆழ்வாரே சாதித்தபடிக்கு, பல இடங்களை எம்பெருமானேதான் நமக்குக் காட்டிக் கொடுக்கிறான்; அவற்றுக்கு நம்மைக் கூட்டியும் செல்கிறான்!

அரவிந்தலோசனன் - செந்தாமரைக் கண்ணன் என்கிற திருநாமங்களுக்கேற்ப, இந்த திவ்ய தேசத்து நாச்சியாரும் கருந்தடங்கண்ணி என்றே திருநாமம் ஏற்றிருக்கிறாள்.

'கருந்தடங்கண்ணி கை தொழுத அந்நாள்
தொடங்கி இந்நாள் தொறும்
இருந்திருந்து அரவிந்த லோசன
என்றென்றே நைந்து இரங்கும்'



✱ இரட்டைத் திருப்பதி

என்று நம்மாழ்வார் பாசுரத்திலும் இடம் பெற்றிருக்கிறாள் தாயார்.

இவ்வூர் தீர்த்தத்துக்கு அச்வினி தீர்த்தம் என்று பெயர். விமானம் குமுத விமானம் - குமுதம் என்றாலும் தாமரைதானே!

நம்மாழ்வாரைக் கொள்ளைகொண்ட இந்தத் திவ்ய தேசத்துக்கு, அத்யயன உத்ஸவத்தில் முக்கிய பங்கு உண்டு. முற்



பல இடங்களை எம்பெருமானேதான் நமக்குக் காட்டிக் கொடுக்கிறான், அவற்றுக்கு நம்மைக் கூட்டியும் செல்கிறான்.

காலத்தில் இவ்வுத்ஸவத்துக்காக, ஆழ்வார்திருநகரியிலிருந்து ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருள்வார் நம்மாழ்வார். மார்கழி மாதத்தில் கிளம்பிச் சென்றால், ஊர் திரும்ப மாசி மாதம் ஆகிவிடும்; திரும்புகையில் இங்கே திருத்தொலைவில்லிமங்கலத்துக்கு எழுந்தருள்வார். சுவாதி, விசாகம், அனுஷம் ஆகிய மூன்று நாட்களில் இங்கே இரட்டைத் திருப்பதிகளில் அத்யயன உத்ஸவம் நடைபெறும். அதன் பிறகே ஆழ்வார்திருநகரிக்குத் திரும்புவார். இப்போது ஸ்ரீரங்கத்திலேயே ஆச்சர்யமான நம்மாழ்வாருடைய விக்ரஹம் பிரதிஷ்டை பண்ணப்பட்டுவிட்டதால், இங்கே ஆழ்வார்திருநகரியில் இருக்கும் ஆழ்வார் அங்கே செல்வது இல்லை. ஆனாலும் அத்யயன உத்ஸவம் ஆழ்வார்திருநகரியிலும் சரி, பழைய மரபையொட்டி நம்மாழ்வார் ஊர் திரும்பும் ஐதீகத்தில் தொலைவில்லிமங்கலத்திலும் சரி - விமரிசையாகவே நடத்தப்படுகின்றன.


இத்திருத்தல இரட்டை எம்பெருமான்களுக்கு, ஆழ்வாருடன் தொடர்புடைய இன்னொரு அழகான சிறப்பும் உண்டு! திருக்குருகூரில் வைகாசி உத்ஸவத்தின்போது நவதிருப்பதி எம்பெருமான்களும் எழுந்தருள்வார்கள் என்பதைப் பார்த்தோம். ஆறாம் திருநாள் அன்று ஆழ்வாரிடத்திலே அவர்கள் பாசுரங்களை ஏற்று, பிரியாவிடை பெற்றுக்கொண்டு திரும்புவார்கள் என்றும் பார்த்தோம். அப்போது இந்த இரட்டைத் திருப்பதி எம்பெருமான்கள் மட்டும் இரட்டைப் பல்லக்கிலே போய் நிற்பார்கள். ஒவ்வொரு திவ்ய தேசத்து எம்பெருமானும் உடனடியாக விடைபெற்றுக்கொள்ள, அடுத்த பெருமாளைப் பாடுவதற்கு ஆழ்வார் தயாராகிவிடுவார். ஆனால், இரட்டைப் பல்லக்கு எம்பெருமான்கள் மட்டும் பாசுரம் பெற்றுக்கொண்டு, சன்னிதித் தெரு முனைவரைக்கும் சென்று, ஆழ்வாரின் கண் பார்வையிலிருந்து மறைகிற வரையில் வேறு எதுவும் நடைபெறாது! அந்தப் பெருமான்களையே பார்த்துக்கொண்டிருந்தபடி பிரியா விடை கொடுப்பார் ஆழ்வார்! அத்தனை தூரம் சிந்தையையும் சொல்லையும் செயலையும் பகவானிடத்திலே விட்டு வைத்திருந்தார்!

நாமும் நமது சிந்தையையும் புலன்களையும் இந்த இரட்டைத் திருப்பதிகளிலே இருத்திவிட முயற்சி செய்து, பிரியா விடை பெற்று அடுத்த திவ்ய தேசம் செல்வோம்.

(தேடுவோம்)

படங்கள் : **ஸ்ரீஹரி**

சித்திரங்கள் : **வேதா**



புரூஸ் லீ கனவு!



• 'சூர்யா' படத்தில் விஜய் சிரஞ்சீவி...

"**சி**னிமாவில் நிறைய பேருக்கு முகமூடிதான் முகமா இருக்கு. முதல் படம் இயக்கறோம்... நம்மைவிட அனுபவம் மிக்கவர்களை டிஸ்கஷனில் சேர்த்துக்கிட்டா, ஸ்பிரிட் நல்லா வருமேன்னு நினைக்க, தமிழ் சினிமா ஜாம்பவான்களை டிஸ்கஷனுக்குக் கூப்பிட்டேன். வந்தவங்க, படத்தோட கதையைத் தவிர மற்ற எல்லாக் கதைகளையும் பேசிவிட்டு, பிரியாணி சாப்பிட்டுட்டுபேசாமப் போனப்பதான் தயாரிப்பாளரா நொந்துபோனேன். பிறகு அனுபவமிக்க உதவி இயக்குநர்கள் கிடைத்ததால்தான் படத்தை நல்லவிதமாகக் கொண்டுவர முடிந்தது'' என்கிறார் ஸ்டன்ட் மாஸ்டர் ஜாக்குவார் தங்கம்.

'சூர்யா' படத்தின் மூலம் இயக்குநர் அவதாரமெடுத்திருக்கிறார். தமது மகன் விஜய் சிரஞ்சீவியை ஹீரோவாகக் கொண்டு, களத்தில் குதித்திருக்கும் அவர், நம்மோடு பேசினார்.



''நான் அடிப்படையிலேயே புரூஸ் லீ ரசிகன். அவரோட ஒவ்வொரு படத்தையும் பார்க்கும்போதும், நாம எடுத்தா இதுமாதிரி ஓர் ஆக்ஷன் சப்ஜெக்ட் எடுக்கணும்; அது மூலமா என்னோட புரூஸ் லீ கனவை நிறைவேத்திக்கணும்னு முடிவெடுத்தேன். ஆனா, அதை நிறைவேத்தறதுக்குள்ள கிட்டத்தட்ட 650 படங்கல்ல ஸ்டன்ட் மாஸ்டரா ஒர்க் பண்ணியாச்சு. கிட்டத்தட்ட முப்பது வருஷங்கள் ஓடிப் போச்சு. இனிமேலும் தாமதிக்கக் கூடாதுன்னுதான் களத்துல குதிச்சிட்டேன்'' என்று சொல்லும் ஜாக்குவார் தங்கம், இயக்குநர் கனவோடு தாத்துக் குடியிலிருந்து சென்னைக்கு வந்தவர்.

''என் வலியையும், வேதனையையும் புரிஞ்சுக்கிட்ட என் மகனைத் தவிர, வேற யாராலயும் நல்லா நடிக்க முடியாதுன்னு முடிவு பண்ணித்தான், விஜய் சிரஞ்சீவியை நடிக்க வைச்சேன். நான் எதிர்பார்த்ததைவிட அதிகமாக உழைச்சிருக்கான். ஆக்ஷன் காட்சிகளைப் பார்த்த இயக்குநர் பேரரசு, 'உலகத்துல உன்னை மாதிரி ஆக்ஷன் பண்ண யாராலயும் முடியாது'ன்னு கட்டிப்பிடிச்சுப் பாராட்டினார். மனசெல்லாம் நெறஞ்சு போச்சு. படம் வந்ததும் பேசப்படும் பாருங்க'' என்கிறார் ஜாக்குவார் தங்கம் நம்பிக்கையோடு!

– **கபிலன்**

2007 உலகக் கோப்பை மேற்கு இந்தியத் தீவில் நடைபெற்றபோது, எல்லோரும் இது நிச்சய வெற்றி என்று நம்பினார்கள். ஆனால், யார் கண் வைத்தார்களோ, அந்த உலகக் கோப்பை மிகத் தோல்விகரமாக முடிவடைந்தது. குறைந்த மக்கள் கூட்டம், இரண்டு மாதங்களுக்குப் பிறகு நடந்த ஃபைனல், மே.இ.தீவு அணியின் மோசமான ஆட்டம் என பல காரணங்கள் சொல்லப்பட்டன. உலகக் கோப்பையே தோற்றுப்போன பிறகு, கிரிக்கெட்டுக்கு ஏது மறுவாழ்வு?

இந்தச் சமயத்தில்தான் 20-20 தீப்பொறி மெள்ளப் பரவ ஆரம்பித்தது. காரணம், அடுத்த சில மாதங்களில் தென் ஆப்பிரிக்காவில் முதல் 20-20 உலகக் கோப்பை நடப்பதாக இருந்தது. 20-20யின் தாய்வீடு இங்கிலாந்து. கவுன்டி ஆட்டங்களுக்குக் கூட்டம் குறைவாக வருவதால், 2003 ஆம் ஆண்டு முதல் 20-20 ஆட்டங்கள் இங்கிலாந்தில் பிரபலமடைய ஆரம்பித்தன. 2005, ஜூன் மாதம் இங்கிலாந்தில் இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே முதல் 20-20 சர்வதேசப் போட்டி நடந்தது. முதல் வெற்றி இங்கிலாந்துக்குக் கிடைத்தது. லலித் மோடி ஐ.பி.எல். கனவு காணும் முன்னால், 20-20யை வைத்து பெரிய திட்டங்கள் வகுத்தவர், அலென் ஸ்டான்ஃபோர்ட் என்பவர் பிசினஸ் புள்ளி. 2006 ஆம் ஆண்டு அவர் மே.இ. உள்ளூர் அணிகளுக்கிடையே 20-20 போட்டி ஒன்றை நடத்தினார். வென்ற அணிக்கு நான்கு கோடி பரிசு கிடைத்தது.

இப்படி உலகமே 20-20 திசை நோக்கிச் சாய ஆரம்பித்தபோது, அதிசயமாக இந்தப் புதிய நடைமுறைக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தது இந்தியா. ஆம். இன்று ஐ.பி.எல். என்று புதிய வரலாறு படைத்த போட்டியை நடத்தி, பல கோடிகளைத் தன் பாக்கெட்டுக்குள் போட்டுக்கொண்ட பி.சி.சி.ஐ.தான் அன்று 20-20யைக் கடுமையாகச் சாடியது.

'இங்கிலாந்தில் கவுன்டி மேட்சுகளுக்குக் கூட்டம் இல்லாததால் 20-20யை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், இங்கு அப்படியொரு நிலைமை இல்லையே' என்று தர்க்கம் செய்தது. ஐ.சி.சி. மீட்டிங் ஒன்றில் 20-20க்கு எதிராக வாக்களித்தது பி.சி.சி.ஐ. ஆனால், இதர நாடுகள் 20-20க்கு ஆதரவாக இருந்ததால் வேறுவழியின்றி கிரிக்கெட்டின் புதிய குழந்தையை ஏற்றுக் கொள்வதாகச் சம்மதித்தது. 20-20க்காக உள்ளூர் போட்டிகள் நடத்தப்படும், இந்தியா 20-20 உலகக் கோப்பையில் பங்கு பெறும் என்று பி.சி.சி.ஐ அறிவித்ததை ஐ.சி.சி. இருகரம் கொண்டு வரவேற்றது! ஆனால் 2010 காமன் வெல்த் போட்டியில் 20-20 கிரிக்கெட் சேர்க்கப்படுவதாகப் பேச்சு கிளம்பியபோது, அதை எதிர்த்த ஒரே நாடு இந்தியாதான். இது குறித்து பி.சி.சி.ஐ.யின் பொருளாளர் ஸ்ரீனிவாசன் என்னவென்று பேட்டி கொடுத்தார் தெரியுமா? 'நாங்கள் காமன் வெல்த் போட்டியில் கிரிக்கெட் ஆட மாட்டோம் என்று சொல்லவில்லை. ஆனால், 20-20 கிரிக்கெட்டை ஒரு முறையான கிரிக்கெட்டாகக் கருதமுடியாது.' ஒருவழியாக எல்லா டெஸ்ட் அணிகளும் 20-20 சர்வ தேச ஆட்டங்கள் ஆடி முடித்தபிறகு, இறுதியாக 2006, டிசம்பர் 1 அன்று தென்ஆப்பிரிக்கா வுடன் தன் முதல் 20-20 ஆட்டத்தை ஆடியது இந்திய அணி!



இன்று எப்படியெல்லாம் காட்சிகள் மாறிவிட்டன. '20-20, மாபெரும் புரட்சிக்கு வித்திட்டுள்ளது' என்று பேட்டி கொடுக்கிறார் லலித் மோடி. 50 ஓவர் கிரிக்கெட் என்று ஒன்று இருப்பதையே மறந்துவிட்டு, 20-20 பின்னால் மோகம் கொண்டு அலைகிறது பி.சி.சி.ஐ. ஒரு நாள் இல்லை ஒருநாள், ஒரு நாள் ஆட்டம் கட்டாயமாக அழிந்துவிடும் போலிருக்கிறது. ●


ச.ந.கண்ணன்
அலென் ஸ்டான்ஃபோர்ட்
லலித் மோடி
20-20 மோக வலை!

டிஸ்லெக்ஸியா

ராஜேஸ்வரி

மாலதி டிஃபன் எடுத்து வைத்தாள். தட்டில் இட்லி அருகே எடுப்பாக கேசரி வைத்திருந்தாள். சாப்பிட உட்கார்ந்தான் ரகு. கையில் ஓர் ஆங்கில தினசரி. பட படக்கும் பார்வையுடன் எதிரில் உட்கார்ந்தாள் மாலதி.

''சர்வே ஒண்ணு போட்டிருக்கான் பாத்தியா...? ஒவ்வொரு கிளாஸ்லேயும் டிஸ்லெக்ஸியாவால் பாதிக்கப்பட்ட ஐந்து ஸ்டூடன்ட்ஸ் இருப்பாங்களாம்...''

''சாப்பிடறப்ப என்ன படிப்பு...? தட்டில் இருக்கறதைக் கவனிச்சு சாப்பிடுங்க...''



''டிஸ்லெக்ஸியான்னா என்னன்னு தெரியுமா உனக்கு?''

''ஏதாவது சோப்பா இருக்கும்...''

''மண்டு... ஒண்ணும் தெரியாது... பாடங்களைக் கத்துக்க முடியாத நோய்க்குப் பேர்தான் டிஸ்லெக்ஸியா...''

தட்டைப் பார்த்துச் சாப்பிட ஆரம்பித்தான். இனி கேசரியைக் கவனித்துவிடுவான். மாலதிக்கு ஆவல் கூடியது. தயாராக இருந்த பதிலைத் தொண்டைக்குக் கொண்டு வந்தாள்.

''ஆஆஆ....''

''ஐயையோ என்னாச்சு...?''

வாயிலிருந்து சிதைந்த மிளகாயை எடுத்தான். ''என்னடி மிளகாயை முழுசா அப்படியே போட்டிருக்கே...?''

தண்ணீர் கொடுத்தாள். இதுதான் தருணம். கவனத்தைக் கேசரி மீது திருப்ப வேண்டும்...

''சரி சரி, கேசரியை எடுத்து வாயில் போடுங்க... காரம் அடங்கிடும்...''

''அப்படியெல்லாம் உடனே அடங்காது... ஏன் சொல்லு பார்ப்போம்...''

''ஐயோடா சாமி...''

''கேளுடீ... மிளகாய்ல இருக்கிற கப்செய்சின்கிற கெமிக்கல் வலியையும் சூட்டையும் ஒரே சமயத்தில் உண்டாக்கும்.''

கேசரியைக் காலி செய்துவிட்டு எழுந்து, அலுவலகம் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தவனைப் பார்த்து...

''கேசரியைப் பார்த்து உங்களுக்கு எதுவும் தோணலையா...?'' என்றாள்.

''ஆ... இதே மாதிரி மஞ்சள் கலர்ல வியாழன் கிரகத்தில் ஒரு மலை கண்டு பிடிச்சிருக்காங்க.''

''ப்ச்...''

''அய்யய்யோ ஆஃபீஸ்க்கு நேரமாயிருச்சு...''

அவசரமாக உடைமாற்றிக் கிளம்பியவன் உற்சாகமா...

''மாலதீ... ஏய் மாலதீ... இப்பதான் எனக்கு ஞாபகம் வந்துச்சு... ஓடிவா...''

கசிந்திருந்த கண்களைத் துடைத்துக் கொண்டு, வாசலுக்கு ஓடினாள்.

''அந்த மஞ்சள் மலையோட பேரு, யெல்லோ ராக்ஸ்... வர்ட்டா...?'' வண்டியைக் கிளப்பிப் பறந்தான்.

அன்று மாலதியின் பிறந்த நாள். ●

மா.கண்ணன்

வார்த்தையைக் கொத்தும் கொக்கு!



யோசித்தலில்
சூனியச் சாயல் படிய
யதார்த்தத்தில்
அருமையாய் முதல் வரி
குபீரெனப் பாயும்
குளத்துத் தவளையாய்

கால்கடுத்து
ஓடையில் முகம் பார்த்து
ஓய்வு கொள்ளும் கொக்கு
வார்த்தை மீன்களைக்
கொத்தும்

மரம் ஏறி
சிக்கிய கூடுகளில்
சேகரித்த
பறவைகளின் முட்டைகளாக
அழகான சொற்களில்
சிறந்ததொரு
காதல் கடிதம் தீட்ட...
தேதியிடுதல் அவசியமில்லைதான்
சேதியும் கூடவா?!

போலீஸ் விருந்து

'சீச்சீ! இது என்ன உலகம்? வரவர எல்லாம் தலைகீழாய்ப் போய்விட்டது' என்று கந்தசாமி தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

''பின்னே என்ன, ஐயா! இரண்டு பூரிக்கும் ஒரு கப் காஃபிக்கும் வழியில்லை என்றால், இது என்ன உலகத்தோடு சேர்த்தி?'' என்று அவன் ஒரு கேள்வியைப் போட்டுக்கொண்டு, அதற்குப் பதில் சொல்வதுபோல் ''தூ!'' என்று காறி உமிழ்ந்தான்.

கந்தசாமியின் பொக்கிஷ நிலைமை அப்போது மிகவும் கேவலமாய்த்தான் இருந்தது. பணப்பையைத் திறந்து பார்த்தான். மூன்று காலணாக்கள் இருந்தன. ஒருவேளை அவற்றில் ஒன்று, அரை ரூபாயாய் இருந்துவிடக்கூடாதா என்ற ஆசையுடன் கையில் ஒவ்வொன்றாய் எடுத்து உற்றுப் பார்த்தான். ''காலணா, அரையணா, முக்காலணா...'' என்று மூன்று ஸ்தாயிகளில் சொல்லி, அவற்றைச் சாலையில் விட்டெறிந்தான். கொஞ்ச தூரம் போனவன் மறுபடி ஏதோ நினைத்துக்கொண்டவன்போல் திரும்பி வந்து அவற்றைப் பொறுக்கி எடுத்துக்கொண்டான்.

சாதாரணமாய் கந்தசாமிக்கு இத்தகைய நெருக்கடி ஏற்படுவதில்லை. பணம் சம்பாதிப்பதற்கு, ஒரு வழி இல்லாவிட்டால் இன்னொரு வழியை அவனுடைய தீவிர மூளை கண்டுபிடித்துக்கொண்டேயிருக்கும். நம்முடைய பொக்கிஷ மந்திரிகள் என்னவோ தவியாய்த் தவிக்கிறார்களே, வரிகளை எடுத்துவிட்டால் சர்க்கார் வரவு செலவுக் கணக்கில் துண்டு விழுந்துவிடுமென்று? அவர்கள் கந்தசாமியைக் கூப்பிட்டு, இரண்டு பூரியும் ஒரு கப் காஃபியும் மட்டும் வாங்கிக் கொடுத்து, யோசனை கேட்கட்டும்.

அதுதான் ஒரு தொல்லை; கந்தசாமியின் மூளைக்கும் அவனுடைய வயிற்றுக்கும் நெருங்கிய சம்பந்தம் ஏதோ இருந்தது. வயிற்றில் ஒரு கப் காஃபியைப் போட்டுவிட்டு யோசனை கேட்டால், உடனே எவ்வளவு சிக்கலான பொருளாதாரப் பிரச்னைகளையும் அவனுடைய மூளை தீர்த்து வைத்துவிடும். அந்த ஒரு கப் காஃபி இல்லையென்றால், அவனுடைய மூளையும் வேலை நிறுத்தம் செய்துவிடும்.

அன்று காலை கந்தசாமி தன்னுடைய பொருளாதார நிலைமையைச் சரியாகக் கவனிக்காமல் ஸலூனில் புகுந்துவிட்டான். கிராப் செய்துகொண்ட பிறகு பணப்பையை எடுத்துப் பார்த்தால், சரியாக 6¾ அணாதான் இருந்தது. கேவலம் க்ஷவரக் கடையில் கடன் சொல்ல அவனுக்கு விருப்பமில்லை. அதெல்லாம் மரியாதைக் குறைவு. மேலும், தினசரி அங்கே போய்த் தலையை வாரி விட்டுக் கொண்டு வரவேண்டுமல்லவா? ஆகவே ஆறு அணாவைக் கொடுத்துவிட்டு வெளியில் வந்தான். கையிருப்பு மூன்று காலணா.

கந்தசாமி தன்னுடைய வரவு செலவுக் கணக்கைச் சரிகட்டுவதற்குக் கடைசியாகக் கையாண்ட முறை, கைரேகை பார்த்துச் சொல்லுதல். யாரோ ஒரு வடக்கத்தியான், தான் கைரேகை சாஸ்திரத்தில் நிபுணன் என்பதாகச் சில பெரிய மனிதர்களிடம் வாங்கி வைத்திருந்த ஸர்ட்டிஃபிகேட் புஸ்தகத்தை கந்தசாமி 'தஸ்கரம்' செய்தான். அதை வைத்துக்கொண்டு அவன் ஆறு மாதம் வெகு அமுலாக வாழ்க்கை நடத்தினான். அப்போதெல்லாம் அவனுக்கு நல்ல நல்ல வரும்படி. அவனுக்கு விருப்பம் இருந்தால் பணம் மீந்துக்கூட இருக்கலாம். ஆனால், பணம் சேர்த்து வைப்பதில்

அவனுக்கு நம்பிக்கை கிடையாது. மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுகிறான்: எதற்காகச் சேர்த்து வைக்க வேண்டும்? இன்று கையில் பணம் இருக்கும்போது, மறு நாளைப் பற்றிய கவலை ஏன்?

நல்ல வருமானம் அளித்து வந்த ரேகை சாஸ்திரத்தை கந்தசாமி ஏன் கைவிட்டான் என்று கேட்பீர்கள். முதலாவது, எந்தத் தொழிலையும் நெடுநாள் கடைப்பிடிக்கும் வழக்கம் அவனிடம் கிடையாது. இரண்டாவது, அந்தத் தொழிலில் கடைசியாக நிகழ்ந்த ஒரு சம்பவமாகும். அந்தச் சம்பவத்தினால் அவனுக்கு ஏற்பட்ட வைராக்கியத்தில் சன்னியாசியாகி விடுவதாகக் கூடத் தீர்மானித்துவிட்டான். நேரே அவன் பேரானந்த மடத்துப் பெரிய சாமியாரிடம் சென்று தன்னுடைய கருத்தை வெளியிட்டபோது சாமியார் தற்சமயம் தமக்குப் போதிய சிஷ்யர்கள் இருப்பதாகவும், புதிதாய் வரும் சிஷ்யர்களுக்குக் காவி வஸ்திரம் வாங்கிக் கொடுக்க மடத்தின் பொருளாதார நிலைமை இடங்கொடுக்கவில்லையென்றும் தெரிவிக்கவே, 'சீ! எங்கே போனாலும் தரித்திரம் பிடித்த பொருளாதார நெருக்கடிதானா?' என்று எண்ணி, அந்த எண்ணத்தை விட்டொழித்தான். கந்தசாமிக்கு மேற்சொன்னவாறு வைராக்கியம் உண்டு பண்ணிய சம்பவம் பின்வருமாறு:

அவனுடைய ரேகை சாஸ்திர அனுபவத்தில், எப்படிப்பட்ட மனுஷ்யரானாலும் சரி, களத்ர பாக்கியத்தைப் பற்றிச் சிலாக்கியமாய்ச் சொன்னால் உச்சி குளிர்ந்துவிடுவதைக் கண்டிருக்கிறான். ஆளின் வயதையும், மற்றபடி வீடுவாசல்களின் நேர்மையையும் பார்த்துக்கொண்டு அவன் சரடு விடுவான். ''ஸார்! உங்களுக்குக் கல்யாணம் ஆயிருக்க வேணும். அல்லது கூடிய சீக்கிரம் ஆக வேணும்'' என்று சொன்னால், எப்படிப்பட்ட ஆசாமியின் முகமும் சற்று மலர்ந்தே தீரும். இன்னொருவரிடம் கொஞ்சம் தயக்கத்துடன், ''நான் சொல்கிறேனே என்று நீங்கள் ஒன்றும் நினைத்துக் கொள்ளக்கூடாது. உங்களுக்கு இரண்டு சம்சாரம் உண்டு'' என்பான். உடனே அவருடைய முகத்திலே புன்னகை ஏற்படும். வேறொருவரிடம், அவருடைய நடை, உடை, பாவனைகளைக் கவனித்துக் கொண்டு, ''ஸார்! உங்களுக்குக் கல்யாணமான சம்சாரம் ஒன்று; மற்றபடி 'பிரைவேட்'டாக இரண்டொருவர் இருக்க வேணும். என் மேல் கோபித்துக்கொண்டு உபயோகமில்லை. ரேகை அப்படிச் சொல்கிறது'' என்பான். உடனே மேற்படி ஆசாமியின் வாயெல்லாம் பல்லாகத் தெரியும். முழு ரூபாய்க்



குக் குறைந்து அவரிடம் வாங்கிக்கொள்ள மாட்டான்.

மற்றொருவரிடம், ''உங்களுடைய சம்சாரம் ரொம்ப பாக்கியசாலி; அந்த அம்மாள் கால் வைத்த இடம் எல்லாம் விளங்கும்'' என்றும், இன்னொருவரிடம், ''உங்கள் சம்சாரம் உங்களிடம் உயிராயிருப்பாள்; ஆனால், நீங்கள்தான் அந்த அம்மாவிடம் அவ்வளவு ஆசையாயிருக்க மாட்டீர்கள்'' என்றும், இந்த மாதிரியெல்லாம் சொல்லி, எப்படிப்பட்ட கஞ்சனாயிருந்தாலும் வெள்ளிப் பணத்துக்குக் குறையாமல் கழட்டிவிடுவான்.

கடைசியாக, ஒரு தடவை மட்டும் இந்த யுக்தி பயன்படாமல் போயிற்று. அதாவது, யுக்தியின்மேல் தவறு ஒன்றுமில்லை; உபயோகித்த இடம்தான் தவறாய்ப் போயிற்று. ஒரு மனுஷன் தன்னுடைய கையைக் காட்டி எல்லாம் தெரிந்து கொண்ட பிறகு தன்னுடைய சம்சாரத்தின் கையையும் பார்க்கும்படி சொன்னான். கந்தசாமி தான் சொல்வது இன்னதென்பதை நன்கு உணராமலே, ''அம்மா! உங்களுக்குக் கல்யாணமான புருஷன் ஒன்று, மற்றபடி 'பிரைவேட்'டாக இரண்டொருவர்...'' என்று உளறிவிட்டான். அவ்வளவுதான், அந்த அம்மாள் பத்ரகாளி வடிவெடுத்து, ''உன்னைக் கட்டையிலே வைக்க, பாம்பு பிடுங்க?'' என்று பிரமாதமாகச் சபிக்கத் தொடங்கினாள். மற்றும், ''உன்னிடம் கையைக் காட்டச் சொல்லித்தே, இந்த ஜடம்?'' என்று அவள் தன் புருஷனுக்குக் கொடுத்த கொடுப்பில், அந்த மனுஷன் கந்தசாமியின் மேல் கைகூட வைத்துவிட்டான்!

கந்தசாமி அன்று எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டான். முதுகெல்லாம் வீங்கும்படி அடிபட்டதுமல்லாமல், மேற்படியாரின் வீட்டில் தான் வெள்ளிச் செம்பைத் திருட முயற்சித்ததாக ஒப்புக்கொண்டு, அதற்காகத் தன்னை மன்னிக்க வேண்டுமென்று எழுதியும் கொடுத்துவிட்டு அவன் விடுதலை பெற வேண்டியதாயிற்று.

இதெல்லாம் பழைய கதை. மேற்படி சம்பவத்துக்குப் பிறகு கந்தசாமி ரேகை சாஸ்திரத்தின் மூஞ்சியில்கூட விழிப்பதில்லையென்று சபதம் செய்து கொண்டான். அதன் பயனாகத்தான் இன்று அவன் பையில் மூன்றே மூன்று காலணாக்களுடன் நடந்துபோக வேண்டியிருந்தது.

வழியில் சாலை ஓரத்தில் ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு முன்னால் ஒரு பழந்துணி விரிந்திருந்தது. அதில் ஓரணா நாணயம் ஒன்றும், இரண்டு காலணாக்களும் கிடந்தன. அந்த ஓரணாவை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கந்தசாமியின் கை ஊறிற்று. எனவே, தன் பையிலிருந்த காலணாவை எடுத்தான். (அதைப் போடுவதாகப் பாசாங்கு செய்து



''அம்மா! உங்களுக்குக் கல்யாணமான புருஷன் ஒன்று, மற்றபடி 'பிரைவேட்'டாக இரண்டொருவர்'' என்று உளறிவிட்டான்.

விட்டு ஓரணாவை எடுத்துக்கொள்ளலாமென்று), ஏதோ சந்தேகம் தோன்றிற்று. சுற்றுமுற்றும் பார்த்தான். பக்கத்தில் முச்சந்தியில் நின்ற போலீஸ்காரன் தன்னை உற்றுப் பார்ப்பதைக் கவனித்தான். கையிலெடுத்த காலணாவைப் பிச்சைக்காரன் துணியில் போட்டுவிட்டு மேலே நடந்தான். கொஞ்ச தூரம் போனதும் தன்னுடைய கோபத்தையெல்லாம் சேர்த்து வைத்துத் ''தூ!'' என்று காறி உமிழ்ந்தான்.

ஒரு குருட்டுப் பிச்சைக்காரப் பயலிடம்கூட ஒன்றே முக்காலணா இருக்கிறது. தன்னிடமோ இரண்டு காலணாதான் இருக்கிறது என்பதை எண்ண எண்ண, அவனுடைய ஆத்திரம் அதிகரித்தது. கையிலுள்ள அரையணாவுக்கு ஏதாவது ஆபத்து வரப் போகிறதே என்று பயம் உண்டாகிச் சட்டென்று அருகிலிருந்த சாயுபுவின் 'சா'க் கடைக்குச் சென்றான். ஒரு கப் 'சா' வாங்கிச் சாப்பிட்டான். அரை கப் டீ உள்ளே போனவுடனேயே மூளை வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. குடித்து முடிந்ததும், 'சபாஷ்! அதுதான் வேலைத்தனம்!' என்று தீர்மானித்தான். தெரியாமலா தேயிலைப் பானத்தைப் பற்றி இவ்வளவு பிரசாரம் செய்கிறார்கள்?

நெல்லிப்பாக்கத்தில் பெரும்பாலும் மத்திய வகுப்பினரே குடியிருந்தார்கள். சின்னச் சின்னத் தோட்டங்களுக்கு மத்தியில் சின்னச் சின்ன பங்களாக்கள். அவற்றில் வசித்தவர்கள், அறுபது எழுபது ரூபாய் முதல் முந்நூறு நானூறு ரூபாய் வரையில் மாதச் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள், குமாஸ்தாக்கள் ஆகியோர். இடையிடையே மாஜி உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள் முதலியோரும் உண்டு.

காலை எட்டு மணிக்கு ஸ்ரீமான் கே.ராமகிருஷ்ணய்யர், காமரா உள்ளில் கையில் பத்திரிகையுடன் உட்கார்ந்திருந்தார். வாசல் ஜன்னல் ஓரமாய் ஒரு மனிதன் வந்து நின்று ''ஸார்!'' என்று கூப்பிடவே, ''யாரடா அது?'' என்று அதட்டிய குரலில்



எரிச்சலாகக் கேட்டார். ''போலீஸ், ஸார்!'' என்று பதில் வரவும், கொஞ்சம் அடங்கி, ''என்ன?'' என்றார்.

''ரோந்து டியூட்டி, ஸார்!''

''சரி, அதற்கென்ன?''

''எல்லாரும் சேர்ந்து பொங்கல் வைக்கறோம். ஸார்?''

''சரிதான், அதற்கென்ன செய்ய வேணும்?''

''ஏதோ உங்களுக்கு இஷ்டமானதைக் கொடுக்கலாம், ஸார்!''

ராமகிருஷ்ணய்யர் ஒரு நிமிஷம் யோசித்தார். முதலில் 'போலீஸ்' என்றதும், அவர் நெஞ்சில் ஏற்பட்ட துணுக்கம் இப்போது நிவர்த்தியாகி, அவன் யாசகத்துக்கு வந்திருக்கிறானென்னும் விஷயம் கொஞ்சம் சந்தோஷம் அளித்தது. 'ஆமாம்; ஊரெல்லாம் திருட்டுப் பயமாயிருக்கிறது. போலீஸ்காரர்களுடைய ஒத்தாசை எவ்வளவு அவசியமானது?' என்று எண்ணினார். என்ன கொடுக்கலாமென்று சற்றுச் சிந்தித்துவிட்டு, பணப் பையைத் திறந்து நாலு அணா எடுத்தார். ''நாங்கள் ஆறு பேர் ரோந்து சுத்தறோம், ஸார்!'' என்றான். இன்னும் இரண்டணா சேர்த்துக் கொடுத்து அனுப்பினார்.

அன்று பத்தரை மணிக்குள்ளாக, கந்தசாமி ரூ.2¼ சொச்சம் சம்பாதித்துவிட்டான். வெயில் ஆகிவிட்டது. இன்றைக்கு நிறுத்த வேண்டியதுதான். ஆனாலும், முழுசாகக் கால் நூறு ஆக்கிவிட்டு நிறுத்தலாம் என்று எண்ணினான். இன்றைக்கு விழித்த முகத்தில் இன்னும் பத்து நாள் விழித்தால் போதும்; அப்புறம் கௌரவமாய் ஒரு சோடாக் கடை வைத்துக்கொண்டு காலட்சேபம் செய்யலாம்; ஏன், 'கல்யாணம்' கூடப் பண்ணிக் கொள்ளலாம்.

'மிஸ்டர் கே.சேனாபதி, ஜி.டி.ஏ.' என்ற போர்டு தாங்கிய வீட்டுக்குள் நுழைந்தான். முன் ஹாலில் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் சேனாபதி அல்ல; அவருடைய தமையன் தீர்த்தபதி என்று கந்தசாமிக்குத் தெரியாமல் போனது ஒரு துரதிர்ஷ்டம்தான்.

''யார்? என்ன வேணும்?'' என்று சாவதானமாய்க் கேட்டார் தீர்த்தபதி.

''போலீஸ், ஸார்!'' என்றதும், தீர்த்தபதியின் முகத்தில் ஒரு பிரகாசம் உண்டாயிற்று. அதன் கருத்து கந்தசாமிக்கு விளங்கவில்லை.

''எந்தப் போலீஸ்?''

''டவுன் போலீஸ்தான்.''

''என்ன வேணும்?''

கந்தசாமி வழக்கமான பாடத்தை ஒப்புவித்து, ''உங்களுக்கு இஷ்டமானதைக் கொடுக்கலாம்'' என்றான்.

''சரி, கொஞ்சம் இரு'' என்று தீர்த்தபதி சொல்லிவிட்டு, வேலைக்காரப் பையனை அழைத்து அவனிடம் ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தனுப்பினார். பிறகு, இன்னும் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். கந்தசாமியும் நின்றுகொண்டேயிருந்தான்.

சற்று நேரத்துக்கெல்லாம் உடுப்புத் தரித்த ஒரு போலீஸ்காரன் வந்தான். தீர்த்தபதியின் முன் வந்து, ஸலாம் வைத்து நின்றான்.

தீர்த்தபதி அவனைப் பார்த்து, ''என்ன வேலையடா பார்க்கிறீர்கள், நீங்கள்? சுத்த சோம்பேறிக் கழுதைகள்!'' என்று திட்டிவிட்டு, ''வாசலில்



தூறல் கவிதை

ஒரு பறவையின் கூடு
என்னவாக இருக்க முடியும்?
பறத்தலே அதன்,
பாதுகாப்பாயிருக்கையில்...

– கனகராஜன்

போய் நில்லு!'' என்றார். வாசற்படிக்கு அருகில் நின்ற கந்தசாமி, அந்தப் போலீஸ் காரனை இரகசியமாய் ''எஜமான் யார்?'' என்று கேட்டான். ''தெரியாதா? சப்-இன்ஸ் பெக்டர் ஐயா'' என்றான் போலீஸ்காரன்.

இம்மாதிரி நெருக்கடிகளில்தான் கந்த சாமி எவ்வளவு தீரபுருஷன் என்பது வெளி யாகும். எத்தகைய ஆபத்திலும் அவன் பதற்றம் அடைவது மட்டும் கிடையாது. இப்போது அவன் மளமளவென்று இன்ஸ் பெக்டர் அருகில் சென்று சட்டைப் பைகளில் இருந்த பணம், சில்லறை எல்லாவற்றையும், எடுத்து, மேஜையின் மீது வைத்தான். ''எஜமான் மன்னிக்க



வேணும்'' என்றான்.

''இவ்வளவுதானாடா? இன்னும் பாக்கி ஏதாவது வைத்துக் கொண்டிருக் கிறாயோ?''

''தம்பிடிகூட இல்லை, எஜமான்!''

''சரி, ஓடிப் போ! இனி இம்மாதிரி செய் தாயோ தொலைத்துவிடுவேன்!''

''எஜமான்!''

''என்னடா?''

''வயிறு பசிக்கிறது. நாஸ்தாவுக்கு ஏதாவது...''

''சரி; தொலைத்துக்கொண்டு போ!'' என்று ஸப்-இன்ஸ்பெக்டர் இரண்ட ணாவை எடுத்தெறிந்தார். கந்தசாமி அதை எடுத்துக்கொண்டு வெளியேறினான். வாசலில் நின்ற போலீஸ்காரனைப் பார்த்து, ''எஜமான் உன்னைப் போகச் சொல்கிறார். அண்ணே! இனி உனக்கு வேலையில்லை யாம்'' என்று கூறிவிட்டுப் போனான்.

ஸப்-இன்ஸ்பெக்டர் தீர்த்தபதி, கையோடு கையாக ஸர்க்கிள் இன்ஸ் பெக்டர் மலையப் பெருமாளுக்கு ஒரு கடிதம் எழுதினார்:

'...மாற்றலாகிப் போகும் டெபுடி சூபரின்டெண்ட் துரைக்கு நாம் கொடுக்க எண்ணியிருக்கும் விருந்துக்காக, என்னுடைய சந்தா ரூ.24 இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

இப்படிக்குக்
கீழ்ப்படிந்துள்ள ஊழியன்
தீர்த்தபதி.'

கந்தசாமி கையில் இரண்டணாக் காசுடன் வீதியில் நடந்து சென்றபோது, ''உலகம் ரொம்ப சரியாய்த்தான் நடந்து வருகிறது; எல்லாம் அதது, அப்படியப்படி சேர வேண்டிய இடத்தில்தான் கணக்காய்ப் போய்ச் சேர்கிறது'' என்று சொல்லிக் கொண்டு போனான். ●

வெற்றியின் நினைவு -75 அடி!



'இது ஏதோ ஒரு கோட்டை தானே... இதில் என்ன இருக்கப் போகிறது?' என்று நினைத்தபடியே நின்றுவிட்டால், ஏமாற்றம் நமக்குத் தான்; ஆம்! 'மனோரா' என்ற நினைவுச் சின்னத்தைப் பற்றித்தான் சொல்கிறோம்.

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையிலிருந்து சுமார் இருபத்தைந்து கிலோமீட்டர் தொலைவில் இருக்(நிற்)கிறது இந்த மனோரா. இது எழுப்பப்பட்டதற்கு, சுவாரஸ்யமான வரலாற்றுப் பின்னணி உள்ளது.

நெப்போலியனுக்கும், ஆங்கிலேயப் படைக்கும் பெரிய போர் நடக்கிறது; இதில் ஆங்கிலேயப் படை வெற்றி வாகை சூடுகிறது; இந்தப் போர்வேட்டை வெற்றியின் நினைவாக எழுகிறது மனோரா கோட்டை.

கி.பி.1814-ல் இந்த நினைவுச் சின்னத்தைக் கட்டுவித்தவர் தஞ்சை மராட்டிய மன்னன் இரண்டாம் சரபோஜி.

'மினார்' என்ற சொல்லிலிருந்து மனோரா பிறந்துள்ளது. எட்டு அடுக்குகளோடு, எழுபத்தைந்து அடி உயரத்தில், எழில் சூழ அறுகோண அமைப்பில் இது அமைந்துள்ளது.

நாம் துவக்கத்தில் குறிப்பிட்டது போல ஏதோ ஓர் உயரமான கோட்டை என்று எளிதாகத் தோன்றும். ஆனால், உள்ளே சென்று பார்த்தால்தான் கட்டடக் கலையின் உன்னதம் புரியும்.

உள்ளே புகுந்து, எப்படி வெளி வருவது என்பதில் மனம் சற்று குழம்பும்; உயரத்தில் ஏறி ஒட்டுமொத்த அழகை ரசிக்கையில் உள்ளம் மகிழ்ச்சியில் ததும்பும். மதில்கள் ஒவ்வொன்றும் மலைக்க வைக்கின்றன.

இங்கு வந்தால் மனோரா சின்னத்தைச் சுற்றிப் பார்ப்பதோடு, நம் எண்ணத்தை ஏற்றமுறச் செய்ய, நமக்கு மகிழ்ச்சி அலையை எழுப்ப கடற்கரையும் உள்ளது. பத்து ரூபாய் கட்





எழுத்தாளனின் நடிப்பு!

வடசென்னையைப் பின்புலமாக வைத்து சென்னை சென்ட்ரலுக்கு எதிரே உள்ள பகுதியில், வளர்ந்து வருகிறான் 'வால்மீகி'. சங்கரின் உதவியாளராக இருந்த அனந்த நாராயணனின் இயக்கத்தில் விகடன் டாக்கீஸ் தயாரிக்கும் படம் 'வால்மீகி'. இப்படத்திலொரு சிறப்பு எழுத்தாளர் அஜெய்ன் பாலா முக்கிய வேடத்தில் நடிக்கிறார். சமீபகாலமாய் எழுத்தை மட்டுமன்றி, எழுத்தாளனின் நடிப்பையும் சுவீகரித்து புஷ்டியாகி வருகிறது கோலிவுட். அடுத்து நடிக்க வரும் எழுத்தாளர் யாரோ?

- ஆகாஷ் அக்னிமித்ரன்

டணத்தில் படகு சவாரியும் செய்யலாம்.

இவையெல்லாம் இருந்தும், இந்த இடம் இன்னும் முழுமையாகப் பராமரிக்கப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். தஞ்சாவூர் வருபவர்கள் பெரியகோயில், கும்பகோணம் கோயில்கள் என்று சுற்றுலாவை முடித்துக்கொள்கின்றனர். இப்படியொரு இடம் இருப்பது பலருக்குத் தெரியவில்லை. அதனைத் தெரியப்படுத்தும் பொறுப்பும், அழகுமிகு இடமாக பராமரிக்கும் கடமையும் அரசுடையவை.

அப்படி நடந்தால், அனைத்து சுற்றுலா பயணிகளும் மனம் விரும்பி, மனோராவைச் சுற்றிப் பார்ப்பார்கள்; நினைவுச் சின்னச் செய்தியும், ஆதிகால நினைவலைகளும் மக்கள் மனத்தில் தங்கினால் 'எட்டடுக்கு மாளிகையில் ஏற்றிவிட்ட தம் கனவை விட்டு விட்டுச் சென்றானடி... நாம் சுற்றிப் பார்க்க வைத்தானடி' என்று சோகமாக இல்லாமல், குதூகலித்துப் பாடலாம்தானே?

- மாமதி முருகன்



சில்லென ஒரு சுற்றுலா

1 கஷ்டப்படுத்தாத எங்க இஷ்ட தெய்வம்!

புராண காலத்தில் அசுரர்கள், முனிவர்களையும், சித்தர்களையும் தவம் செய்ய விடாமல் துன்புறுத்தினர். மக்களைக் கொன்று வந்தனர். அல்லலுற்றவர்க்காக மனமிரங்கிய சிவன், அவர்களிடம் பூமியில் யாகம் வளர்க்கச் சொல்லி, அந்த அக்கினிக் குண்டத்தில் தமது சக்தியைச் செலுத்தி, அதிலிருந்து கரிய நிறத்துடன் கருப்பண்ணசாமியைத் தோன்றச் செய்தாராம். சிவனின் கட்டளைப்படி அது முதல் காவல் தெய்வமானது.

ஆதியில் அழகர் கோயிலில் நிலை நிறுத்தப்பட்ட கருப்பண்ணசாமி, எல்லா இன மக்களுக்கும் குலதெய்வமாக இருந்தார். அவரவர் விருப்பப்படி, பல ஊர்களில் பல பெயர்களில் வண்டிக் கருப்பு, வண்ணக் கருப்பு, சோனக் கருப்பு, சோலைக் கருப்பு, நீலக் கருப்பு, மாரநாட்டுக் கருப்பு, முத்துக் கருப்பு, பெரிய கருப்பு, சின்னக் கருப்பு என 108 பெயர்களில் வணங்கப்படுகிறார்.

நாயக்க மன்னர்களின் வரவுக்குப் பிறகுதான் பெரிய ஆலயங்களில் கருப்பண்ணசாமி அகற்றப்பட்டு மூடப்பட்ட கதவுகளே கருப்பனின் அடையாளமாக மாற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.



வடசென்னையின் மையப்பகுதியில் இன்றும் மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஒரு நகர்ப்பகுதி போலவே காட்சி தருகிற, வியாசர்பாடி பக்தவச்சலம் நகரில் உள்ளது கருப்பண்ணசாமி ஆலயம்.

பரமக்குடியில், தொண்டிக்கு அருகில் உள்ள திருப்பாலக்குடியில் பழங்கோட்டை கிராமத்தில் அருள்பாலிக்கும் கருப்பண்ணசாமியின் தொடர்ச்சிதான் வடசென்னையில் இருக்கும் கருப்பண்ணசாமி. இக்கோயிலை உருவாக்கியவர்களில் முதன்மையானவர், பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய சிவசக்தி தாசர் நா.சோமசுந்தர ஆச்சாரியார். பதினெட்டாம்படி கருப்பண்ணசாமியைக் குலதெய்வமாகக் கொண்டவர். முகவை கருப்பையா, சோனைமுத்து, கனிமொழியான், பழனியாண்டி மற்றும் பலரின் துணையோடு கருப்பண்ணசாமிக்குக் கோயில்கட்டி கும்பாபிஷேகமும் செய்தார்.



இந்த ஆலயத்தின் எல்லைக்குள் நுழைந்தாலே துஷ்ட தேவதைகளால் பீடிக்கப்பட்டவர்கள், ஆட ஆரம்பித்துவிடுவார்கள். பிள்ளையில்லாதோர், பொருட்களைக் களவு கொடுத்தோர், உறவினர்களால் ஏமாற்றப்பட்டோர், தொழிலில் நஷ்டமடைந்தோர் எனப் பலவிதமான கோரிக்கைகளோடு வந்து மனமுருகி வேண்டுவோருக்கு, வேண்டியதைத் தந்து அருள்பாலிக்கிறார் கருப்பண்ணசாமி. கேட்டது பலிக்கச் செய்யும் சக்தி வாய்ந்தவர்.

கருப்பண்ணசாமி சிவனின் அம்சம், ஞானமார்க்கத்துக்குரியவர் என்பதால் அவருக்குப் பால் பொங்கல், பழங்கள் மட்

டுமே படைக்கப்படும். கிடா வெட்டு என்பது சற்றுத் தொலைவில் உள்ள பலி பீடத்தில்தான் நடைபெறும்.

கருப்பண்ணசாமி பூஜைப் பொருட்களாக அரிவாள், தடி, பந்தத்திரி, சாட்டை ஆகியவையே வலம் வரும்.

மாசிமகம், ஆடி பதினெட்டு, சிவராத்திரி ஆகியவை விசேஷ தினங்களாகும்.

இப்பகுதியில் வசிக்கும் மக்கள், குழந்தை பிறந்ததும் முதலில் கருப்பையா,



கருப்பண்ணசாமி



* நா.சோமசுந்தர ஆச்சாரி

கருப்பாயி என அழைத்தபின்பே, நட்சத்திர ராசிப்படி பெயர் வைப்பார்கள். கருப்பண்ணசாமியைக் குலதெய்வமாக வணங்குபவர்கள், கறுப்பு நிறம் கலந்த ஆடைகளை அணியமாட்டார்கள். அணிந்தால், அந்த ஆடை தீப்பிடித்துவிடும் அல்லது தொலைந்துவிடும் எனும் நம்பிக்கை இன்றும் உண்டு.

அச்சம் தரும் தோற்றத்திலிருந்தாலும், தம்மை வழிபடும் மக்களுக்கு அச்சத்தைப் போக்கி, நம்பிக்கையை விதைக்கிறார் கருப்பண்ணசாமி. நெருக்கமான குடும்பத்தின் மூத்தோர்களைப் போலவே இவரைக் கருதி, வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் பக்தர்கள். வழித்துணையாக வந்துகொண்டிருப்போர் நமது மூதாதையர்களான சிறு தெய்வங்களும்.... அவர்களின் முன்னோடியான காவல் தெய்வம் பதினெட்டாம்படி கருப்பண்ணசாமியும்தான் என்கிற எண்ணமே லட்சோப லட்சம் மக்களை வாழ வைக்கிறது.

- சொர்ணபாரதி

படங்கள்: மணிமேகலை நாகலிங்கம்



வாசகர்களே! நீங்களும் உங்களின் குலதெய்வங்களைப் பற்றிய வரலாறு, வழிபாட்டு முறைகளை, புகைப்படத்தோடு அனுப்பி மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள இப்பகுதிக்கு எழுதி அனுப்பலாம்.

(ஆர்)

சங்கீத



பள்ளிப் பாடத்தில் பாட்டு!

அரசுப் பள்ளிகளில் கர்நாடக சங்கீதத்தை அறிமுகம் செய்யும் முயற்சியை மேற்கொண்டுள்ளது சர்வ சிக்ஷ அப்யான் (அனைவருக்கும் கல்வி இயக்கம்). இதன் ஓர் அங்கமாக 'இணையற்ற இன்னிசை' என்கிற நூலை, குழந்தைகளுக்காக எழுதியுள்ளார் சித்ர வீணை ரவிகிரண். எளிய அடிப்படைகளை மட்டுமே விளக்கும் இந்த நூலில் சில துதிப்பாடல்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் இரண்டு ரவிகிரணே இயற்றியதாக இருப்பதைத் தவிர்த்திருக்க வேண்டும்.

இந்த நூலுடன் ஒரு செயல்முறை விளக்க சி.டியும் வருகிறது. இவற்றை அடிப்படையாகக்கொண்டு சங்கீத கலைஞர்களே நேரில் சென்று, பள்ளிகளில் செயல்முறை விளக்கம் அளித்தால் குழந்தைகள் பயனடையக்கூடும்.

- ஜானகி



"அதோ போறாரே... அவர் லவ் ஃபெயிலியர் ஆனவர்..."

"அப்படியா...? அவருக்கு எப்போ அவரோட காதலியோட கல்யாணம் ஆச்சு?"

- கே.ஆனந்தன்

சங்கதிகள்!



எட்டி தொட்ட புகழ்க்கனி வெட்டி
விழுங்காது
தட்டி விழுந்ததோர் பரிதாபம்

- இது 'புகழ்' அதிகாரத்தில் இடம்பெறும் குறள் என்று நினைத்தீர்களா? அதுதான் இல்லை! பாம்பே ஜெயஸ்ரீ - இல்லையில்லை,

தெலுங்கு திருவள்ளுவரின் சமாதானம்!

ஸாரி! - அவரை அடிக்கடி நினைவூட்டும் சங்கரி கிருஷ்ணனின் 'அழகே தமிழே' சி.டி.யைக் கேட்டு யாம் எழுப்பிய கூக்'குரள்'!

ஒரு திருக்குறளை விருத்தமாக இசைத்து விட்டு, அதன் பொருளுடன் சற்றாவது பொருந்தும் வகையில் தமிழ்ப் பாடல் ஒன்றைத் தேர்வு செய்து இசைத்திருக்கிறார் சங்கரி கிருஷ்ணன். இந்த சி.டி.க்காக நல்ல ஹோம் ஒர்க் செய்திருக்கிறார். ஆனால், அவர் பாடியுள்ள விதம்தான் பாராட்ட விரும்புவோரையும் அலுப்பூட்டித் தூங்க வைத்துவிடுகிறது.

என்ன செய்ய, தெலுங்கு திருவள்ளுவரான தியாகய்யரின் வார்த்தைகள்தான் நமக்குச் சமாதானம் - 'ராநிதி ராது போநிதி போது!' (நமக்குக் கிடைக்க வேண்டியதுதான் கிடைக்குமே யொழிய, கிடைக்கத் தகாதது என்றுமே கிடைக்காது!)

'பிறவிப் பெருங்கடல்' - கோபால கிருஷ்ண பாரதியின் 'பவஸாகரம்'; 'பற்றுக பற்றற்றான்'- தொண்டரடிப்பொடியின் 'பச்சை மாமலை போல் மேனி'; 'கற்றத்தால்' - நீலகண்ட சிவனின் 'என்றைக்கு சிவ கிருபை வருமோ' என்று ஒரு டஜனுக்கும் மேலான பாடல்கள் இடம்பெற்றிருந்தும் நிறைவு தரவில்லை.

செம்மங்குடி ஆசைப்பட்டாற்போல் குறள்களைப் பாட்டாகப் பாடியிருக்கலாமோ? வாக்குத் தெளிவும் குரல் கம்பீரமும் இருந்திருந்தால் சோபித்திருக்குமோ? மனோதர்ம சங்கீதப் பகுதியைச் சுருக்கியிருக்கலாமோ...? இவற்றையெல்லாம் செய்திருந்தால் இந்தப் புதிய முயற்சி உயர்ந்த ஸ்தானத்தை அடைந்திருக்கும்!

சி.டி.யைத் தயாரித்த கோவை ராஜலக்ஷ்மி ஆடியோ ஒலிப்பதிவு தரத்தில் கவனம் செலுத்த வேண்டும். கமாஸ் கீர்த்தனையில் மந்தரஸ்தாயியிலேயே கூடுதல் ஒலியுடன் கேட்கும் வயலின், பிறகு காணாமல் போய், 'வாரணமாயிரம்' பாசுரத்தில் சம்பந்தமில்லாமல் பி.ஜி.எம்.மாகத் தலைவிரித்தாடுகிறது!

இந்த விமர்சனத்தைப் படிக்கக் கூடிய சங்கரி கிருஷ்ணனுக்கு இதோ ஒரு குறள்:

எப்பொருள் யார்யார் வாய்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு!

- ஜான்னவி



மேற்கொண்டு வேலையைத்
தொடர காசின்றி...
வீட்டு வாசலில்,
குவிக்கப்பட்டிருந்த மணலில்,
அழகாய் வீடுகட்டி முடித்தது -
குழந்தை!

தூறல் கவிதை!

பாரதி மகள்

நான்கு நாட்கள் அவசர வேலையாக வெளியூருக்குச் சென்றுவிட்டு அதிகாலையில் ஊர் திரும்பிக் கொண்டிருந்தவனின் சிந்தனை முழுக்க, உறை பிரிக்கப்படாமல் தனக்கென காத்துக் கிடக்கும் அந்தக் கடிதத்தின்மீதே குவிந்திருந்தது.

எழுத்தாளர் கலையரசியிடமிருந்து தனக்குப் பதில் கடிதம் வருமென, சற்றும் அவன் நினைத்துக்கூடப் பார்த்திருக்கவில்லை!

கலையரசியின் நாவலைப் படித்தபின் கடிதம் எழுத நினைத்தான். கடிதம் எழுதுவதென்றால் அவனுக்கு அப்படியொரு சுகம்! தேர்வு எழுதும் மாணவனின் கடைசி நேரப் பதைபதைப்பும் முனைப்புமாக அந்தக் கடிதத்தை எழுதி, கலையரசிக்கு அனுப்பி வைத்தான்.



அவனுக்கும் கடிதத்துக்கும் சிறு பிராயத்திலிருந்தே மிக நெருங்கிய ஒரு தொடர்பு இருந்தது.

கிராமத்திலிருந்து கை நடுக்கத்துடன் தாத்தா எழுதிய அஞ்சலட்டைகளை, அவனை விட்டுப் படிக்கச் சொல்லிக் கேட்பாள் அம்மா. அவன் எழுத்துக்கூட்டி அந்தக் கடிதங்களைப் படித்து முடிக்கும் பெரும்பாலான தருணங்களில், அம்மாவின் கன்னங்களில் கண்ணீர் கோடிட்டிருக்கும். அம்மாவின் கண்ணீருக்கான காரணம் என்னவாக இருக்கும் என்று ஆராய்பவனுக்கு, அந்த அஞ்சலட்டைகள்தான் வினாவுக்கான விடையாகப்படும்.

தாத்தாவின் கடிதங்களை ஒற்றைக் கம்பியில் குத்தி வைத்து, கவனமாய் குடிசையின் ஒரு மூலையில் தொங்கவிட்டிருப்பாள் அம்மா. அவளது பத்திரப்படுத்துதல் அந்த வீட்டைப் பொருத்தவரை அடுப்படிதான்!

தாத்தாவின் மரணத்துக்குப் பின்பானதொரு சமயத்தில், அடுப்படிப் புகையில் பழுப்பேறிப் போயிருந்த அந்தக் கடிதக் கற்றையை எடுத்துப் படித்த சமயத்தில்தான், அவனுக்கு நினைவுகளைப் புதையலாக்கும் கடிதங்கள் மீதான ஒரு பிடிப்பு தீவிரமாகத் தொடங்கியது.

கலையரசிக்கு எழுதிய கடிதம், கிணற்றில் போட்ட கல்லாகிப் போகும் என்று நினைத்திருந்தவனுக்கு, பதில் வந்திருக்கிறது என்ற தகவலே ஆச்சர்யம் அளித்தது.

கலையரசியின் கடிதத்தைப் பார்த்ததன் களிப்பு ஒரு பக்கமும், அந்தக் கையெழுத்தும் தனக்காக மட்டுமே பிரத்யேகமாய்

கொற்றவன்

புதையல்

எழுதப்பட்டிருந்ததன் பெருமிதம் இன்னொரு பக்கமுமாய் அவன் மனத்தைப் புரட்டிப் போட்டு விளையாடிக்கொண்டிருந்தது.

'உங்களது கடிதம் வந்து மிகமிக நீண்ட நாட்களாகிவிட்டன. உங்களது கடிதம் என்னை தினமும் உறுத்துப் பார்க்கிறது இந்தக் கணம் வரை!' என்று படித்துவிட்டு நிறுத்தியவனுக்கு, உதடுகள் குறும்பாகச் சுழித்துக் கொண்டன.

தன் கடிதத்துக்குப் பதில் கடிதம் எழுத வேண்டுமென்ற எண்ணம் தொடர்ந்து உறுத்திக்கொண்டிருக்காவிட்டால், இத்தனை நாட்கள் கழித்து கலையரசியிடமிருந்து இந்தக் கடிதம் வந்திருக்குமா என்ன? மீண்டும் கடிதத்தின் வரிகளைக் கண்களால் தடவினான்.

வெறும் புள்ளிகளும், கோடுகளும் நிறைந்ததா எழுத்து? கூடுவிட்டுக் கூடு பாயும் மந்திர உச்சாடனங்களாய் அனைத்தையும் ஆள்கிறது எழுத்து!

''ஊரிலேர்ந்து எப்பண்ணே வந்தீங்க?'' கேட்டுக்கொண்டே தன் கைபேசியில் விரல்களைத் தாவியோட விட்டபடி வந்து நின்ற சங்கர், அவன் சிந்தனையைக் கலைத்தான்.

''கருக்கல்லே வந்தேன்ப்பா!'' என்றவன், சங்கரின் விரல்கள் விறுவிறுவென அந்த அலைபேசியில் விளையாடிக் கொண்டிருந்த விதத்தை நோட்டமிட்டான்.

பெயரளவுக்குத் தன்னை விசாரித்துவிட்டு, அவன் தன் கைபேசியைத் தோண்டிக்கொண்டிருந்தது அவனுக்கு என்னவோ போலிருந்தது.

''கேம்ஸ் ஏதும் விளையாடறியா செல் ஃபோன்ல?'' என்றான்.

''இல்லண்ணே, நேத்து எங்க அக்காவுக்குக் குழந்தை பிறந்திருக்கு. அதான் அதுக்கு ஒரு கிரீட்டிங் மெஸேஜ் அனுப்பினேன். இப்போ என் ஃபிரண்டுக்கு ஒண்ணு அனுப்பறேன். அவங்க பாட்டி நேத்து செத்துப் போயிட்டாங்களாம். அதுக்கு 'என்னால இன்னைக்கு வரமுடியாது. மன்னிச்சுக்கடா'ன்னு அவனுக்கு ஒரு மெஸேஜ்!'' என்று பொசுக் பொசுக்கென்று அழுத்திக்கொண்டிருந்த சங்கர், எந்திர மனிதன் போலத் தெரிந்தான். பகிர்வுகள் எல்லாம் துரித கதியில்தானா இனிமேல்? ஒரு கேள்வி அவன் முன் குதித்தது.


சங்கரின் கைபேசியிலிருந்து 'டிங்' என மெல்லமாய் ஒரு சத்தம் வந்ததைத் தொடர்ந்து, ''மெஸேஜ் போயிடுச்சு!'' என்றான் சங்கர்.

உணர்வுகளைக் காற்றோடு காற்றாக அனுப்பி காணாமல் போகச் செய்யும் இந்தத் தலைமுறைகளுக்குக் கடிதம் என்பது கண்காட்சிப் பொருளாகி விடுமோ? புருவம் நெருக்கிய யோசிப்புடன், எழுந்து வீட்டுக்குள் சென்றான். கடிதங்கள் அற்றுப் போய்க்கொண்டிருக்கும் சமயத்தில், ஒரு கதை சொல்லியிடமிருந்து கரிசனத்துடன் வந்த அந்தக் கடிதத்தை, அம்மா புதையல் போலக் காத்து வந்த கடிதங்கள் தாங்கிய கம்பியில் பத்திரமாய்க் குத்தி வைத்து வாசலுக்கு வந்தான்.

எதிர்ப்புற வேப்பமரத்திலிருந்து காகம் இப்போது சத்தமாய் கரைந்ததில் அதை ஏறிட்டான். அது கத்துவதை நிறுத்திவிட்டு தலையைச் சாய்த்து அவனைக் கிழ்ப்பார்வையுடன் பார்த்தது.

'எல்லா வீடுகளிலும் ஏதாவது ஒன்று பூதம் காக்கும் புதையலென பாதுகாக்கப்பட்டு வருவது நான் அறியாததா என்ன?' என்று கேட்கும் தோரணையில் அதன் பார்வை இருந்தது.


ரிலாக்ஸ்... ப்ளீஸ்!




"என் கணவர் தூக்கத்தில பேசுறார் டாக்டர்"

"தூக்கத்திலேயாவது பேசிட்டுப் போகட்டும்... விடும்மா!"

– ஜி.லட்சுமிபதி, சென்னை







'நோ
...மென்ட்ஸ்'!

- பாபநாசம்
அமல்ராஜ்

திரை மறைவு ரகசியம்

தயாரிப்பாளர் சந்திரகாந்த் ஜெயினுடைய அலுவலகம் பரபரப்புடன் காணப்பட்டது. மேலாளர் சீனிவாசன் வங்கியிலிருந்து கொண்டு வந்த பணத்தை அறையின் கவரோடு உள்ளொடுங்கியிருந்த லாக்கரில் வைத்தார். காசோலை புத்தகத்தை முதலாளியின் மேஜை மீது வைத்தார். மற்ற ஏற்பாடுகள் சரியான முறையில் நிறைவேற்றப்பட்டுவிட்டனவா என்று சரி பார்த்தார். நியதிகள் மீறப்படாத ஒழுங்கும் கண்டிப்பும் கொண்ட தயாரிப்பு நிறுவனம், திருவாளர் ஜெயின் பிக்சர்ஸின் நிறுவனம் என்பது சினிமா உலகம் முழுக்க அறிந்த உண்மை.



'படம் பண்ணினா ஜெயினுக்குப் பண்ணணும்பா' என்பது இயக்குநர்களின் மேலுமொரு கனவாய் இருந்தது.

''சீனிவாசன், நம்ம கம்பெனியோட அடுத்த ப்ராஜெக்ட் ஆரம்பிச்சுட வேண்டியதுதான்.''

''சார், கதை...''

''கேட்டுட்டன்பா, எனக்குத் திருப்தியாயிருக்கு.''

'சரிதான். கதையை அவர் மட்டும்தான் கேட்பார். கூட யாரையும் வைச்சுக்க மாட்டார். யார்கிட்டயும் அபிப்பிராயம் கேக்க மாட்டார். முடிவெடுத்தா மாத்திக்கவும் மாட்டார்.'

''சீனிவாசன், நாளைக்குக் காலைல பேங்க்குக்குப் போய் பணம் எடுத்துட்டு வந்துடுங்க. அட்வான்ஸ், பாதி பணமாகவும், பாதி செக்காகவும் கொடுத்துடலாம். டைரக்டரை நாளைக்கு வரச் சொல்லியிருக்கேன்.''

''சார்... டைரக்டர் யார்...?''

''ரவி சென் ராய்.''

''அவரா...?''

''ஏன் அவருக்கென்ன?''

''ஒண்ணுமில்லை. நல்ல டைரக்டர் தான். ஆனா.. போன படம் டெஃபிசிட் ஆச்சே...''

''அது அந்தக் கம்பெனியோட தப்பு சீனிவாசன். படத்துல ஏதாவது தப்பு சொல்ல முடியுமா?''

முதலாளியின் கேள்விக்கு சீனிவாசனிடம் பதிலில்லை. பதிலை எதிர்பார்த்துக் கேட்கப்பட்ட கேள்வியல்ல என்பதை உறுதிசெய்வது போல, சந்திரகாந்த் ஜெயின் மேலும் நிற்காமல் போய் காரில் ஏறிவிட்டார்.

மறுநாள்... அலுவலக போர்டிகோவில் கார் நிற்பது தெரிய, யாருடையது என்று யோசித்தார் சீனிவாசன். 'இயக்குநர் ரவி சென்ராய் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு வருவார் என்று தானே முதலாளி சொல்லியிருந்தார்...'

அலுவலகத்தில் நுழைபவரின் உருவம் திரையில் தெரிய, 'அட, ரங்கநாதன் சார்'. தயாரிப்பாளர் சங்க நிர்வாகிகளில் ஒருவரும் பிரபல தயாரிப்பாளருமான திரு. அரங்கநாதனை வரவேற்பதற்காக எழுந்து முன் அறைக்கு வந்தார்.

''என்ன சார், ஆச்சர்யமா இருக்கு... சங்கத்துக்குத் தேர்தல் வருதா...?''

''யோவ் சீனிவாசன், இந்தக் குத்தலுக்கு ஒண்ணும் குறைச்சலில்லையா உன்கிட்ட. நீ புரொடக்ஷன் மேனேஜரா வேலை பாக்குறதவிட வசனகர்த்தாவா மாறிடலாம்யா...''

''சார், எவ்வளவோ பேரை கரையேத்தி விட்டிருக்கீங்க. இந்தக் கணக்கு எழுதற கையையும் கதை எழுதற கையா மாத்திப் புடுங்களேன்.''

''அதை விடுப்பா, இண்டஸ்ட்ரியில பழம் தின்னு கொட்டை போட்ட உன்னைப் போல ஒரு மேனேஜர் இருந்தும், எப்படிய்யா ரவிசென்ராயை டைரக்டராப் போட்டீங்க?''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''அதுதான் கோடம்பாக்கம் முழுக்கத் தெரிஞ்சிருக்கே!''



■ வே.எழிலரசு ■

சீனிவாசனுக்குள் வருத்தம் முளை கட்டியது. தான் பணியாற்றும் நிறுவனம், எந்த இயக்குநரைத் தேர்வு செய்து தனது அடுத்த தயாரிப்பை நிகழ்த்தப் போகிறது என்ற செய்தி, நிறுவனத்தில் முதன்மை மேலாளரான தன்னைத் தவிர எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது.

''அரங்கநாதன் சார், இன்னும் ஒரு மணி நேரத்தில் அட்வான்ஸ் வாங்க அவர் வந்துடுவார். முதலாளிகிட்ட ஏதாவது பேசணும்னா பேசிட்டு, டைரக்டர் வர்றதுக்கு முன்னாடியே கிளம்பிடுங்க.''

''நீ எதுக்குச் சொல்றன்னு புரியுதுய்யா'' என்றார் அரங்கநாதன்.

அவரை அமரச் செய்துவிட்டுத் தன் அறைக்குப் புறப்பட எழுந்து ஹாலுக்கு வரவும், முதலாளி உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

''சார், உள்ளே அரங்கநாதன் சார் காத்துக்கிட்டிருக்கார். உங்ககிட்ட ஏதோ முக்கியமான விஷயம் பேசணுமாம்.''

என்னவாக இருக்கும் என்ற பலத்த சந்தேகத்தோடு சந்திரகாந்த் ஜெயின் தன் அறையில் நுழைய கதவு தானாக சாத்திக்கொண்டது.

அரங்கநாதனை வெளியே வாசல் வரை வந்து வழியனுப்பினார் ஜெயின். முதலாளியின் முகத்தில் நேற்று பார்த்த உறுதியும் தெளிவும் இல்லாமலிருந்தது.

கடிகாரத்தைப் பார்த்த சீனிவாசன் முதலாளியிடம் ''சார், பணத்தை எடுத்து உங்க அறையில வைச்சுடட்டுமா?''

''வேண்டாம். 'அது' அங்கேயே இருக்கட்டும்.''

''சார்! மாற்று யோசனை இருந்தா சொல்லுங்க, ஃபோன் பண்ணி டைரக்டரை வர வேண்டாம்னு சொல்லிடறேன்'' என்று சொல்லும்போதே, வாசலில் வந்து நின்ற ரேவாவிலிருந்து இறங்கினார் இயக்குநர் ரவி சென்றாய். பக்கத்து இருக்கையிலிருந்து ஒரு பெரிய வண்ணத்தாள் சுற்றிய பரிசுப் பெட்டியை எடுத்தார் இயக்குநர்.

தன் கையில் உள்ள வண்ணப் பெட்டியை பவ்யமாக தயாரிப்பாளரிடம் கொடுத்துவிட்டு, இரு கைகூப்பி வணக்கம் சொன்னார்.

பதிலுக்கு வணங்க முடியாத ஜெயின், பெட்டியை அவசரமாக சீனிவாசனிடம் கொடுத்துவிட்டு, வணக்கம் சொல்லிவிட்டு, இயக்குநரை அழைத்துக்கொண்டு உள்ளே நுழையும்போது, ''சீனிவாசன் நீங்களும் உள்ள வாங்க'' என்றார். சீனிவாசனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. முதலாளி அமர்ந்தபிறகு, இயக்குநர் அமர்ந்தார். சூழலையே வெளிச்சமாக்கும் ஒளிப்புன்னகையை இயக்குநர் முகத்தில் அப்படியே 'ஃப்ரீஸ்' செய்திருந்தார்.

சீனிவாசன் கையிலிருந்த பரிசுப் பெட்டியை முதலாளி பிரிக்க ஆரம்பித்தார். இயக்குநர் ரவி சென்றாய் யாரைப் பார்க்கச் சென்றாலும் ஏதாவதொரு பரிசுப் பொருளோடுதான் போவார். அந்தப் பரிசுப் பொருட்கள், வார இதழ்களின் பெட்டிச் செய்திகளாக மாறக்கூடிய சுவாரஸ்யங்கள் கொண்டவை என்பது கனவுத் தொழில் வெளியெங்கும் பிரசித்தம்.

பெட்டி, பெட்டிக்குள் பெட்டி என சிறிதாகிய அட்டைப் பெட்டிகளின் இறுதி

ஆறல் கவிதை

– சாயா

புரியாத கேள்விகளுக்கும்
தெரிந்த விடைகளை எழுதிவிட்டேன்
மதிப்பெண்களில் முடங்கியுள்ள
என் எதிர்காலம்
என்னைப் புரிந்து கொள்ள முயலாத
ஆசிரியர் கையில்!

– 'வர்ணம்' திரைப்படத்தில் ஒரு காட்சி

யில், சித்திர வேலைப்பாடுகளோடு கூடிய ஒரு மரப்பெட்டி இருக்க, அதை ரசித்துப் பார்த்தார் ஜெயின். மரப் பெட்டியை மெல்லத் திறந்தார். உள்ளே சிவப்பு வெல்வெட் அணிந்திருந்த அதன் கூட்டில், சின்னதாய் ஒரு கண்ணாடிச் சிமிழ். அந்தச் சிமிழின்



மையத்தில் ஒரு பீடமும் அந்தப் பீடத்தின் மேல் ஒரு கோதுமை மணியும்!

ஜெயின் சிமிழைப் பார்த்துவிட்டு இயக்குநரைப் பார்க்க, இயக்குநர் தன் பாக்கெட்டில் கைவிட்டு எதையோ எடுத்தார். கையோடு ஒரு செல்ஃபோனும், பூதக் கண்ணாடியும் வந்தன. செல்ஃபோனை மேஜை மீது வைத்துவிட்டு, பூதக் கண்ணாடியைத் தயாரிப்பாளரிடம் நீட்டினார். பூதக் கண்ணாடியைத் தன் கண்ணருகே வைத்து கண்ணாடிச் சிமிழைப் பார்த்து, ''வாவ்... வாட் எ கிரேட் ஒர்க்'' என்றார் ஜெயின்.

சீனிவாசன் தன் இயல்பை மீறி, பூதக் கண்ணாடியை முதலாளியின் கையிலிருந்து வாங்கி தானும் பார்த்தார். கோதுமை மணியில் தவக் கோலத்தில் அமர்ந்திருக்கும் மகாவீரரின் நுட்பச் செதுக்கல் துல்லியமாக காட்சியளித்தது.

''டைரக்டர் சார், எங்க மரபுப்படி தீர்த்தங்கரர்களின் திருஉருவங்களை எப்பவுமே பிரம்மாண்டமாத்தான் செஞ்சு வைச்சிருப்போம். நீங்க... கோதுமை மணியில...''

''சார், எல்லா பிரம்மாண்டங்களும் ஒரு சின்ன கோதுமை மணியிலயோ, அரிசி மணியிலயோதான் ஆரம்பிக்குது. இது இல்லாம அது இல்லைங்கற பேருண்மையை, இந்தக் கலை வெளிப்படுத்தும்னு நம்பறேன்.''

இயக்குநரின் செல்ஃபோன் மணி ஒலித்தது. எடுத்துப் பார்த்துவிட்டு மேஜை மீதே வைத்தார்.

''பரவாயில்லை பேசுங்க.''


''இருக்கட்டும் சார், என்னோட உதவியாளர்தான்.''

மணி அடித்து முடித்த பிறகு ஒரு நிமிடம் கழித்து எடுத்து பொத்தானை அமுக்கி, ''ஜெகன் கூப்பிட்டீங்களா?'' என்றார் இயக்குநர்.

''சார் மன்னிச்சுடுங்க'' என்று தயாரிப்பாளரிடம் சொல்லிவிட்டு ஐந்து நிமிடம் பேசி விட்டு, ஃபோனை வைத்தார்.

இயக்குநரின் விநோத செயல்பாட்டை யோசித்தபடி ஜெயின் அமர்ந்திருந்தார். இயக்குநரைப் பார்த்து, ''ஃபோன் வந்தப்ப நீங்க பேசலை. ஆனா, அதே நம்பருக்கு ஃபோன் பண்ணிப் பேசறீங்க...''

''சார், என்னோட அசிஸ்டெண்ட்ட சில தகவல்களைத் திரட்டி வர்றதுக்காக, பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்துக்கு அனுப்பியிருந்தேன். அது சம்பந்தமாதான் ஃபோன் பண்றாருன்னு ஊகிச்சுட்டேன். டைரக்டருக்கு மிஸ்ட் கால் கொடுக்காம இருக்



''பாதி ஆபரேஷனில் சீரியஸா என்ன டாக்டர் தேடறீங்க?''

''பேஷன்டோட கிட்னியை இப்பதான் டிரேலே எடுத்து வைச்சேன். அதுக்குள்ளே காணலே!''

- ஜி. லட்சுமிபதி

கணுங்கறது.

என் அசிஸ்டென்ட் என் மேல் காட்டற மரியாதை; என் வேலையா போயிருக்கற அவருக்கு, அவரோட சொந்தக் காசு செலவழிஞ்சுடக் கூடாதுங்கறதுக்காக அவருக்கு நான் ஃபோன் பண்ணிப் பேசினது, அவரோட உழைப்புக்கு நான் காட்டற மரியாதை.''

சந்திரகாந்த் ஜெயின், தனது நிர்வாகத் தயாரிப்பாளர் சீனிவாசனைப் பார்த்தார். ஓர் அடர்த்தியான நிசப்தமின்மை அறையெங்கும் அரூப வளையங்களை வரைந்து கொண்டிருந்தது.

''சீனிவாசன், பணத்தை எடுத்துட்டு வாங்க. அந்த செக்-ஐ ஃபில் பண்ணுங்க'' என்றார்.

அட்வான்ஸ் தொகையைப் பெற்றுக் கொண்டு, ஒப்பந்த பக்கங்களில் கையெழுத்திட்டுவிட்டு இயக்குநர் ரவி சென்ராய் புறப்பட்டபிறகு, சந்திரகாந்த் ஜெயின் சீனிவாசனிடம் சொன்னார்:

''ரங்கநாதன் சொன்ன விஷயங்களைக் கேட்டு முதல்ல கொஞ்சம் குழப்பமாயிடிச்சு சீனிவாசன். ஆனா, அந்த ஃபோன் கால்க்கு அவன் கொடுத்த விளக்கம் இருக்கே... அப்ப முடிவு பண்ணிட்டேன். தனக்குக் கீழே வேலை பார்க்கறவங்களோட பணம் வீணாகக் கூடாதுன்னு நினைக்கறவன், தனக்கு மேல இருக்கறவங்களோட பணத்தையும் வீணாக்க மாட்டான்யா. அவன் நாணயமான ஆள்தான்யா!'' என்றார். சீனிவாசன் ஆமோதிப் பதுபோல் தலையாட்டினார்.

கதை இங்கு முடிந்துவிட வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு, ஒரு உபரி குறிப்பு:

இயக்குநர் ரவி சென்ராய் தயாரிப்பாளர் சந்திரகாந்த் ஜெயின் அலுவலகத்துக்குப் புறப்படும் முன், தன்னுடைய கதை விவாத அறையில் தன் உதவியாளர்களிடம் நிகழ்த்திய உரையாடல்:

''ஜெயின் சார் நம்ம கதையை ஓ.கே பண்ணிட்டார். ஏற்கெனவே நாம முடிவு செஞ்ச மாதிரி, முப்பத்தாறாவது சீன்ல வர்ற மீன் மார்க்கெட் கான்செப்ட்டை அவர்கிட்ட சொல்லாமத் தவிர்த்திட்டேன். அதுக்குப் பதிலா, வேற சீன் பிடிங்க. கொஞ்சம்கூட கவிச்சி இல்லாம.... நல்லா ஞாபகம் இருக்கட்டும் சீன் கவிச்சியில்லாம இருக்கணும். அப்புறம் ஜெகன்... நீ என்ன பண்றே... ஒரு பன்னிரண்டே காலுக்கு எனக்கு ஃபோன் பண்ணு.''

''ஏன் சார்...?''

''ஏன்னு கேக்காத... சொன்னதைச் செய்... நம்ம கதையில வர்ற கேரக்டர்லைவிட ஜெயின் சாரோட கேரக்டரை ரொம்ப ஸ்டடி பண்ணியிருக்கேன்; ஒரு ரிசர்ச் பேப்பர் சப்மிட் பண்ற அளவுக்கு. அதனால அவர் ஆஃபீஸ்ல வெச்சு ரெண்டு சீன் பண்ணப் போறேன். அதுக்கு வசனமெல்லாம் நான் பாத்துக்கறேன். நீங்க முப்பத்தாறாவது சீனை யோசிங்க. ஜெகன், நீ சரியா 12 மணி பதினஞ்சு நிமிஷத்துக்கு ஃபோன் பண்ற... ஓ.கேவா?''

அருள்வாக்கு

தர்மம்

தர்மம் என்றால் என்ன? மனிதராகப் பிறந்த எல்லோருக்கும் பசி, தாகம் இருக்கிறது. அவர்கள் வசிக்க ஓரிடம் வேண்டியிருக்கிறது. குளிர், வெயிலிலிருந்து காப்பாற்றிக்கொள்ளவும், மானத்தை ரட்சித்துக்கொள்ளவும் ஆடை அணிய வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் மனிதன் வசதி செய்துகொள்ள வேண்டும். ஏதோ ஒரு தொழிலைச் செய்தே, இதற்கு வசதி செய்துகொள்கிறான். அத்தியாவசியமான சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்வதோடு, ஒவ்வொரு மனிதனும் பிறர் விஷயமாகச் சில கடமைகளை நிறைவேற்றவும் வேண்டியிருக்கிறது. ஒவ்வொருவனும் ஏதோ ஒரு குடும்பத்தில் பிறப்பதால் அந்தக் குடும்பத்தில் இருப்பவர்களுக்கும், பிற்பாடு கல்யாணமானதும் மனைவி மக்களுக்கும் பொறுப்பெடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. தன்னுடைய சமுதாயம், தேசம் இவற்றுக்கெல்லாம் மனிதன் கடமையாற்ற வேண்டியிருக்கிறது. பலவிதத்தில் சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளலாம்; பலவிதத்தில் வீடு, நாடு இவற்றுக்கான கடமைகளைச் செய்யலாம். ஆனால், மனத்துக்குத் தோன்றியபடியெல்லாம் இவற்றைச் செய்யாமல், எவருக்கும் தீங்கு விளைவிக்காத விதத்தில், அதீதமான காமமும் குரோதமும் கலக்காமல் செய்ய வேண்டும். தன்னையும் மேம்படுத்திக்கொண்டு, அனைவரையும் உயர்த்துகிற விதத்தில் தொழிலையும், கடமையையும் செய்ய முடியும். இவ்வாறு இக உலகக் காரியங்களை, சம்பந்தப்பட்ட அனைவரது ஆத்ம அபிவிருத்திக்கும் அனுசரணையாகச் செய்வதற்குத்தான் 'தர்மம்' என்று பெயர்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்யா சுவாமிகள்



திருநெல்வேலி மதுரை நெடுஞ்சாலையில் கெங்கைகொண்டான் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி, கரிசல் குளத்துக்கு வழிகேட்டால், ஏற இறங்க ஒரு ஜந்துவைப் பார்ப்பது போலப் பார்க்கிறார் பெட்டிக் கடைக்காரர்.

'அதோ தெரியுதே அந்தப் பாதையில் இரண்டு மைல் நடந்தால் வலது பக்கம் பாழடைந்த பஸ் ஸ்டாப் தெரியும். அங்கேயிருந்து தெரியும் ஒரு புதர்பாதையில் இன்னும் இரண்டு மைல் நடந்தால் கரிசல்குளம் வரும்' என்று ஒரு வழியாய்த் தனிமைக் கிராமத்தின் வரைபடம் தருகிறார்.

நடக்க ஆரம்பிக்கிறோம். மனப்பீதியை விரட்ட ஒரு சினிமா பாடலை உரக்கப் பாடியபடி...

ஆலமரத்தின் விழுதுகளால் மூடிக் கிடக்கும் கோயிலின் புழுதி மண்டிய பகுதி நிராதரவை அறிவிக்கிறது. பலருக்குக் கல்வி போதித்த கரும்பலகைகள், இது பள்ளிக்கூடம்தான் என்பதை உணர்த்துகின்றன. கண்ணில்படும் இடமெங்கும் கருவேல மரங்கள், புதர் மண்டிக்கிடக்கும் வழிப்பாதை, சிதிலமடைந்த வீடுகள் இவையெல்லாம் மனித நடமாட்டமே இல்லாத பகுதி என்பதைத் தண்டோரா போடுகின்றன. ஒரு வீட்டு வாசலை ஒட்டிய திண்ணையில் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்த வயதானவருக்கு ஆறுதலாய் ஒரு வானொலிப் பெட்டி.

"ஐயா வாங்க, எங்கிருந்து வாரீங்க?" என்றவரிடம், "உங்களைத்தான் பார்க்க வந்தேன். பகலிலே உங்கள் ஊருக்கு நடந்துவர பயமாக இருக்கிறதே" என்று சொன்னவுடன், பெரியவர் "1996 வரைக்கும் இங்கே 70 தலைக்கட்டுகள் இருந்தோம். இந்த மண்ணில் விளைந்ததை வைத்து தாயா பிள்ளையாய் எல்லோரும் பழகி வாழ்ந்தோம்.

96ல் ஒரு சாதிச் சண்டைவர அறுவா, வேல்கம்பு பறந்தது. சண்டையில் ஒருத்தன் தலையை வெட்டி, தலை வேறா முண்டம் வேறா கோயில் வாசலிலே வெட்டிப்போட்டானுங்க. அன்றைக்கு அதைக்கண்டு பயந்த சனங்க, கையில் கிடைத்த பொருட்களை எடுத்து அவுத்துப்போட்ட நெல்லிக்காய் மூட்டையாய்ச் சிதறிப்போச்சு. எங்க பிள்ளைகள் இரண்டு பேருங்கூட எங்களை விட்டுட்டுப் போயிட்டானுக. போலீஸ் வந்து விசாரிச்சப்போ பதில் சொல்லக்கூட நாதியத்துக் கிடந்தது இந்த ஊர். என்னையும் விசாரிச்சாங்க. எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு சொன்னேன். `ஊரே காலியாய்க் கிடக்கு. நீ மட்டும் ஏன்



ஆளில்லா



இருக்க'ன்னு விரட்டுனாங்க. இன்னைக்கும் இந்த போலீஸ் பாசம் ஒருமுறை எங்கிட்ட வந்து அவுங்க புத்தகத்தில்

கைநாட்டு வாங்கிட்டுப் போகுது. எங்க பூட்டன் பாட்டன் அப்பன் வாழ்ந்த வீட்டை விட்டுப்போனா, பிணமாப் போகணும். அதுவரை இந்த மண்ணுதான். மண்ணை நம்பி இம்புட்டுக் காலம் ஓடிடுச்சி. இரண்டு பசுமாடும் 7 லிட்டர் பால் கறக்கும்; காலைக்கும் அந்திக்கும். கெங்கைகொண்டான் சொசைட்டில கொண்டு கொடுப்பேன். பத்து நாளைக்கு ஒருவாட்டி பணம் தருவாங்க. இத்தனை வருஷம் இந்த மண்ணிலே இருந்தாச்சு. இன்னும் எத்தனை காலம் ஆயுசு கிடக்கோ. உயிர் இந்த மண்ணில்தான் போகணும்'' என்றார்.

ஊர்ஜனம், உறவுகள் விட்டுப் போனபின் 5 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு மனித நடமாட்டமோ பேச்சுத் துணையோ இல்லாத தனிமையில் மூழ்கி நீவென தனித்திருக்கும் இந்த கரிசல்குளத்தில் 12 ஆண்டுகள் தனிமையில் வாழும் ராமசுப்பு, கருப்பாயியின் மன உறுதி, பெரும் மலையாய்த் தோன்றுகிறது நம் கண் களுக்கு.

செய்தி சித்திரம்: **த.இ.தாகூர்**



கிராமத்து ராமசுப்பு!



டிஜிட்டல் கேன்டீன்-12

சினிமா என்கிற மின்சாரக் கனவுக்காக தாமஸ் ஆல்வா எடிசன் முதல் மூவி கேமராவை உருவாக்கி, அதை ஆணி அடித்ததுபோல் ரயில்வே ஸ்டேஷனில், கடை வீதியில் ஓர் இடத்தில் நிறுத்தி வைத்தார். வருடம் 1890. படம் காட்டும் புரொஜக்டரும் எடிசன் தயாரிப்பே. ரயில் வந்து நிற்பது, வீதியில் ஜன நடமாட்டம் போன்ற காட்சிகளைப் படம் பிடித்து அதைத் திரையில் காட்டிய 'நகர்கிற படம்' பிய்த்துக் கொண்டு ஓடியது. எடிசனின் உதவியாளர் எட்வின் போர்ட்டர், படச் சுருளை வெட்டி ஒட்டி சினிமாவைக் கதை சொல்ல வைத்தது 1903-ல். தீ பிடித்தல், மணி அடித்தபடி ஃபயர் எஞ்சின் வருவது எனக் காட்சிகளைத் தொகுத்து டாக்குமெண்டரி உருவாக்கினார் போர்ட்டர். அதை ரசிகர்கள் சூப்பர் ஹிட் ஆக்கிய நாள் முதல், இன்றுவரை சினிமாவின் அசல் ஹீரோ எடிட்டர்தான்.



எடுத்த படத்தை (நெகட்டிவ்) ஒரு பத்து பதினைந்து வருடங்களுக்கு முன்பு வரைகூட, பய பத்திரமாக காப்பி எடுத்து வைத்துக்கொண்டுதான் எடிட்டர்கள் வேலைக்கு உட்கார்வார்கள். இன்றோ நான்-லீனியர் எடிட்டிங் இல்லாத சினிமாவோ, சின்னத் திரைக் காட்சியோ இப்போது அரிதிலும் அரிது.

படம் எடுத்து, பிரதி செய்து, இதமாகப் பதமாக கத்தரி போட்டு, கட்டம் கட்டமாக நடந்த பழைய லீனியர் எடிட்டிங் போல இல்லாமல், வேகமாகச் செய்து முடிக்கக் கூடியது நான்-லீனியர் முறை. ஏவிட் போன்ற கம்ப்யூட்டர் மென்பொருட்கள் இதற்காகவே உண்டு. எடுத்த படத்தைக் கம்ப்யூட்டரில் சேகரித்து வைத்து, ஃப்ரேம் ஃப்ரேமாக ஓடவிட்டு எடிட் செய்து, இயக்குநர் பிரதியான 'டைரக்டர்ஸ் கட்' கடகட எடுத்துக் கொடுக்க இது வழி செய்வதால், எடிட்டர்கள் காட்டில் மழை.

மணிக்கணக்காக ஓடக்கூடிய படச் சுருளில், வினாடியின் இருபத்து நாலு பங்கு நேரம் மட்டுமே திரையில் தோன்றும் ஒரு குறிப்பிட்ட ஃப்ரேமை அடையாளம் காண்பது எப்படி? சிம்பிள். படத்தை எடுத்து, டிஜிட்டைஸ் செய்து கம்ப்யூட்டரில் சேகரிக்கும்போதே ஒவ்வொரு காட்சியின் ஃப்ரேம்கள் அடையாள எண்ணோடு பதியப்படும்.

திரைச் சிற்பி!

இரா.முருகன்



இடம் பெற வேண்டிய ஷாட்கள், எங்கே தொடங்கி எங்கே வரை என்ற முடிவெடுத்து தேர்ந்தெடுக்கப்படும். ஷாட்களின் ஆதி அந்தமான ஃப்ரேம் பற்றிய தகவல்களை கம்ப்யூட்டரே துல்லியமாகக் குறித்து வைத்து, எடிட் தீர்மான பட்டியல் (EDL - Edit Decision List) உருவாக்கிவிடும். இதைச் செப்பனிட்டு, கடைசிக் கட்ட பட்டியல் உருவாக்கிக் கொண்டு, டைரக்டரும் எடிட்டரும் ஜுட் சொல்ல, ஒரிஜினல் இதே படிக்கு எடிட் செய்யப்பட்டு தீபாவளி ரிலீஸுக்குப் (கோர்ட் கேஸ் இல்லாமல் இருந்தால்) படம் ரெடி.

வீடியோ எடிட்டிங் கார்ட், பட எடிட்டிங்குக்காகவே விசேஷச் சில்லுகள் பொருத்தித் தயாரிக்கப்பட்ட கம்ப்யூட்டர்கள் என்று விலையைப் பற்றி யோசிக்காமல் முதலீடு செய்து, அவற்றை இயக்கவும் தெரிந்தால் டிஜிட்டல் எடிட்டிங் சும்மா ஜுஜுபி.

கிராஃபிக்ஸ், விஷுவல் எஃபெக்ட்களுக்கான டம்மியைப் படத்தில் இணைப்பது, சமயங்களில் ஒலி, இசைத் துணுக்குகளைச் சேர்த்து ஒழுங்குபடுத்துவது போன்ற வேலைகளெல்லாம் சேர்த்த பிறகு சாவகாசமாக ஸ்பெஷல் எஃபெக்ட் குழுக்கள் முடிவான படப்பிரதியில் கைவரிசையைக் காட்டி அதை முழுமையாக்கும்.



இவையெல்லாம் உதவி எடிட்டர்கள் செய்யக்கூடிய பணிகள். நான்-லீனியரின் சுவை கண்டு எடிட்டர் பதவி உயர்வே வேண்டாம் என்று, வாழ்க்கை முழுக்க அசிஸ்டெண்ட் எடிட்டராகவே இருக்க ஹாலிவுட்டில் நிறைய டெக்னீஷியன்கள் தயாராம்! எடிட்டர் ப்ரமோஷன் கொடுத்தால் கோபித்துக் கொடி பிடிக்கவும் தயங்கமாட்டார்கள். நமது கோடம்பாக்கத்து நிலவரம் சரியாகத் தெரியவில்லை.

22.6.08 முதல் 28.6.08 வரை

மேஷம்: பழகுவதற்கு இனிய மேஷராசிக்காரர்களே! உத்யோக உயர்வும் அதனால் பண முன் னேற்றமும் அதைத் தொடர்ந்து, புதிய தொழில்சிந்தனையும் உங்க சூழலே சூப்பராகி மனசும் குஷி யாகி குடும்பம் சந்தோஷத்தில் திளைக்கும் எக்ஸலெண்ட் வீக் இது. ராகு / கேது / சனி மூணு பேரையும் வணங்கிக்கங்கோ. நான் முந்தி, நீ முந்தின்னு வாழ்த்தை வாரித் தருவாங்க. ஜமாய்ங்க!



ரிஷபம்: திறமைக்குப் பெயர்போன ரிஷபராசிக்காரர்களே! வெளியூர் போகப் போறீங்க. வியாபாரம் தூள் கௌப்பப் போகுது, இனி நோய் நொடி கிட்ட வராதில்ல! வேலை இல்லைன்னா வீடு எதாவது ஒண்ணு மாறுமில்ல! சொந்த பந்தம் ஒத்தாச பண்ணும்ங்க! குருவும் சனியும் ரெண்டு கண்ணுமாதிரி. கும்புட்டு கௌம்புங்க, பாதை பளீர்னு தெரியும்.

மிதுனம்: அன்புக்கு அடிமையான மிதுன ராசிக்காரர்களே! கூட்டாளியோடு மனக்கசப்பு வரும் - வரட்டுமே - பணக் கஷ்டம் தீந்து திருமண யோகம் வருதே! ஒரு ப்ளஸ் / ஒரு மைனஸ் இதானப்பா இந்த வார பலன். நல்ல வெயிலும் உண்டு; ஆசுவாசப்படுத்த நிழலும் குளிர் நீரும் உண்டு. புரிஞ்சுகப்பேன்னு நெனைக்கிறேன். ஒரு கெட்டது நடக்கும்போது, கஷ்டப் படாத. பின்னாடி உன்னைச் சந்தோஷப் படுத்த நல்லது வெயிட் பண்ணும்.

கடகம்: தைரியமான கடக ராசிக் காரர்களே! உத்யோகத்தில் வேலைப்பளு கூடும். பகைவர் தொல்லை உண்டு. சாப்பாட்டு விஷயத்தில் கவனம் தேவை. வீட்ல சண்டை வரும். வாக்குவாதம் பண்ணாம, எல்லையோர ராணுவ வீரனா விழிப்போடு இருக்கணும். இந்த வாரம் மட்டும்தான்பா இப்படி. இஷ்டதெய் வத்தை நெனச்சுக்கோ.

சிம்மம்: போராட்டக் குணம் நிறைந்த சிம்மராசிக்காரர்களே! இது சபாஷ் வாரம். வீடு மாறணுமா மாறிக்கோ - பணம் வேணுமா யாரைக் கேட்டாலும் கெடைக்

தஞ்சை பரத்வாஜ்

கும் - வெளியூர் போகணுமா போய்க்கோ - வண்டி வாங்கணுமா வாங்கிக்கோ - ஐய்யய்ய நொய் நொய்னு கேள்வி கேட்டுக்கிட்டு... எதவேணாலும் செய்ப்பா. நேரம் நல்லாயிருக்கு - எதச் செஞ்சாலும் மனசுக்கும் சாமிக்கும் தெரியும்னு நெனைச்சு செய், அதுபோதும்.

கன்னி: தளராத மனங்கொண்ட கன்னி ராசிக்காரர்களே... நோய்நொடி தீர்ந்து பூர்வீகச் சொத்து கைக்கு வரும். இட மாற்றம் ஏற்படும். திடீர் பயணம் செல்வீர்கள். தனிக்குடித்தனம் செல்ல வாய்ப்புண்டு. மனப்பிரம்மை தீரும். சனியை வணங்கி அவர் ஆசிர்வாதத்தைக் கெட்டியா பிடிச்சுக்கோ... எல்லாம் ஜெயம்தான்.

துலாம்: நட்புக்குப் பெயர்போன துலா ராசிக்காரர்களே! உடல் நிலை சீராகி பொறுப்பு கூடும். கடன் தீரும். வழக்கில் ஜெயிப்பீர்கள். எதிரிகள் கொஞ்சம் பணிந்து போவார்கள். தொழிலில் இடமாற்றம் ஏற்பட்டு குளுக்கோஸ் குடிச்சா மாதிரி தெம்பாயிருப்பீங்க! கூடவே கேதுவுக்கு ஒரு வணக்கம் போட்டால் இந்த வாரம் குஷிதான்.

விருச்சிகம்: பேச்சு வல்லமை கொண்ட விருச்சிக ராசிக்காரர்களே! நீண்ட தூரம் பயணம் செய்து தெய்வ தரிசனம் செய்ய வாய்ப்பு வரும். அப்படி தரிசனம் கிடைத்ததும், உத்யோக உயர்வு அல்லது புதிய தொழில் துவங்க நல்ல செய்திக்கான முதல் வாசல் திறக்கும். எதிரிகள்கூட கொஞ்சம் அடக்கி வாசித்து சலாம் போடுவாங்க! இந்த வாரம் தூள்தான்.

தனுசு: ஞானத்தில் சிறந்த தனுசு ராசிக்காரர்களே! வீட்ல ஒரு நல்ல காரியம் நடக்கப் போவுது. கொடுக்கல் வாங்கலில் சண்டை வரலாம். பார்ட்னர்ஷிப் பிரிய வாய்ப்பு இருக்கு! வெளிநாடு செல்ல ஏற்பாடு நடக்கும். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். இந்த வாரம் நன்மை தீமையும் 50-50. குருவைக் கும்பிட்டுக்கோங்க... சங்கடம் குறையும்.

மகரம்: தெளிந்த சிந்தனை கொண்ட மகர ராசிக்காரர்களே! வேலைப்பளு கொஞ்சம் கூடி கடன் சுமை வந்தாலும், குடும்பத்தில் திருமணத் தடை விலகும். வெளியூர் செல்ல வேண்டியிருக்கும். எதிரி கொஞ்சம் வாலாட்டுவான். உஷாரா இருங்க. வீட்ல புருஷன் பொஞ்சாதி சண்டை வரும். நீங்க வாயத் தெறக்காதீங்க... பாதி சண்டை தானா மறைஞ்சிடும். கொஞ்சம் உஷாராயிருங்க!

கும்பம்: பொறுமை நிரம்பிய கும்ப ராசிக்காரர்களே! வராதுன்னு நெனச்ச கடன் அவசர தேவைக்கு வந்து சேரும். தூர தேசத்து நபர்களின் நட்பு கிடைத்து திருமண முயற்சி நல்ல திசை நோக்கி நகரும். வீடு / மனை வாங்க வாய்ப்புகள் உங்களை நோக்கி வரும். மணகல பூப் பூக்கும் ஓசை ஓங்கி கேட்கும். குஷியா இருங்க!

மீனம்: கஷ்டத்துக்குக் கலங்காத மீன ராசிக்காரர்களே! சொத்துப்பிரிவினை நடந்து முடியும். குழந்தைகள் இடப்பெயர்ச்சி நடக்கும். உத்யோகத்தில் ஊதிய உயர்வு ஏற்பட்டு மனச்சலனம் தீரும். ராகுவையும் கேதுவையும் வணங்கி இந்த வாரத்தை சூப்பரா தள்ளுங்கோ!

நடக்குமென்பார்: நடக்கும்

''கம்ப்யூட்டர்ல வரைஞ்ச படம்தான் உண்மையான குற்றவாளின்னு எப்படிச் சொல்றீங்க?''

''இது வரைக்கும் மாமூல் வாங்கின முகமா தெரியல!''

- அம்பை தேவா



ஆசைக்காக



''இந்த கான்வெண்ட் ரொம்ப மோசம்ன்றியே, ஏன்?''

''இங்கே பசங்களைக் கூட்டி வர்ற ஆட்டோ டிரைவரும், ஆயாவும் கூட கிராஜுவேட்டா இருக்கணுமாம்!''

- வெ.சீதாராமன்

''ஆடு, மாடு வாங்க லோன் கேட்கறியே... எப்படிக் கட்டுவே?''

''பெரிய கயிறு வாங்கிதான் கட்டுவேன்.''

- பா.வளர்மதி





''மினி திருவோடு வச்சிருக்கியே ஏன்?''

''நான் ரொம்ப ஸ்ட்ரிக்ட் டயட்ல இருக்கேன் தாயி...!''

- அம்பை தேவா

ஆபரேஷன்!



''டாக்டர்... எப்படியாவது நான் இந்த ஆபரேஷன்ல பிழைக்கணும்...''

''சரி... சரி...! உங்க ஆசைக்காக நான் இந்த ஆபரேஷனைப் பண்ணலை, போதுமா?''


- எஸ்.சங்கர்



''சாப்பிடும்போது ஏன் கண்ணை மூடிக்கிறீங்க?''

''கண்டதைச் சாப்பிடக் கூடாதுன்னு டாக்டர் அட்வைஸ் பண்ணி இருக்காரு!''

- கோவில்பட்டி ஆதி.கேசவன்



25

புள்ளிகள்... கோலங்கள்...

"எனக்கு மட்டும் சொல்லுங்க. அந்த போஸ் கேரக்டரை, டிரைவர் கொலை பண்ணுவதாய்க் காட்டப் போறீங்களா...?"

"இன்னும் முடிவு பண்ணலை சார்."

"ஏன்னா, பல வருஷமா விசுவாசமா வேலை பார்க்கற டிரைவர், ஒனரைக் கொல்றது நியாயமே இல்லை..."

"ஏன்... அவன் விசுவாசமாய் இருந்தும், டார்ச்சர் பண்ணினால், அவனுக்கும் கோபம் வரத்தானே செய்யும்..."

"கோபம் வந்தால், வேலைய விட்டுப் போறதுதானே சரி, அதை விட்டுட்டுக் கொலை செய்வாங்களா என்ன...?"

"எல்லோரும் ஒரே மாதிரி ரியாக்ட் பண்ண மாட்டாங்க இல்லையா...?" என்ற பூபதி, "இப்படிச் சொன்னதற்காக என்னை மேலும் சந்தேகப்பட மாட்டீங்கன்னு நினைக்கறேன்" என்றான்.

"சேச்சே... பச்சப் புள்ளைங்க மேலெல்லாம் நான் சந்தேகப்படறதில்லை" - என்று எழுந்தார் விஷ்வா.

"வேலைக்குப் போகலையா கந்தசாமி? ஏதோ கொலை பண்ணிட்டு தலை மறைவாய் இருக்கற மாதிரி வீட்டுக்குள்ளயே முடங்கிக் கிடக்கற..."

சிவலிங்கம் குரல் கேட்டு, கடுப்பாக வெளியில் வந்த கந்தசாமி, "ஆமாய்யா... நான் கொலை பண்ணிட்டு ஒளிஞ்சுக்கிட்டிருக்கேன். போலீஸைக் கூப்பிடு! உடம்பு சரியில்லாத குழந்தையை விட்டுப் போக மனசில்லாம தவிச்சுக்கிட்டிருக்கேன். கேலி பண்றியேய்யா...?"

"கோவிச்சுக்காதப்பா. சும்மா யதார்த்தமா கேட்டேன்" - என்று நழுவினார் சிவலிங்கம்.

"குழந்தைய நான் பார்த்துக்கறேன். நீங்க சீக்கிரம் ஆஃபீஸ் போங்க."

"ஐயா போய்ட்டப்புறம்... அந்த இடத்துக்கு வேலைக்குப் போகவே மனசில்லை சிவகாமி."

"போய்த்தானே ஆகணும். எல்லாத்துக்கும் சம்பளத்தை நம்பித்தானே இருக்கோம்..."

"சரி சரி..." கந்தசாமி வெளியில் வந்தான்.

"கத்தி இருக்குமா கந்தசாமி..." - எதிர் வீட்டிலிருந்து குரல்... "எதுக்கு....?"

"கொலை பண்ணவா கேக்கறேன்? கூரைக்கு முட்டுக் கொடுக்க குச்சி வெட்டணும்..."

"கத்தியும் இல்ல... புண்ணாக்கும் இல்ல... போ..."

"அதுக்கு ஏன் எரிஞ்சு விழற...? ஹூம்..."

கந்தசாமி, சைக்கிளை உருட்டிக் கொண்டு தெருவில் இறங்கினான்.

(தொடரும்)

ஒரு பக்கத் தொடர்

பட்டுதலம் சுகுமாரன்

புத்தக விமர்சனம்

அழகர் கோயில் - தொ.பரமசிவன், படையல், 19, ஸ்ரீனிவாச ரெட்டி தெரு, சென்னை - 17. விலை ரூ.200/-

அழகர் கோயில் பற்றிய ஆய்வு நூல். கோயிலின் அமைப்பு, தோற்றம், இலக்கியங்களில் அழகர் கோயில், சமூகத் தொடர்பு, திருவிழாக்கள், சித்திரைத் திருவிழாவும் பழ மரபுக் கதையும்... என பன்னிரண்டு இயல்கள், கல்வெட்டுச் சான்றுகள், ஆவணங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. சமூகத்தோடும் சிறு தெய்வ நெறியில் ஈடுபாடுடைய சாதியரோடும், இக்கோயில் கொண்டுள்ள உறவினையும் இந்த நூலின் மூலம் விளக்க முற்பட்டுள்ளார் நூலாசிரியர்.

அழகான வீடு - சரஸ்வதி ஸ்ரீனிவாசன், விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 02. விலை ரூ.125/-

வீட்டை அழகாக வைத்துக்கொள்ள உதவும் அழகுக் கலையைச் சொல்லித் தரும் நூல். வீட்டின் ஒவ்வொரு அறையையும், நம்மிடம் இருக்கும் பொருட்களுக்கு ஏற்றவாறு அழகாக அமைப்பது எப்படி, வீட்டைச் சுகாதாரமாக வைத்துக்கொள்வது எப்படி என பல பயனுள்ள டிப்ஸ்களை ரசனையுடன் வழங்கியுள்ளார் ஆசிரியர். அலங்காரப் பொருட்களின் கண்கவர் புகைப்படங்கள், அழகான வீட்டைப் பெறும் ஆவலைத் தூண்டுகின்றன.

எங்கே எது தவறாகிப் போனது? - கிரண்பேடி, தமிழில்: மலர்க்கொடி, கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தியாகராயநகர், சென்னை- 17. விலை ரூ.90/-

தங்களின் கசப்பான கடந்தகால நிகழ்வுகளைப் பற்றி பலர் கூறிய உண்மைக் கதைகளின் தொகுப்பு. தங்கள் வாழ்க்கையில் எது எப்படி தவறாகிப் போனது? தமது நிலைக்கு தாம் எப்படி பொறுப்பாளிகள் என்பதை வெளிப்படையாகக் கூறியுள்ளனர். இனி ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய கடமைகளையும் விளக்கி, இனியொருவர் பலியாவதைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்நூலைப் படைத்துள்ளார் கிரண்பேடி.


அரங்க மின்னல்கள் - மயிலாடுதுறை இளையபாரதி, நம்மொழி பதிப்பகம், 93, 4வது பிளாக் 4வது தெரு, கவியரசு கண்ணதாசன் நகர், கொடுங்கையூர், சென்னை - 118. விலை ரூ.60/-


பாராட்டுகளோடு விருதும் பெற்ற கவியரங்கக் கவிதைகளின் தொகுப்பு. தேசப்பற்று, மனிதநேயம், சாதிமத ஒழிப்பு, வெற்றிக்கு வழி மற்றும் தன்னம்பிக்கை ஊட்டும் நல்ல கருத்துகளை எளிய தமிழில் கவிதைகளாக வடித்துள்ளார் நூலாசிரியர். இடைச் செருக (மின்ன)லாக தமது சின்னச் சின்ன ஆசைகளையும் சிறகடிக்க வைத்துள்ளார்.

- மித்ரா

சிறகடிக்கும் ஆசை!











கூலா சாப்பிடுங்க – 12

கேன்சருக்கு...

நார்ச்சத்தை நம் உடலால் உறிஞ்சிக் கொள்ள முடியாது. அவற்றில் கலோரிகளும் கிடையாது என்றாலும், அது ஜீரணத்துக்கு உதவுகிறது என்பதோடு, ஆசன வாய்ப் புற்றுநோயைத் தடுக்கவும் உதவுகிறது. ஜீரண மண்டலத்தில் உள்ள சில பாக்டீரியாக்களின் தன்மையை நார்ச்சத்து மாற்றி அமைப்பதாலும் ஜீரணம் எளிதாகிறது.

கோலோன் (colon) என்பது பெருங் குடலுக்குக் கீழே, ஆசன வாய்க்குச் சற்று மேலே உள்ள பகுதி. நம் உணவின் கழிவுப் பொருட்கள் இறுதியாகத் தங்குவது இங்குதான்.

மிக அதிகமான கொழுப்புச் சத்து அமைந்த உணவைச் சாப்பிடும்போது, கோலோன் பகுதியில் அதிக பாக்டீரியா என்ஸைம்கள் உருவாகி, கொழுப்புகளின்மீது இயங்கும். அப்போது புற்றுநோயை உண்டுபண்ணும் ரசாயனப் பொருட்கள் உருவாகக் கூடும். நார்ச்சத்து இந்த பாக்டீரியாவின் செயல்களை மாற்றியமைப்பதன் மூலம் புற்று நோயைத் தடுக்கிறது.

தவிர, நார்ச்சத்து நிரம்பிய உணவு வயிறு நிரம்பும் உணர்வை எளிதில் ஏற்படுத்தும். ஆகவே, குளுக்கோஸை திசுக்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளாத நிலையில் உள்ள சர்க்கரை நோயாளிகளுக்கு இந்த வகை உணவு மிகவும் ஏற்றது.

ஆனால், நார்ச்சத்து ரொம்ப ரொம்ப அதிகமானாலும் அவஸ்தைதான். முக்கியமாக, கேஸ் ட்ரபிள்.

அரிசியில்கூட நார்ச்சத்து உண்டு. ஆனால், உமியை நீக்கும்போது நார்ச்சத்து கணிசமாகக் குறைந்துவிடுகிறது.

'இன்னைக்கு வாழைக்காய் சாப்பிட்டேன். அதுதான் வாய்வுத் தொல்லை' என்று சில பேர் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சங்கடமாகச் சொல்வார்கள். அது உண்மைதான். வாழையிலே நேந்திரங்காய்க்கு இந்த விஷயத்தில் ஸ்பெஷல் இடம். அதிக வாயுவை உண்டாக்கும்.

சௌசௌ, பூசணி ஆகிய காய்கறிகளில்கூட நார்ச் சத்து மிக மிக அதிகம். அதனால்தான் இவற்றையோ வாழைக் காயையோ அதிகமாக சாப்பிடுபவர்கள், 'ராத்திரி ரொம்ப வாயுச் சேட்டை' என்பது போல் சொல்வது உண்டு. முருங்கையில் கூட நார்ச் சத்து அதிகம்தான். நார்ச்சத்து அதிகம் கொண்ட காய்கறிகளைச் சரியாகச் சமைக்காமல் சாப்பிடும்போது, பாதிப்பு அதிகமாகிவிடுகிறது.

மாம்பழத்திலும் பலாப்பழத்திலும் நார்ச்சத்து மிக அதிகம். அதனால்தான் இதை அதிகமாக சாப்பிடுபவர்களுக்கு 'வயித்தால போகுது' என்பார்கள். பனங்கிழங்கு, பனம் பழத்தில் நார்ச்சத்து ரொம்ப கம்மி.

சரியாகச் சமைக்காத, அதிக நார்ச்சத்து

கொண்ட உணவுப் பொருட்கள் வயிற்றில் அதிக நேரம் தங்குகின்றன. சிறுகுடலுக்குப் போனவுடன் அது 'உடனே கெட் அவுட்' என்கிறது. உடனே வயிற்றுப் போக்கு ஏற்படுகிறது. இதைத்தான் மாம்பழம் சாப்பிட்டால் மாந்தம் வரும் என்கிறார்கள்.

அதுக்காக மாம்பழம் சாப்பிடவேண் டாம் என்று சொல்லவில்லை.



’தடார்’

வைட்டமின் ஏ அதிலே சுரங்கமாக இருக்குதே. தவணை முறையிலே சாப்பிடுங் கன்னுதான் சொல்றேன். ஒண்ணுக்கு இரண்டு மாம்பழமா உள்ளே தள்ள வேண்டாம்.

தவிர, பழங்களிலே ஒரு ஈ உட்கார்ந் தால்கூட அது உடலுக்குக் கடும் நோயைத் தரலாம். எனவே கவனமாகச் செயல் படுங்க.

நார்ச்சத்து நிரம்பிய உணவுகள் சிலர் வயிற்றுக்கு ஒத்துக்கொள்வதில்லை. அப் படிப்பட்டவர்கள் அதிக நார்ச்சத்து உண வைக் குறைத்துக்கொள்வது நல்லது. மற்ற படி, நமது உடலில் கேன்சருக்கு தடை உத்தரவு போடும் தகுதி படைத்தது நார்ச் சத்து என்பதை நாம் மறந்துவிட கூடாது.

(தொடரும்)

எழுத்து வடிவம்: **ஆதர்ஷ்**



குறும்பட நகர்!



வாசலில் டாலர்களை ஈட்டும் வியாபார நிறுவனங்கள் நிரம்பிய திருப்பூரின் கொல்லைப்புறத்தில், வறுமைக் கோட்டுக்குக் கீழே உழலும் மக்களின் கூடாரங்கள்! இத்தகைய முரண்பாடுகளே கலை அரும்புவதற்கும் காரணமாகின்றன. அமெரிக்க கவிஞர் வால்ட் விட்மன் 'என்னில் எண்ணற்ற முரண்கள் உண்டு' என்றார்! முரண்பாடுகளின் முகாமான திருப்பூரோ குறும்படங்களின் கருவூலமாக உயிர்பெற்றுள்ளது!

வெகுஜன சினிமாவும் வியாபார ஏடுகளும் கவனிக்கத் தவறும் விஷயங்களை, கையில் எடுத்துக் கொள்கின்றன மாற்று ஊடகங்கள். திருப்பூரின் சமூகப் பிரச்னைகள் பல குறும் படங்களில் சொல்லப்பட்டுள்ளன. பத்து முதல் முப்பது நிமிடங்களுக் குள்ளேயே விஷயத்தை விளக்கிவிடும் இப்படங்கள், சமீப ஆண்டுகளில் மக்களிடையே பெரும் அதிர்வையும் மாற்றத்தையும் உருவாக்கி வருகின்றன. கவிஞர்கள், எழுத்தாளர்களின் கவனமும் குறும்படங்கள் நோக்கித் திரும்பியுள்ளது.

சரி, 'திருப்பூர் பிரச்னைகளுக்குக் குறும்படக் கலைவடிவம் ஏன் இசைவாக அமைந்தது?' என்கிற கேள்வி எழும். அவ்வடிவத்துக்கு ஏற்கெனவே பழக்கப்பட்டுப் போன ஊர் திருப்பூர். பதியம், சேவ், அரிமா சங்கம், திருப்பூர் கலை இலக்கியப் பேரவை, திருப்பூர் தமிழ்ச் சங்கம், சுப்ரபாரதி மணியனின் 'கனவு'





✱ பூங்கா படத்தில்...

அமைப்பு, திருப்பூர் தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என பெரும்பான்மையான அமைப்புகள், தங்களுடைய பொது நிகழ்ச்சிகள் எதுவாயினும் அதில் ஒரு குறும்படம் திரையிடச் செய்து பழக்கப்படுத்தியுள்ளனர். தேசிய கீதம் அளவுக்குக் குறும்படங்கள் கட்டாயம் இடம்பெறுகின்றன. அதோடு கூடவே சிறந்த குறும்படங்களுக்கான பரிசளிப்பு, வரவேற்பு என்று மெள்ள மெள்ள திருப்பூரே குறும்பட நகரமாக மாறி வருகிறது.

இவ்வூரின் பிரத்யேகப் பிரச்னைகளைச் சொல்லும்

குறும்படங்களாக 'ஒருநாள்', 'மண்', 'பழுது', 'நிசே', 'அரசியல் அர்ஜுனா', 'என்.எச்.ரோடு', 'ஏன்' ஆகியவற்றைப் பட்டியலிடலாம். இவை பாரதிவாசன், கோவை சதாசிவம், ஜே.விநாயகம், கண்ணபிரான், ராம், சரவணகுமார், குணா போன்றோரின் படைப்புகள்.

'சுழல்', 'லீவு', 'எட்டாம் வகுப்பு' போன்ற குறும்படங்களை எடுத்து, கவனத்துக்குரிய கலைஞராக உயர்ந்து வரும் ரவிக்குமார், ''இங்கு யாரும் தொழில்முறை சினிமா கலைஞர்கள் அல்ல'' என்று சுட்டிக் காட்டுகிறார். பலர் வெள்ளித்திரை கனவுடன் இக்







* எட்டாம் படத்தில்...

குறும்படங்கள் எடுக்க வருவதாகவும் சொல்கிறார். ''கவிதைத் தொகுப்பு வெளியிட்டு, திரைப் பாடல் எழுத வாய்ப்பு கேட்கற மாதிரிதான்'' என்கிறார்!

இனி வரும் காலங்களில் வியாபார குறும்படங்கள் என்று தனியே ஒரு பிரிவு உருவாகிவிடும் என்பதும் ரவிக்குமாரின் கணிப்பு! ''இதனால் மாற்று சினிமா ஒரு சிரமிவைச் சந்திக்க நேரும்'' என்றும் எச்சரிக்கிறார் இவர்!



* தாண்டவக்கோன்

'பூங்கா', 'கை', 'இப்படிக்கு பேராண்டி' போன்ற குறும்படங்களை எடுத்துள்ள தாண்டவக்கோன், இந்த ரகப் படங்களை முதன்முறையாக வியாபார வெற்றிப்படங்களாக்கிக் காட்டியவர்.



* ரவிக்குமார்

''குறும்படங்களுக்கென்று தனியே மார்க்கெட், எதுவும் கிடையாது. ஆகவே என் குறும்படப் பதிவுகளை புத்தகக் கண்காட்சியில் ஸ்டால் எடுத்து விற்றேன். திருப்பூரிலேயே 3000 பிரதிகள் விற்க முடிந்தது!'' என்கிறார் தாண்டவக்கோன்!

''மக்கள் பிரச்னைகளை மக்களிடம் சொல்ல வெகுஜன சினிமா முயற்சி செய்யாத நிலையில், தனி மனித முயற்சிகளாக வெளிவரும் குறும்படங்களால்தான் இப்பணியைச் செய்ய முடியும். ஆகவே, குறும்படங்கள், சீமான்களின் கொட்டடியில் இருக்காமல் சாமானியனின் வசமாக வேண்டும்'' என்கிறார். தாண்டவக்கோன் சுட்டிக் காட்டும் திசையில் திருப்பூர் வெற்றிகரமாக முதல் அடி எடுத்து வைத்துள்ளது என்பதே மகிழ்ச்சியான உண்மை.

– அமிர்தா

கால் கிலோ காதல் அரை கிலோ கனவு

வளர்மதியைக் காதலிக்கத் தொடங்கிய நாளாக, பிரதிதினம் இரண்டு கடிதங்கள் வீதம் அவளுக்கு எழுதி, ஒவ்வொரு பாடப்புத்தகத்தின் அட்டைக்குள்ளும் சொருகி வைப்பதை பத்மநாபன் வழக்கமாகக்கொண்டிருந்தான்.

அவன் டாய்லெட்டுக்குப் புத்தகம் எடுத்துச் செல்வது குறித்து, அவனது அம்மா எப்போதும் பெருமிதம் அடைவது வழக்கம். 'விழுந்து விழுந்து படிக்கிறான், மார்க்குதான் வரமாட்டேங்குது' என்று அண்டை வீட்டு ஈ.பி. சம்சாரத்திடம் அவள் சொல்லி வருத்தப்படுவதை அவ்வப்போது கேட்டிருக்கிறான்.

இப்போது அது நினைவுக்கு வர குப்பென்று கண்ணை நீர் மறைத்தது. இது மொட்டை மாடி. யாருமற்ற தனிமை. மேலும், இரவும் அவனுக்கான பிரத்தியேக அறுபது வாட்ஸ் விளக்கும்.

வளர்மதி ஏன் இப்படி இம்சிக்கிறாள்? நினைக்காமலும் இருக்க முடியவில்லை. நினைத்தாலும் கஷ்டமாக இருக்கிறது. துக்கத்தின் சாயல் பூசிய மகிழ்ச்சிப் பந்தொன்று உள்ளுக்குள் உருண்டபடி கிடக்கிறது. அவள் மட்டும் தன் காதலை ஏற்றுக் கொண்டுவிட்டால், உலகத்தையே ஒரு கைப்பிடிக்குள் மூடிவிட முடியும் என்று உறுதியாகத் தோன்றுகிறது. பாழாய்ப் போன முழுப்பரீட்சை குறுக்கே வராதிருந்திருந்தால், இன்னும் கொஞ்சம் நினைத்து அனுபவித்திருக்கலாம். இப்போது படித்தாக வேண்டும்.

தவிரவும் லட்சியம் என்று ஒன்று வந்திருக்கிறது. வகுப்பில் முதல். தேர்வில் முதல். வாழ்வில் முதல். பிறகு வளர்மதிக்காக இத்தனை உருகவேண்டிய அவசியமிருக்காது. கண்டிப்பாகக் கிடைப்பாள். 'குடுமி ஐ லவ் யூ' நிச்சயம் சொல்வாள். சந்தேகமில்லை.

எனவே, அவள் கடிதத்தையும் பிறவற்றையும் மடித்துச் சொருகிவிட்டு உக்கிரமாகப் படிக்க ஆரம்பித்தான்.

கூட்டுச் சராசரி என்பது எப்போதும் பெருக்குச் சராசரியைவிட அதிகமாகவே இருக்கும். இரு எண்களின் கூட்டுச் சராசரி என்பது இரண்டையும் கூட்டி இரண்டால் வகுத்தால் வருவது. பெருக்குச் சராசரியாகப்பட்டது இரு எண்களின் பெருக்கல் தொகையின் வர்க்கமூலம்.

என்ன ஒரு கண்டுபிடிப்பு! உட்கார்ந்து யோசித்த கணிதமேதைகள் நீடூழி வாழட்டும். அவன் படித்தபடியே தூங்க ஆரம்பித்தான்.

மறுநாள். தேர்வுகள் ஆரம்பமாயின. தற்காலிகமாக பத்மநாபன் வளர்மதியை மறந்தான். ஆசிரியர்களை, அப்பா, அம்மாவை, ஹெட்மாஸ்டரை, நண்பர்களை, எதிரிகளை எல்லோரையும் மறந்தான். வினாத்தாள், விடைத்தாள், என்ன எழுதுகிறோம், எழுதுவது சரியா என்று திருப்பிப் படித்துப் பார்க்கக்கூட இல்லை. எழுதி நீட்டிவிட்டு வந்துகொண்டே இருந்தான். வீடு திரும்பியதும் மறுநாள் தேர்வுக்கான படிப்பு.

செலுத்தப்பட்ட ஓர் இயந்திரம் போல் இயங்கிக்கொண்டிருந்தான். மனத்தில் முன்பிருந்ததைப் போல பயமோ, பதற்றமோ இல்லை. வெட்டவெளிப் பாலைவனத்தில் எங்கோ ஓரிடத்தில், வளர்மதி என்னும் சிறு சோலை இருக்கிறது. அடை



பா.ராகவன்

யும்வரை இழுத்துப் பிடிக்க முடியுமானால் சரி.

ஆறு தினங்கள் அவன் அவனாக இல்லை. அதுவாக இருந்தான். இறுதித் தேர்வு தினத்தன்று, மாணவர்கள் ஒரு வருக்கொருவர் கைகுலுக்கி 'ரிசல்ட் தினத் தன்று சந்திக்கலாம்' என்று சொல்லிக் கொண்டு பிரிந்தார்கள்.

பன்னீர் செல்வம், செங்கல்பட்டில் உள்ள தன் அத்தை வீட்டுக்கு ஒரு மாதம் செல்லவிருப்பதாகச் சொன்னான். கலிய மூர்த்தி கள்ளக்குறிச்சிக்குப் போகிறானாம். பெருமான்சாமிகூட திருவான்மியூரில் யாரோ உறவினர் இருப்பதாகவும் அவர்கள் வீட்டுக்குப் போவதாகவும் சொல்லிக் கொண்டிருந்ததை பத்மநாபன் கேட்டான்.

பொதுவாக விடுமுறைகளில் அவன் எந்த உறவினர் வீட்டுக்கும் செல்வது

கிடையாது. அவனது அப்பா ஒவ்வொரு ஆண்டு இறுதி விடுமுறையிலும் அவனுக்கு நிறைய காமிக்ஸ் புத்தகங்கள் வாங்கிக்கொடுப்பது வழக்கம்.

இந்த வருடம் அதையும் எதிர்பார்க்க முடியாது. எதிரே வருவது பத்தாம் கிளாஸ். பள்ளியிறுதி அரசுத் தேர்வு. எங்காவது பழைய புத்தகத்துக்கு ஏற்பாடு செய்துவைத்திருப்பார். படிக்க வேண்டும்.

''பாஸ் பண்ணிருவ இல்ல?'' என்று அம்மா கேட்டாள்.

அவனுக்குச் சந்தேகமில்லை. ஆனாலும் ஏன் அம்மாவுக்குச் சந்தேகமாக இருக்கிறது? தெரியவில்லை.

''சீச்சீ, மார்க்கு எத்தினின்றதுதான் விஷயம். ஏண்டா, நாநூறத் தாண்டிருவ இல்ல?'' என்றார் அப்பா. அவரது அபார நம்பிக்கை அவனுக்கு அச்சமளித்தது.

நாய்க்குட்டி பொம்மையுடன் விளையாடிக் கொண்டிருப்பாள். போய்ப் பார்க்கலாமா? திடீரென்று எதிரே போய் நின்றால் அவளது முகபாவம் எப்படி மாறும்? என்ன சொல்வாள்? 'டேய், போயிடுடா, எங்க தாத்தா வந்துடுவாரு.' பதறலாம். பயப்படலாம். கலவரமடையலாம்.

இப்படி நினைத்துக்கொண்டிருப்பதே சுகமாக இருக்கும். எதற்குக் கேட்டுவைத்து ஏதாவது விடை பெற்று, வருத்தத்தைச் சுமந்துகொண்டு வீட்டுக்குப் போக வேண்டும்?

எனவே அவன் வெறுமனே காத்திருந்தான். வருவாள். பார்க்கலாம். சிரிக்கலாம். போய்விடலாம்.

ஒருவேளை தேர்வு முடிந்த சந்தோஷத்தில் இன்றைக்கே 'குடுமி ஐ லவ் யூடா' என்று சொல்லிவிட்டால்?

அந்த ஆண்டின் இறுதி நாளில், தேர்வு முடிந்து வெளியே வந்து அவன் வெகு நேரம் காத்திருந்தான். வளர்மதி இன்னும் வெளியே வரவில்லை.

வருவாள்; ராஜாத்தி, க்ளாரா, பொற்கொடி இன்ன பிற தோழிகள் புடைசூழ நடுவே வருவாள்.

வளர்மதி விடுமுறைக்கு எங்கே போகப் போகிறாள்? அவனுக்குத் தெரிந்துகொள்ள ஆவலாக இருந்தது. கேட்கலாம், பதில் சொல்வாள். அவசியம் சொல்வாள். ஆனால், கேட்டுத் தெரிந்துகொண்ட பிறகு சோகம் வந்துவிடும். ஒரு மாதக்காலம்... ஊருக்குப் போறேன் குடுமி. எங்க மாமா வீட்டுக்கு அத்த வீட்டுக்கு பெரியம்மா வீட்டுக்கு.

என்னத்தையாவது சொல்லிவிட்டால், மிச்ச நாளைக் கடத்துவது சிரமம். ஒன்றும் தெரியாதிருந்தாலே தேவலை. ஆறு தெரு தாண்டினால் வளர்மதி வீடு வரும். வீட்டுக்குள் அவள் இருப்பாள்; தனது செல்ல

ஷாருக்கான் சர்டிஃபிகேட்!

இந்தியில் ஷாருக்கான் நடித்து சூப்பர் டூப்பர் ஹிட்டான 'எஸ்.பாஸ்'ஸின் தமிழ்ப் பதிப்புதான் 'குரு நம்ம ஆளு'!

''நான் நடித்த கேரக்டரில் மாதவனை நடிக்க வைக்கலாம். நவரசமும் இளமையும் ததும்பும் அவரைத் தவிர வேறு எவர் நடித்தாலும் பொருத்தமாக இருக்காது. அவருடைய புன்னகை ஒன்றே இந்தக் கேரக்டருக்கான மொத்த கனத்தையும் சுமந்துவிடும்' என்று ஷாருக்கானே சர்டிஃபிகேட் கொடுத்திருக்கிறார். ஹீரோயின் மமதா 'சிவப்பதிகாரம்' படத்துக்குப் பிறகு, லேடி வில்லியாக வந்து மிரட்டியிருக்கிறார்'' என்கிறார் இயக்குநர் செல்வா.

''எஸ்.பாஸ்ஸின் கதைதான் என்றாலும் தமிழுக்காக காட்சி அமைப்பில் தலைகீழாக

கிளுகிளுவென்றிருந்தது. அடக்கிக் கொண்டான். தன்னிடம்கூட சொல்ல வேண்டாம். சாகிற வரை சொல்லவே வேண்டாம். அவளது பெஸ்ட் ஃப்ரெண்ட் யாரிடமாவது சொன்னால்கூடப் பரவாயில்லை. போதும். 'இவளே, ராஜாத்தி, நான் நிஜமாவே குடுமிய லவ் பண்றேன்டி

ஆனா அவன்கிட்ட சொல்லிடாத...'

சொல்வாளா? ஒருவேளை அவளுக்கும் இருக்குமா? தன் வயதுதானே? தன் மனம் தெரியும்தானே? ஏன் அவளுக்கும் இருக்கக் கூடாது?

ஒருமாத விடுமுறை. கடவுளே, எப்படிக் கழிக்கப் போகிறேன்? நண்பர்கள் இல்லாத தினங்கள். பள்ளி இல்லாத தினங்கள். வளர்மதி இல்லாத தினங்கள். கொடுமை அல்லவா? குரூரம் அல்லவா?

அவனுக்கு அழுகை வந்தது. அதேசமயம் வளர்மதியும் வந்தாள்.

''டேய் குடுமி, நீ வீட்டுக்குப் போகல?''

''இல்ல வளரு.''

''ஏன்டா?''

''ஒனக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்.''

அவள் சிரித்தாள். உலகமே சிரிப்பது போலிருந்தது அவனுக்கு.

''என்ன விஷயம்டா?''

''நான் சொன்னதை யோசிச்சியா?''

''என்ன சொன்ன?''

''ஐ லவ் யூ வளரு.''

''சீ போடா, ஒனக்கு வேற வேலையே இல்ல.''

''இல்ல வளரு. நான் நெசமாத்தான் சொல்றேன். என்னால... என்னால...''

அவனால் பேசமுடியவில்லை. அழுகை வந்தது. அழுதுவிடுவோமோ என்று அச்சமாக இருந்தது. வளர்மதி எதிரே அழுவது அவமானம். அவளுக்கு ஒருவேளை காதல் இருந்தால் ஓடியே போய் விடக்கூடும். ம்ஹூம். அழக்கூடாது. கண்டிப்பாகக் கூடாது.

''ஒழுங்கா எக்ஸாம் எழுதினியா?''

'உம்' என்றான் சுரத்தே இல்லாமல்.

''கணக்கு பேப்பர் கொஞ்சம் கஷ்டமா இருந்திச்சி இல்ல?''

''தெரியல வளரு.''

அவள் உற்றுப் பார்த்தாள். சில வினாடிகள் பேசாதிருந்தாள். பிறகு சட்டென்று, ''ரிசல்ட் வரட்டும் பாக்கலாம்'' என்று பொதுவாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

அவன் நெடுநேரம் அங்கேயே நின்றிருந்தான். சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. ஒரு மாத விடுமுறை. சரியாக முப்பது நாட்கள். ஒரு நாளைக்கு மூன்று வீதம் தொண்ணூறு கவிதைகள் எழுதி, பள்ளி திறக்கும் தினத்தன்று வளர்மதியிடம் கொடுக்கலாம் என்று முடிவு செய்துகொண்டான்.

'அதென்னடா தொண்ணூறு? இன்னும் பத்து எழுதவேண்டியதுதானே?' சிரித்துக்கொண்டே கேட்பாள்.

'அத்த நீ எழுதி பூர்த்தி பண்ணு வளரு' என்று சொல்லவேண்டுமென எண்ணிக்கொண்டான்.

(தொடரும்)

மாற்றங்கள் செய்திருக்கிறோம். இந்தப் படத்தில் வரும் அத்தனை பாடல்களையும் ஆஸ்திரேலிய சிட்னி நகரின் குளுமையோடு சேர்த்துப் படம் பிடித்திருக்கிறோம்.

'தோட்டா', 'நான் அவனில்லை' போன்ற எனது வெற்றிப் படங்கள் வரிசையில் கண்டிப்பாக இந்தப் படமும் இருக்கும்'' என்கிறார்.

- கமலி







✱ பேருந்து நிலையம்

'ஈகோ இல்லாத

"பத்து வருஷமா எந்தவொரு வளர்ச்சியும் இல்லாம, முடங்கிக் கிடந்த ஊருங்க இது. இப்ப ரெண்டு வருஷமா அரசு நலத் திட்டங்கள் வரிசையா நடந்துக்கிட்டிருக்கு. அதுக்குக் காரணம், பேரூராட்சித் தலைவி விஜயா. ரொம்ப சின்ன வயசு. இருந்தாலும் எல்லாக் கட்சிக் காரங்ககிட்டேயும் பக்குவமாப் பேசி, பொது மக்கள் தேவைகளை முன் வைக்கறாங்க. அதனால் எல்லா செயல்பாடுகளும் சுலபமா கைகூடி வருதுங்க!'' என்கிறார் கிணத்துக்கடவைச் சார்ந்த சுமை தூக்கும் தொழிலாளியான மருதாசலம்.



✱ விஜயா

கோவை மாவட்டம், கிணத்துக்கடவு பேரூராட்சி. பதினோராயிரம் வாக்காளர்கள். மக்கள்தொகை இருபதாயிரம். அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று. தமிழ்நாட்டின் மிகப் பெரிய தக்காளி சந்தைகளில் கிணத்துக்கடவு சந்தையும் ஒன்று. ஒன்பது மாத தக்காளி சீசனில் தினசரி ஆயிரத்துக்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்து போகிறார்கள். இத்தனை இருந்தும் இந்த ஊருக்கென பேருந்து நிலையம் தனியாக எங்குமில்லை. கோவை டு பொள்ளாச்சி நெடுஞ்சாலையில்தான் பேருந்துகள் நிற்கின்றன; செல்கின்றன. இதனாலேயே இந்தப் பகுதியில், தினசரி இரண்டு சாலை விபத்துகள் நடப்பதாகக் கூறப்படுகிறது.

கிணத்துக்கடவு பேரூராட்சித் தலைவியான இருபத்தியொன்பது வயது விஜயா, பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார். கணவர் கதிர்வேல், பேரூராட்சியின் ஏழாவது வார்டு கவுன்சிலர். "எங்களுக்குள் இது வரை எவ்வித கருத்து பேதமும் வந்ததில்லை. பேரூராட்சித் தலைவியாக அவர் பதவியேற்ற பின்னர்தான், இந்த ஊரில் ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி என்றும், ஆளுங்கட்சிக்கு உள்ளேயும் 'யார் பெரியவர்? யார் சின்னவர்?' என்றும் ஈகோ பிரச்னைகள் தொலைந்து போயுள்ளன. அதனாலேயே தற்போது கிணத்துக்கடவு பேரூராட்சி, படிப்படியாக பல வளர்ச்சிகளைக் கண்டு வருகிறது!'' எனக் கூறுகிறார் கதிர்வேல்.

"குடிநீர்ப் பற்றாக்குறையும், எங்கள் ஊரும் இரட்டைக் குழந்தைகள் போல. ஆழியாறு அணையிலிருந்து குடிநீர் பெறப்பட்டு இங்கு தேக்கி வைக்கப்பட்டு, பல ஊர்களுக்கும் வினியோகிக்க திட்டப் பணிகள் நடந்துக்கிட்டு வருது. கிணத்துக்கடவு- குறிச்சி - குனியமுத்தூர் கூட்டுக் கூடிநீர்த் திட்டம்னு சொல்றாங்க. அது மட்டும் செயல்படத் தொடங்கிட்டா, எங்க ஊரு சனங்களோட குடிநீர்த் தேவை நூத்துக்கு நூறு பூர்த்தியாகிவிடும்!'' என்கிறார் கிணத்துக்கடவு மதுரைவீரன் தெருவில் வசித்து வரும் சுமதி.



இளம் தலைவி!

தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி, புதிய பேருந்து நிலையக் கட்டடப் பணிகள் நடைபெறுகின்றன. புராதனக் கட்டடத்தில் இயங்கி வந்த பள்ளிக்கு, புதிய வகுப்பறைகள் வேறு இடத்தில் கட்டப்பட்டு வருகின்றன. கிணத்துக்கடவு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை, முப்பது படுக்கைகள் கொண்ட நவீன அரசு மருத்துவமனையாக மாற்றக் கோரி, மாநில அரசுக்கு வரைவுத் திட்டம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. தக்காளிக் கழிவுகளிலிருந்து மண்புழு உரம் தயாரிக்கும் பணிகளும் பேரூராட்சி சார்பாக நடைபெற்று வருகிறது.

''சொன்னால் நம்ப மாட்டீர்கள். எங்க ஊரு கடந்த பத்து வருஷங்கள்ல எந்த வளர்ச்சியும் அடையலை. முதல் பீரியடுல தி.மு.க. பேரூராட்சித் தலைவர், தி.மு.க. எம்.எல்.ஏ. ரெண்டாவது பீரியடுல அ.தி.மு.க பேரூராட்சித் தலைவர், அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ஒரே கட்சிக்குள்ளேயே ஏகப்பட்ட ஈகோ. அதனால பலியானது கிணத்துக்கடவு பேரூராட்சி. இப்ப நான் தி.மு.க. பேரூராட்சித் தலைவி, அ.தி.மு.க. எம்.எல்.ஏ தாமோதரன். எங்களுக்குள்ள ஈகோ எதுவும் பார்க்காம, பேரூராட்சி சார்பா அ.தி.மு.க எம்.எல்.ஏ.வைச் சந்திச்சுப் பேசினோம். அவர் தன்னோட எம்.எல்.ஏ தொகுதி வளர்ச்சி நிதியிலேர்ந்து கணிசமா தொகை தந்தார். மத்திய-மாநில அரசுகள் நிதியும் வந்தது. கூட்டுக் குடிநீர்த் திட்டம், புதிய பேருந்து நிலையம், புதிய பள்ளிக் கட்டடங்கள், கான்கிரீட் வீடுகள், வீடுகளுக்குக் கழிவறைகள் என மக்கள் நலத் திட்டங்கள் ஒவ்வொன்றாகச் செயல்பட்டு வருகின்றன. நாம பொறந்து வளர்ந்த ஊருக்கு நம்மால நல்லது செய்ய முடியலன்னா எப்படி? நம்ம மண் வாழ நமக்கெதுக்கு ஈகோ? அதனால கட்சி பேதமின்றி வளர்ச்சி காண்கிறது எங்கள் பேரூராட்சி!'' என்கிறார் கிணத்துக்கடவு பேரூராட்சித் தலைவி விஜயா. இந்த எண்ணம் எல்லாவிடத்தும் பரவ வேண்டும் என்பதுதான் நம் ஆசை!




* சுமதி



* மருதாச்சலம்

செய்தியும் சித்திரங்களும்:
புதியவன்



* ஒபாமா

வெள்ளை நாட்டின் கறுப்பின அதிபர்!

மாற்றம். தற்போது அமெரிக்கா உச்சாடனம் செய்துகொண்டிருக்கும் மந்திர வார்த்தை இதுதான். இராக்கில் போர்; எண்ணெய் விலை பாரல் பாரலாக ஏறிக் கொண்டிருக்கிறது. படுகுழியில் விழுந்து கிடக்கிறது டாலர். வேலையில்லாதவர்களின் பட்டியல் உயர்ந்து கொண்டே போகிறது. ஆங்காங்கே போராட்டங்கள், கலாட்டாக்கள், சிறுபான்மையினர் பிரச்னைகள் தவிரவும், உலகம் முழுவதும் கெட்ட பெயர். தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள் அமெரிக்கர்கள். கோபம், எரிச்சல்; கூடுதலாக, குழப்பம்.

காற்று, பராக் ஒபாமா பக்கம் வீசிக் கொண்டிருக்கிறது. முந்தாநாள் வரை ஓடியோடி தமக்கு ஆதரவு திரட்டிக்கொண்டிருந்த ஹிலாரி க்ளின்டன், தோல்வியை ஒப்புக்கொண்டு பின் வாங்கி பிரசாரத்தை முடித்துக்கொண்டார். 'என் ஆதரவு ஒபாமாவுக்கே' என அறிவித்துவிட்டு ஒதுங்கிக்கொண்டு விட்டார்.

யாரும் எதிர்பார்க்காத மாற்றம் இது. பில் க்ளின்டனுக்கு அடுத்தபடியாக வசீகரிக்கும் ஜனநாயகக் கட்சித் தலைவர் ஹிலாரிதான் என்பது பலருடைய கணிப்பு. பிரபலம் என்னும் அடையாளம், க்ளின்டனின் ஆதரவு, அதிபர் பதவிக்கான முதல் பெண் வேட்பாளர் என்னும் மினுமினுப்பு - இத்தனையும் சேர்ந்து ஹிலாரியை உச்சத்தில் கொண்டு போய் நிறுத்தும் என்று பலர் எதிர்பார்த்தனர்.

ஒபாமா ஹிலாரியை முந்திச் சென்றுவிட்டார். ஜனநாயகக் கட்சி முன்னிறுத்தியுள்ள ஒரு கறுப்பினத் தலைவர் இந்த அளவுக்கு வாக்கெடுப்பில் முன்னேறி வந்திருப்பது அமெரிக்க வரலாற்றில் இதுவே முதன்முறை. ஒபாமாவுக்கு முன்னர் பல கறுப்பினத் தவர்கள் போட்டியிட்டு, ஆரம்ப கட்டத்திலேயே பின்வாங்க வேண்டியிருந்தது.

ஒபாமாவின் தந்தை கென்யாவைச் சேர்ந்தவர். அம்மா அமெரிக்கர். ஒபாமா பிறந்தது ஹவாயில். ஆகஸ்ட் 4, 1961 ஆம் ஆண்டு, ஒபாமாவுக்கு இரண்டு வயதானபோது அவர் பெற்றோர் பிரிந்துவிட்டனர். தாய் தும்ஹாம் மற்றொரு திருமணம் செய்துகொண்டு ஒபாமாவையும் அழைத்துக்கொண்டு இந்தோனேஷியாவில் குடியேறிவிட்டார். பத்து வயது வரை ஒபாமா படித்தது



■ மருதன் ■

அங்கேதான். இந்தோனேஷியா போர் அடித்ததோ என்னவோ, அம்மாவின் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்துவிட்டு ஹோனோலுலு வந்துவிட்டார் ஒபாமா. தாத்தா வீட்டில் தங்கி உயர்நிலைப் பள்ளிப்படிப்பு வரை படித்தார்.

'வா வா' என்றது அமெரிக்கா. பறந்துவிட்டார். லாஸ் ஏஞ்ஜெலஸில் இரண்டு வருடங்கள். பிறகு கொலம்பியாவில் அரசியல் விஞ்ஞானப் படிப்பு. பட்டம் பெற்றதும் வெவ்வேறு பணிகள் வந்து சேர்ந்தன.


ஒபாமாவின் தேர்தல் வாக்குறுதிகளில் முக்கியமானவை இவை - 'இராக் போரை நிறுத்துவேன். போர் தளவாடங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியைக் குறைத்து ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவேன். நமக்கான எரிபொருளை நாமே உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்வேன். அனைவருக்கும் ஆரோக்கியம் கிடைக்கச் செய்வேன்.'

ஒபாமாவை ஆதரிப்பவர்கள் முன்வைக்கும் காரணங்கள் இவை- ''ஒன்றுக்கும் உதவாத புஷ்ஷிடம் எட்டு ஆண்டுகள் அமெரிக்காவை ஒப்படைத்தோம். வேண்டிய மட்டும் கெட்ட பெயர் வாங்கிக்கொண்டதுதான் மிச்சம். போரை உடனடியாக நிறுத்துவது நல்ல பெயரைச் சம்பாதித்துத் தரும். மேலும், ஒபாமா கறுப்பினத்தவர் என்பதால் மக்களின் வலியும் வேதனையும் தேவையும் அவருக்குத் தெரியும். சிறுபான்மை இனத்தாருக்கு விரோதமாக நடந்து கொள்ளமாட்டார். வெளியுறவுத் துறையிலும் அதிக கவனம் செலுத்துவார். அண்டை நாடுகளுடன் நட்புறவு கொள்வார். ஆமென்.'

'ஒபாமாவால் சிறு துரும்பையும் நகர்த்த முடியாது' என்கிறார்கள் இடதுசாரி சிந்தனையாளர்கள். 'போரையாவது, அவராவது, நிறுத்துவதாவது! ராணுவத்தில் கூடுதல் ஆட்களைச் சேர்க்கப்போவதாக அவர் அறிவித்திருக்கிறார். இவர்களை வைத்துக்கொண்டு என்ன செய்ய உத்தேசமாம்? குழந்தைகளுக்குப் பாடங்கள் எடுக்கப் போகிறார்களா? வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டித் தரப் போகிறார்களா? அமைதி பிரசாரம் மேற்கொள்ளப் போகிறார்களா? இராக்கை விட்டு அமெரிக்கர்கள் அகல மாட்டார்கள். இது உறுதி' என்பது இவர்கள் வாதம்.

ஒபாமாவுடன் போட்டியிடும் குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜான் மெக்கெய்னின் முழக்கமோ... 'நான் அதிபரானால் இராக் போரை நிறுத்த மாட்டேன். மாறாக, போரை விஸ்தரிப்பேன். இஸ்லாமியத் தீவிரவாதிகளை இல்லாது செய்வேன், நல்லாட்சி அளிப்பேன்' என்பதாக இருக்கிறது!

ஒபாமா போரை நிறுத்துவாரா என்பது உறுதியாகத் தெரியாது. ஆனால், மெக்கெய்ன் நிச்சயம் போரைத் தொடர்வார். ஆகவே, ஒபாமாவுக்கான ஆதரவு வட்டம் விரிவடைந்துகொண்டே போகிறது. ○



✱ மெக்கெய்ன்



✱ ஹிலாரி க்ளின்டன்

மேக்னட்



கண்ணுக்கு மை அழகு... என்ற பாடல் வெறும் வரிகளல்ல, மெய்யாகவே ஒரு பெண்ணுக்கு மேன்மேலும் அழகைக் கூட்டிக் காண்பிப்பது மையிட்ட கண்களே...

பர்ஸனாலிட்டியையே மாற்றும் சக்தி ஐ மேக்கப்புக்கு உண்டு! இதைப் பேணிப் பராமரிப்பதில் தனி அக்கறை கண்டிப்பாகச் செலுத்த வேண்டும்.

ஐ லைனர், ஐ ஷேடோ, மஸ்காரா, காஜல் மற்றும் ஐ பென்சில்கள், ஐ மேக்கப்புக்குத் தேவை. நன்றாக, சீராக, திருத்தப்பட்ட புருவங்கள் மிக முக்கியம். முகத்துக்குத் தகுந்தாற்போல் எப்படி புருவம் இருக்க வேண்டும் என்பதை ப்யூட்டிஷியன்களே சொல்வார்கள்.

ஐ மேக்கப்பில் ஏகப்பட்ட பிராண்ட்கள். விலை அதிகமாக இருந்தாலும், நல்ல ப்ராடக்ட்தான் உபயோகிக்க வேண்டும் கண்ணுக்கு. நோ காம்ப்ரமைஸ்! கல்லூரி, ஆஃபீஸ், பார்ட்டி, திருமணம், ஈவ்னிங் மேக்கப்... என டயத்துக்கு, இடத்துக்குத் தகுந்தாற்போல ஐ மேக்கப் போட வேண்டும்.

தினசரி ஐ மேக்கப்பில், மெல்லியதாக ஐ லைனர் போதும். முதலில் கன்சீலர் அல்லது ஃபவுண்டேஷன் இமைகளில் தடவவும். முகத்துக்கு எந்த ஷேட் ஃபவுண்டேஷனோ அதேதான் உபயோகிக்க வேண்டும். கண்ணுக்குக் கீழே கருவளையம் இருப்பதை மறைக்கவும் கன்சீலர் உதவும். முதலில் விழியின் ஓரம், பிறகு நடுப்பகுதி, கடைசியில் விழியின் வெளியோரப் பகுதி... என மென்மையாகத் தடவவும். தேய்க்கக் கூடாது.

பிறகு ஐ ஷேடோ எடுக்கவும். சில ஐ ஷேடோ இரண்டு கலர்களில் வரும். ஒரே ஷேடில் லைட், மீடியம், டார்க் எனப் போடுவதுதான் ட்ரெண்டாக இருந்தது. இப்போது அதிலும் வெரைட்டி.

ஐ ஷேடோ உடைக்கு மாட்ச்சாகப் போட்டுக்கொள்ளலாம். அடர் நீலம், பர்ப்பிள், பச்சை போன்ற நிறங்களைத் தவிர்ப்பது நலம். நேச்சுரல் ஷேட்ஸ் எந்த வயதினருக்கும் பொருந்தும்.

கன்சீலர் தடவிய இமைகளில் முதலில் ஐப்ரோவுக்குக் கீழே ஹைலைட் பகுதி, இமை மடிப்பு வரும் பகுதியில் டார்க் ஷேட், பிறகு இமையில் லைட் ஷேட்... என ஐ ஷேடோ போடவும்.

ஐ ஷேடோவுக்குப் பிறகு, ஐ லைனர். ஒரு கையால் இமைப் பகுதியைக் கீழ் நோக்கி டைட்டாகப் பிடிக்கவும். இப்போது மிக கவனமாக வெளிப்பகுதியிலிருந்து உள்நோக்கி லைன் போடவும். நிறுத்தி நிறுத்தி இரட்டை லைனாக, தடிமனாகப் போடக் கூடாது. கவனம் தேவை. மெல்லிய லைனாக ஒரே ஸ்ட்ரோக்கில் ஐ லைனர் இருக்க வேண்டும். ட்ராமாடிக் லுக் வேண்டுமென நினைப்பவர்கள், வெளிப் பகுதியில் கனமாகவும் உள்ளே மெல்லிய லைனாகவும் ஐ லைனர் போடலாம்.

மிஸ்டேக் ஆகிவிட்டதே என அப்செட்



ஆகாமல், ஸ்பான்ஜ் அல்லது காட்டன் கொண்டு உடனே துடைத்தெடுக்கவும். பிறகு மஸ்காரா. இது கண் இமைகளைப் பெரிதாகக் காட்ட உதவும். மஸ்காரா ப்ரஷ்ஷால் முதலில் மேல் இமைகளில் கர்ள் செய்யவும். அதாவது உள்ளிருந்து வெளிப் பகுதிக்கு! பிறகு கீழ் இமையில் மஸ்காரா தடவவும். இதனால் கண் இமைகள் தனித் தனியாக விசிறிபோல் தெரியும். ஓவராகப் போடாதீர்கள்.

ஐ மேக்கப்பில் ஸ்மோக்கி, ஸ்மட்ஜி, நியூட்... என ஸ்டைல்கள் ஏராளம். 'வெள்ளை பென்சில் கொண்டு கண் இமைப் பகுதியில் ஒரு ஸ்ட்ரோக் போட்டால், தனி எஃபெக்ட்



விழிகள்!

கிடைக்கும்' என்கிறார்கள் மேக்கப் நிபுணர்கள்.

சிறிய விழிகள் அகன்ற விழிகள், சரிந்த



விழிகள்... என கண்களில் ஏதேனும் குறைபாடு இருந்தால்கூட மேக்கப்பினால் சரி செய்தால் 'விழியே கதை எழுது...' என கவிஞர்கள் குரல் கொடுப்பார்கள்.

மூக்குக் கண்ணாடி அணியும் பெண்கள் ஐ ஷேடோ போடாமல் மஸ்காரா போடலாம். ப்ரௌன் அல்லது ப்ளாக் மஸ்காரா யூஸ் பண்ணவும். புருவங்களைக் கண்டிப்பாக ஷேப் செய்ய வேண்டும்.

கண்ணுக்கு மேக்கப் வெளி அழகு. அதைவிட முக்கியம் கண்களைச் சரியான முறையில் பராமரிப்பது. அதற்கு சில டிப்ஸ்...

★ அதிகமாக கேரட், முட்டைக்கோஸ், கீரைகள் சாப்பிடவேண்டும்.

★ மலச்சிக்கல் இருந்தாலும் கண்களைப் பாதிக்கும். வயிறு சுத்தமாக இருந்தால்தான் விழியும் மொழி பேசும்.

★ தினமும் காலை எழுந்தவுடன் வாயில் ஜலத்தை நிரப்பிக்கொண்டு கண்களில் ஜலத்தை வாரி வாரி அடிக்கவும். இதை ரெகுலராகச் செய்தால் கண்களுக்கு மிகவும் நல்லது.

- லதா சேகர்

நாடக விமர்சனம்

விநோத விருப்பம்!



இப்போதெல்லாம் பல நாடகங்களின் தொடக்கத்தில் 'தயவுசெய்து உங்கள் மொபைல் ஃபோனை ஆஃப் செய்துவிடுங்கள்' என்று அறிவிக்கிறார்கள். இந்த நாடகத்திலும் அஃதே. ஆனால், நாடகத்தின் மையக் கருத்தும் அதுவேதான் என்பதில்தான் வித்தியாசம்!

அந்த வீட்டில் நவீன தொழில்நுட்பங்கள்தான் ராஜ்ஜியம் நடத்துகின்றன. அம்மா சந்தியா, வாய்ஸ் மெயில் மூலம் தினமும் கணவனுக்குத் தகவல் அனுப்புகிறாள். அப்பா சேகர், இ-மெயில் மூலம் மனைவியின் சர்க்கரை வியாதியில் கவனம் செலுத்தச் சொல்கிறார். மகன் ப்ரணவ் ஒன்றுக்கு மூன்றாக மொபைல் ஃபோன்கள் வைத்துக்கொண்டு, கடன் அட்டையில் லட்சக்கணக்கில் பணம் புரட்டிக்கொள்கிறான். மகள் ஸ்ருதி மட்டுமே மனித உறவுகளின் சிறப்பைப் புரிந்துகொண்டு அதற்காக ஏங்குகிறாள். அவளைப் புரிந்துகொள்வது தாய்வழித் தாத்தா மட்டுமே.

வருமான வரி அதிகாரிகள் சோதனை போட வந்து சேர, வெளியில் செல்ல அனுமதிக்கப்படாமல், தொலைபேசிகளைப் பயன்படுத்தவும் தடை என்கிற நிலையில், குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் வெகுகாலத்துக்குப் பிறகு சேர்ந்து பேசிக்கொள்ள, பல விவரங்கள் பிடிபடுகின்றன. இனி தினமும் கலந்து பேசுவது என்று தீர்மானிக்கிறார்கள். (இப்படித் தீர்மானிப்பவர்கள் அதை நிறைவேற்றுவார்களா என்ற கேள்வி, நாடகத்துக்குப் பிறகும் நம் மனதில் தோன்றிக்கொண்டிருக்கிறது.)

நாடகம் தொடக்கத்திலேயே ஸ்கோர் செய்கிறது என்றால், அதற்குக் காரணம் செட். அழுத்தமான நீலம், வெண்மை ஆகிய இரண்டே வண்ணங்களைக் கொண்டு, மேல் நடுத்தர வீட்டின் பின்னணியை அழகாகக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

தலைப்புக்கான பொருத்தம் புன்னகைக்க வைக்கிறது. வந்து போகும் பாத்திரங்களை விட்டுவிட்டால் மற்றவை மிகக் குறைவுதான். முக்கிய பாத்திரங்களில் வரும் ஐவருமே உணர்ந்து செய்திருக்கிறார்கள் என்றாலும், இளைய தலைமுறை ஃபோட்டோஃபினிஷில், இயல்பான நடிப்பில் முந்துகிறது. கச்சிதமான இயக்கம் (கிரிதரன்). கொஞ்சம் யோசித்த பிறகுதான் நாடகத்துக்குப் பின்னணி இசையே கிட்டத்தட்ட இல்லை என்பது உறைக்கிறது. அட!

இயல்பான நாடகச் சூழல்களே புன்னகைக்க வைக்கும்போது, எதற்காக (பிள்ளை வீட்டாரின் நாய், ஜூஸ் குடித்ததை ரகசியமாக வைத்துக்கொள்ள விரும்பும் பி.ஏ. என்று அவ்வப்போது வரும்) சலிப்படைய வைக்கும் அசட்டு 'நகைச்சுவைகள்'?

காலத்துக்குப் பொருத்தமான மெஸேஜைத் தரும், ஸ்ரீவத்சன் எழுதியுள்ள இந்த நாடகத்தை நிறைய பேர் பார்த்தால் நல்ல நாடகங்கள் வளரும்.

– ஜி



நீங்கள் கேட்டவை -தராசு

மேக்-அப்புக்கு மட்டும் ஆறு கோடியாமே?

● க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி

? விலைவாசி உயர்வை எதிர்த்து, தமிழகத்தில் இடதுசாரி கட்சிகள் நடத்திய 'பந்த்'துக்கு மக்களின் ஆதரவு இல்லாதது, எதைக் காட்டுகிறது?

! பூனைக்குத் தோழர்களாக இருக்கும் இந்தக் காவல்காரர்களால், நமது பாலுக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியாது என மக்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது!

● என். பாலகிருஷ்ணன், மதுரை

? 'தோழமைக் கட்சி என்பதற்காக அவர்கள் பேசும் எல்லாவற்றையும் ஏற்க வேண்டும் என்ற அவசியம் இல்லை' என்கிறாரே கருணாநிதி?

! தோழமைக் கட்சி என்பதாலேயே தி.மு.க. ஆட்சி செய்கிற எல்லா காரியங்களையும், வாய் மூடி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லையே!

● லலிதா செல்லப்பா, பம்மல்

? 'நான் ஹேமமாலினியின் தீவிர ரசிகன். அடுத்த படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க ஆசை' என்று ஜொள்ளு விட்டிருக்கிறாரே லல்லு? அமைச்சருக்கு இது அழகா?

! பாக். பிரதமரைச் சந்திக்கப்போன பிரணாப் முகர்ஜி, அவர் ஐஸ்வர்யா ராய் ரசிகர் என்றறிந்து, அந்த நடிகை நடித்த படங்களின் வி.ஸி.டிக்களைக் கொண்டு போய்ப் பரிசளித்ததே ஒரு கசப்புணர்வை ஏற்படுத்தியது. பிரணாப்பை நல்ல வராக்கிவிட்டார் லல்லு!

● வீர செல்வம், பூம்புகார்

? பெரியார், அண்ணாவுக்குப் பிறகு கலைஞர் சோனியாவை எப்போதும் பெருமைபடப் பேசுகிறாரே?

! அதிகார மையம் எங்கிருக்கிறது என்பதை உணர்ந்திருப்பதால்.

● மீனா ரெங்கநாதன், சென்னை - 33

? ராக்கெட் வேகத்தில் ஏறும் விலைவாசி உங்களை எந்த அளவு பாதித்துள்ளது?

! அறிவிக்கப்படும் சிறு சலுகைகளால் திருப்தி அடைய முடியாத அளவுக்கு!

● வெ.ராம்குமார், வேலூர்

? 'தமிழகத்தைப் பொறுத்தவரை

பா.ஜ.க.வுக்குத் தனியே வாக்கு வங்கி எதுவும் கிடையாது' என்ற சோவின் கருத்து பற்றி?

! வங்கி இல்லைதான். ஆனால், சின்ன



* மன்னிக்க முடியாத...



*.... அருவருப்பு...!



* சின்னமீன் பரிசு!

உண்டியல் இருக்கிறது. அதன்மேல் சில கட்சியினருக்கு ஒரு கண்ணும் இருக்கிறது! காரணம், டெல்லியில் அவர்கள் பிரம்மாண்ட வங்கி தொடங்கக் கூடும் என்பதே.

● கே.எஸ். சுந்தரம்,
பெங்களூரு ❑

? சி.பி.ஐ.க்கு லஞ்சம் கொடுக்க முயன்ற அஸ்ஸாம் அமைச்சர்; போலீஸைக் கொலை செய்ததாகக் கைது செய்யப்பட்ட உ.பி. அமைச்சர் - நாடு எங்கே போய்க்கொண்டிருக்கிறது?

! அரசியலில் நுழையும் கொடிய குற்றவாளிகள் என்ற நிலை மாறி, கொடிய குற்றவாளிகள் நடத்தும் ஆட்சி என்ற நிலையை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது!

● ஆர். மைதிலி,
அச்சிறுபாக்கம்

? 'தசாவதாரம்' படத்தில் கமலின் மேக்கப்புக்காக மட்டுமே ஆறு கோடி வாரி இறைத்திருக்கிறாங்களே; இன்னும் ஷூட்டிங், நடிகர் சம்பளம்... நினைத்தாலே தலை சுற்றுகிறதே?

! நமக்கு ஏன் தலை சுத்தணும்? புரொட்யூசருக்கும் ஃபைனான்ஷியருக்கும்தானே தலை சுத்தணும்? இப்போ இருக்கிற டிரெண்டைப் பார்த்தா, அவங்களுக்குக் கூடத் தலை சுத்தறா மாதிரி இல்லை; திருஷ்டி சுத்தறாப்போலத்தான் இருக்கு!

● எஸ். பக்கிரிசாமி,
திருவாரூர்

? சமையல் எரிவாயு அடுப்புகளை இலவசமாக வழங்கிய தமிழக அரசு, சிலிண்டர் விலையைக் குறைக்காமல் இருப்பது பற்றி...?

! மகளிர் மாநாடுல, ஒரே சிலிண்டர் உள்ளவங்களுக்கு, முப்பது ரூபாய் குறைக்கறதா அறிவிச்சிருக்காங்க. கலங்கிய குட்டையில் சின்னதா ஒரு மீன் பிடிக்க கனிமொழிக்குப் பரிசளித்திருக்கிறார் கலைஞர்!

● க.நா.இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்

? ஒரிஸ்ஸா மாநிலத்தின் பெயரை ஒடிஷா என்று மாற்றப் போகிறார்களாமே?

! ஒடிஷாவோ, ஒரிஸ்ஸாவோ...! மிகவும் பின்தங்கிய அந்த மாநிலத்தின் தலைவிதி பெரிசா மாறிடப் போறதில்லைப்பா!

● என்.சண்முகம்,
திருவண்ணாமலை★

? குஜ்ஜர்களின் இட ஒதுக்கீடு பிரச்னையில் மாநில அரசும் மத்திய அரசும் மோதிக்கொள்வது பற்றி...?

! மாநில பா.ஜ.க.

❑ ரூ 100/- பரிசு பெறுபவர்:
கே.எஸ்.சுந்தரம்,
பெங்களூரு

அரசுக்குள்ளேயே மீனா பிரிவினர் மோதுகிறார்களே! பதவி விலகி பயம் காட்டுகிறார்களே! அதைவிட இந்த மோதல் ஒன்றும் கவலைக்குரியதல்ல.

● பழ.கவிதா சிவமணி,
புன்செய்புளியம்பட்டி

? ''இந்தியாவுக்கு ஏன் எண்ணெய் வளத்தைத் தரவில்லை? என்று கடவுள் பேரில் எனக்குக் கோபம் உண்டு'' என்கிறாரே ப.சிதம்பரம்?

! எண்ணெய் வளமே இல்லாத எத்தனையோ நாடுகள், பொருளாதார முன்னேற்றமும் ஸ்திரத்தன்மையும் கண்டுள்ளன. அவற்றில் உள்ளது போன்ற அரசாங்கங்களையும் அமைச்சர்களையும் தருமாறு நாம் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டியதுதான்.

● எஸ்.ப்ரியதர்ஷினி,
திருநெல்வேலி

? அரசு மருத்துவமனைகளில் குழந்தைகள் மாறுவதும் காணாமல் போவதும் சமீப காலங்களில் தொடர்கிறதே இதில் அரசு கவனம் செலுத்தாமலிருப்பது ஏன்?

! புதிதில்லை; பொன்னியின் செல்வன் காலத்திலிருந்தே தொடர்கிற கதைதான் என்ற போதிலும், அரசு நிர்வாகத்தில் அலட்சியம் கூடாது. பெற்றோரும் கவனமாய் இருப்பது அவசியம்.

● கே.ஜி.எஸ், கிருஷ்ணாபுரம்

? 'கலைஞர் என்னைத் தமிழால் கற்பழித்தார்' என்று வாலியும், 'கலைஞரின் கடிதங்களைப் படிக்கும்போது, தொண்டர்களுக்கு முதலிரவில் கிடைக்கும் சுகம் கிடைக்கும்' என்று அப்துல் ரகுமானும் பேசியாயிற்று... இதைக் கேட்டுவிட்டு நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் தராசு?



● கசப்புணர்வு செய்கை



● அருவருப்புப் பேச்சு



● அர்த்தமற்ற கோபம்!

! ஆபாசக் குப்பை என்பதால் மன்னிப்பது கஷ்டம்; ஆனால், மறப்பது நமது மன ஆரோக்கியத்துக்கு முக்கியம். ஆகவே, மன்னிக்காவிட்டாலும் மறப்போம்.

● பிரபா லிங்கேஷ்,
மேலகிருஷ்ணன்புதூர்

? கடல்சார் காவல் நிலையம் இல்லாததால் பயங்கரவாதம் அதிகரித்துள்ளதாகக் கூறுகிறாரே ஜெயலலிதா?

! சமீபத்தில், ஆறு கடலோர காவல் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால், அரசின் கொள்கை விடுதலைப் புலிகளுக்கெதிராக வலிமையான முறையில் பதிவாகாத வரையில், இக் காவல் நிலையங்கள் ஏனோ தானோ என்றுதான் செயல்படும். எனவே அதிக பலன் தரமாட்டா.

★ ரூ. 50/- பரிசு பெறுபவர்:
என்.சண்முகம்,
திருவண்ணாமலை



ஃபாதர் - பைலட் விஜய்!

விஜய்யைப் புரிஞ்சுக்கறது ரொம்பக் கஷ்டம். எப்போ என்ன முடிவு எடுப்பான்னு யாருக்கும் தெரியாது. ஆனா, அவன் எடுக்கற முடிவு எல்லோருக்கும் ஆச்சரியமா இருக்கும். இதை உண்மைன்னு நிரூபிக்கற மாதிரி ஒரு சம்பவம் நடந்தது.

1991ஆம் வருடம். நான், என் கணவர், விஜய், அவனோட மாமா சேவியர் பிரிட்டோ எல்லோரும் வெளிநாடு சுற்றுப் பயணம் சென்றோம். இத்தாலி, ஜெர்மனி, ஃபிரான்ஸ்னு பல நாடுகளுக்குப் போனோம். வெளிநாட்டுப் பயணம்ங்கறது உண்மையிலேயே அற்புதமான விஷயம்.

உலகத்துல இருக்கற விதவிதமான மனுஷங்களையும் அவங்க கலாசாரத்தையும் தெரிஞ்சுக்கலாம். நல்ல விஷயங்களைக் கத்துக்கலாம். அதை நம்முடைய வாழ்க்கையில கடைப்பிடிச்சுப் பார்க்கலாம். மொத்தத்துல அறிவு கொஞ்சம் விசாலப்படும். இல்லையா? அந்த வெளிநாட்டுப் பயணமும் எங்களுக்கு அப்படித்தான் அமைஞ்சது.

அங்கல்லாம் ஒரு இடத்துலருந்து இன்னொரு இடத்துக்குப் போகணும்னா ட்ரெயின்தான் வசதி. ஆனா, அங்க ட்ரெயின்லாம் ரொம்ப பங்க்சுவல். ஒரு நொடிகூட லேட்டாக் கிளம்பாது. சரியான நேரத்துக்குக் கிளம்பிடும். எல்லோரும் 'கிடுகிடு'ன்னு ட்ரெயினைப் பிடிக்க ஓடிடுவாங்க. நானும் பிரிட்டோவும்தான் ரொம்பக் கஷ்டப்பட்டோம்.

எங்க ரெண்டு பேராலயும் அவ்வளவு



ஷோபா சந்திரசேகர்

வேகமா ஓட முடியாது. அப்போல்லாம் விஜய்தான் கைகொடுப்பான். எங்க லக்கேஜையெல்லாம் அவனே தூக்கிக்குவான். 'வாம்மா! இன்னும் கொஞ்ச தூரம்தான்...'ன்னு சொல்லிக்கிட்டே என் கையைப் பிடிச்சு 'தரதர'ன்னு இழுத்துக்கிட்டே போய், ட்ரெயின்ல ஏத்தி விட்டுடுவான்.

அந்தப் பயணத்தை மறக்கவே முடியாது. வாடிகன்ல போப் ஆண்டவரைப் பார்த்தோம். அவர்கிட்ட ஆசீர்வாதம் வாங்கினோம். அப்போ இரண்டாம் ஜான் பால், போப்பா இருந்தார். பிரிட்டோவுக்கு அங்கே சிலரைத் தெரிஞ்சிருந்தது. போன அன்னைக்கே போப்பைப் பார்த்துட்டோம். உண்மையில் போப் பாண்டவரைப் பார்க்கப் பெரிய தடை எல்லாம் எதுவும் இல்லை. ரொம்ப ஈஸியா யாரு வேணும்னாலும் பார்க்கலாம்.

அந்தச் சுற்றுப் பயணம் முடிஞ்சு வீட்டுக்கு வந்தோம். வந்ததும், விஜய் ஒரு பெரிய அணுகுண்டைத் தூக்கிப் போட்டான். ''நான் சர்ச்சுல ஃபாதரா ஆகப் போறேன். அதுக்கான காலேஜ்ல சேரப் போறேன்.''

எங்களுக்கு அதிர்ச்சியா இருந்தது. நான் கேட்டேன். ''எதுக்கு நீ ஃபாதரா ஆகணும்?''


''முதல்ல ஃபாதரா ஆவேன். அப்புறம் போப் ஆண்டவரா ஆயிடுவேன்'' ரொம்ப கூலா சொன்னான் விஜய். போப் ஆண்டவராகறது அவ்வளவு சுலபமான விஷயமா என்ன? ஆனா விஜய்க்கு, அந்த வயசுல அது ஈஸியா தோன்றியிருக்கு.

நானும் என் கணவரும் எவ்வளவோ எடுத்துச் சொன்னோம். ''இங்க பாரு விஜய்! அதெல்லாம் ரொம்பக் கஷ்டம். நீ ஃபாதரா ஆயிட்டா, நாங்க எங்கே போவோம்? எங்களையும் கொஞ்சம் நெனைச்சுப் பாரு''ன்னு எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். அவன் காதுலயே வாங்கிக்கலை. 'நான் பிடிச்ச முயலுக்கு மூணு காலு'ம்பாங்களே அது மாதிரி, சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கிட்டு இருந்தான். 'நான் பைபிள் காலேஜ்ல சேரப்போறேன்.'

எனக்கும் என் கணவருக்கும் என்ன செய்யறதுன்னே தெரியலை. அவன்கிட்ட, 'சரி சரி'ன்னு சொல்லிக்கிட்டே அவனைச் சமாதானப்படுத்த என்ன வழின்னு யோசிக்க ஆரம்பிச்சோம். அப்போ ஒரு நாள், ஒருத்தரைப் பார்த்தோம். அவங்க குடும்பமே ரொம்ப பாரம்பரியமான கிறிஸ்தவக் குடும்பம்.

அவர்கிட்ட பேசிக்கிட்டு இருக்கும்போது நான் சொன்னேன். 'எங்க விஜய் ஃபாதராப் போகப் போறேன்னு சொல்லிக்கிட்டு இருக்கான். எங்களுக்கு என்ன பண்றதுன்னே தெரியல.'

அவர், 'உங்களுக்கு விஜய் ஒரே பிள்ளைதானே?'ன்னு கேட்டார். நானும் 'ஆமாம்'னு சொன்னேன். அவர்,



என் செல்ல தளபதி!

'அப்படின்னா பயப்படாதீங்க. விஜய்யால ஃபாதரா ஆக முடியாது. ஒரு குடும்பத்துல ரெண்டு பிள்ளைங்க இருந்தா, அதுல ஒரு பிள்ளை ஃபாதராக முடியும். ஒரே ஒரு பிள்ளை மட்டும் இருந்தா ஃபாதரா ஆக முடியாது. அதுக்கு கிறிஸ்தவ மதச் சட்டத்துல இடம் இல்லை'ன்னார்.

அப்புறம்தான் எங்களுக்கு நிம்மதி வந்தது. இதை விஜய்கிட்ட வந்து சொன்னோம். வேற என்ன பண்ண முடியும்? அவனும் ஏத்துக்கிட்டான். அதுக்கு அப்புறம் அவன் ஃபாதராப் போகப் போறதைப் பத்திப் பேசவே இல்லை. ஆனா, கொஞ்ச நாள் கழிச்சு இன்னொரு அணுகுண்டைத் தூக்கிப் போட்டான். ''நான் பைலட்டா ஆகப் போறேன்''ன்னு.

ஒரு விமானத்துக்கு பைலட்டாகறதுங்கறது நல்ல விஷயம்தான். ஆனா, எப்போ பாத்தாலும் வானத்துல பறந்துக்கிட்டே இருக்கணும். பெத்தவங்க வயித்துல நெருப்பைச் சுமந்துக்கிட்டு, தினம் தினம் 'நம்ம மகன் நல்லபடியா வீட்டுக்குத் திரும்பணுமே'ன்னு காத்துக்கிட்டு இருக்கணும். மகன் வீடு திரும்பற வரைக்கும் நிம்மதி இருக்காது. அப்படியே திரும்பி வந்த பிறகும், அடுத்த நாளும் அவன் வேலைக்குப் போகணுமேன்னு பயமா இருக்கும்.



ஆனா, விஜய் இதையெல்லாம் பத்திக் கவலைப் படலை. ஃபாதரா ஆகப் போறேன்னு சொன்ன அதே பல்லவி. 'நான் பைலட்டா ஆகணும்'னு சொல்லிக்கிட்டு இருந்தான். அப்புறம் நானும் என் கணவரும் 'வீட்டுக்கு ஒரே பிள்ளையா இருக்கறவங்க பைலட்டா ஆக முடியாது. இதுவும் அந்த 'ஃபாதர்' கதை மாதிரிதான். அதனால அந்த ஆசையை விட்டுடு'ன்னு சொல்லி, அவனைச் சமாதானப்படுத்தி அந்த எண்ணத்தை மாத்தினோம். அதுக்கு அப்புறம்தான் அவன் நடிகனாகணும்னு ஆசைப்பட்டான்.

விஜய் தோசைன்னா ரொம்ப விரும்பிச் சாப்பிடுவான். மூணு வேளையும் தோசை

என்ன பரிசு?

- சரியான விடைகளுடன் வரும் முதல் 10 கூப்பன்களுக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட்...
- குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ்...



சாப்பிடணும்னாக்கூட அவன் ரெடி. ஆனா, அவன் தோசையே சாப்பிட முடியாத ஒரு சந்தர்ப்பமும் வந்தது. ஒரு நாள், ரெண்டு நாள் இல்லை. ஒரு வருஷத்துக்கு அவனால தோசையே சாப்பிட முடியலை.

(தொடரும்)

எழுத்து வடிவம் : **பாலு சத்யா**

ஹலோ வாசகர்களே!

ஷோபா சந்திரசேகர் எழுதற, 'என் செல்ல தளபதி' தொடர் அசத்தலா இருக்குதானே? நீங்களும் சும்மா அசத்தறீங்க இல்லே. போன வாரப் போட்டிக்கு மளமளன்னு என்ட்ரீஸ் குவியுது!

- விஜய் வின்னர்ஸ் - 5 தொடர் சங்கிலிப் போட்டிக்கான முடிவும், இந்த வார கூப்பனும் பக்கம் 88ல் உள்ளன.
- பதிமூணு வாரமும் அதிரடிப் போட்டி தொடரப் போகுது. ஒவ்வொரு வாரமும் பரிசு! பதிமூன்றாவது வாரம் பம்பர் போட்டி, வியப்பான மெகா பரிசுகள்!
- நீங்க செய்ய வேண்டியது ரொம்ப சிம்பிள்! ஒவ்வொரு வாரமும் ஐந்து கேள்விகள் கேட்போம். அதுல ஒண்ணு தொடரிலிருந்து வரும். சரியான விடைகளை 'டிக்' அடிச்சு கூப்பனையும் நிரப்பி, அந்தப் பக்கத்தைக் கத்தரிச்சு அனுப்பணும்.
- ஒருவரே எத்தனை கூப்பன் வேணும்னாலும் அனுப்பலாம். ஆனா ஜெராக்ஸ் கூடாது. எவ்வளவு வேகமா அனுப்பறீங்களோ அந்தளவுக்குப் பரிசு பெற சான்ஸ் இருக்கு!
- வெய்ட்! பதிமூன்றாவது வார பம்பர் போட்டியில நீங்க கலந்துக்கணும்னா 'விஜய்' ஸ்டில் போட்ட 'தொடர் சங்கிலி கூப்பனை' பத்திரமா சேகரிக்கணும். (இந்த வாரம்-87ஆம் பக்கம் இருக்கு)
- பதிமூன்றாவது வார போட்டியோடு தொடர் சங்கிலி கூப்பன்கள் அனைத்தையும் இணைச்சு அனுப்பணும். ஒரு கூப்பனை 'மிஸ்' பண்ணினாலும், நீங்க அந்த வியப்பான பரிசுகளை 'மிஸ்' பண்ணிடுவீங்க.
- இந்த பதிமூன்று வாரத்தில் உங்களுக்கு ஒரு இதழ் கிடைக்காமப் போனாலும், உடனே எங்களுக்கு ஃபோன் பண்ணுங்க. உங்க நகரத்து ஏஜெண்ட் மூலமா கிடைக்க உதவி செய்யறோம். ஷோ, டயல் : 4343 8888
- போட்டி குறித்த இறுதி முடிவுகளில் ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
- போட்டியில் கலந்துக்கங்க; பரிசுகளை அள்ளுங்க!



விஜய் வின்னர்ஸ் -5

தொடர் சங்கிலிப் போட்டி பரிசு பெற்றோர் விவரம்...

1. சிம்மவாஹினி, சென்னை
2. ஆ.கண்ணதாசன், சென்னை
3. ஆர்.கணபதி, திருநெல்வேலி
4. அ.ஞானபாஸ்கரன், நெல்லிக்குப்பம்
5. ஆர்.நாகராஜன், சென்னை
6. எஸ்.அனிருத் சித்தார்த், சென்னை
7. எம்.அந்தோனி பாக்யராஜ், சென்னை
8. வி.சார்லஸ், துறையூர்
9. சு.இந்துமதி, நெய்வேலி
10. ஜி.பாரதி, நெல்லிக்குப்பம்

* முதல் பத்து கூப்பன்களை அனுப்பிய மேற்கண்டோருக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.
* குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ் அனுப்பி வைக்கப்படும்.

இந்த வாரக் கேள்விகள்!

கடைசி தேதி : 10.07.2008

1. விஜய் யாராக ஆக நினைத்தார்?
   ☐ பைலட் ☐ டிரைவர்
2. விஜய்யின் அடுத்த படம்?
   ☐ வில்லு ☐ சிங்கம்
3. விஜய் விரும்பிச் சாப்பிடுவது
   ☐ தோசை ☐ இட்லி
4. 'ஆனந்தம் ஆனந்தம் பாடும்' பாடல் இடம் பெற்ற படம்
   ☐ பூவே உனக்காக
   ☐ நிலாவே வா
5. விஜய் படித்த காலேஜ்
   ☐ லயோலா ☐ நந்தனம்

பெயர் : .... வயது : ....

முகவரி : ....

....

செல் : .... இ.மெயில் : ....

போட்டி கூப்பன் அனுப்ப வேண்டிய முகவரி :

விஜய் வின்னர்ஸ் போட்டி - 8,

கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு ரோடு,

ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

மனிதம்



"அம்மா, எனக்கு நேரமாயிடுச்சு. அப்பாவ பஸ்ல போகச் சொல்லு'' பதிலுக்குக் காத்திராமல் வண்டியை உசுப்பினான்.

''டேய் செல்வம்... செல்வம்...'' கிச்சனிலிருந்து மீனாட்சி வருவதற்குள் வண்டிச் சத்தம் தெருவைக் கடந்து கரைந்தது.

''இவனுக்கு வேலை கிடைச்சாலும் கிடைச்சது, அப்பாவுக்கும் புள்ளைக்கும் நடுவுல என் ப்ராணனை பறிபோகுது'' - முந்தானையில் கையைத் துடைத்துக் கொண்டே மீண்டும் கிச்சனுக்குள் நுழைந்தாள். செல்வத்துக்கு வேலை கிடைத்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. கணவர் துரைசாமியின் அலுவலகத்தைக் கடந்து செல்வம் தன் அலுவலகத்துக்குச் செல்வதால், தன் பைக்கை அவனிடம் கொடுத்து விட்டுப் பின்னால் அமர்ந்து பெருமையாகச் செல்வார். திடீரென்று நான்கு நாட்களாக அவன் அப்பாவை ஏற்றிச் செல்லாமல் சென்றுவிடுவதால், மீனாட்சிக்குக் கூடுதல் தலைவலி உருவானது.

''என்னடீ... இன்னிக்கும் துரை கிளம்பிட்டாரோ? ஒத்தப் புள்ளன்னு பொத்திப் பொத்தி வளத்தியே, பாத்தியா இப்போ... நம்ம ரெண்டுபேரையுமே மதிக்காம அலையறான்... இவ்ளோ அவசரமா எவளப் பாக்கப் போறான்? இதுக்குத்தான் ஆண அடிச்சி வளக்கணும், பொண்ணப் பொத்தி வளர்க்கணும்னு சொல்வாங்க. எனக்கு இன்னும் பத்து நிமிஷம்தான் இருக்கு. அதுக்குள்ள எப்படிப் போறது?'' துரைசாமி கோபத்தில் கத்தினார்.

''நம்ம பிள்ளையப் பத்தி நாமே தப்பா பேசறது நல்லா இல்லீங்க. இன்னிக்கு ஒரு நாள் ஆட்டோல போங்க. ராத்திரி வரட்டும் பேசறேன்.''

''தினமும் ஆட்டோவுக்கு ஐம்பது ரூபாய் கொடுத்தா, குடும்பம் எப்படி நடத்தறது?'' முணுமுணுத்துக்கொண்டே வெளியில் வந்து ஆட்டோ பிடித்தார்.

ஒரு சிக்னலை ஆட்டோ தாண்டிச் செல்லும்போது, செல்வம் செல்வதைக் கண்டார். செல்வத்தின் பின்னால் அவனுடன் பணியாற்றும் மணி அமர்ந்திருந்தான்; இரண்டு கால்களும் ஊனமாய். அவருடைய கோபம் கண்ணீராய்க் கரைந்தது.



கார்த்திக்

தமிழர்களின் மனத்தில் நீங்காத நினைவாக இடம் பெற்ற ஒரு திரைப்படப் பாடல் என் நினைவுக்கு வருகிறது.

'எந்தக் குழந்தையும் நல்ல
குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே
அவன் நல்லவன் ஆவதும் தீயவன்
ஆவதும்
அன்னை வளர்ப்பினிலே'

என்ற புகழ்பெற்ற இவ்வரிகள், பெற்றவர்களுக்கு இருக்க வேண்டிய பொறுப்புணர்வை அழகாக உணர்த்துகின்றன.



சுவாரசியமான கதை ஒன்று உண்டு. ஓர் ஓவியர், குழந்தை ஏசுவை வரைவதற்காக, அழகான, கருணைபொங்கும் ஒரு குழந்தை முகத்தைத் தேடினார். கனிவு, அன்பு, லக்ஷணம் எல்லாம் பொருந்திய குழந்தை கிடைத்தது. அதனால் எல்லோராலும் பாராட்டிக் கொண்டாடப்பட்ட அழகான ஓவியமும் கிடைத்தது. பல வருடங்கள் கழிந்த பிறகு அதே ஓவியர், வரைவதற்காக ஒரு கொடூரமான முகத்தைத் தேடினார். அந்த முகத்தில் திருட்டுத்தனம், கொலைவெறி எல்லாம் இருக்க வேண்டும் என எதிர்பார்த்தார். அவ்வாறே அவருக்கு ஓர் ஆள் கிடைத்தான். அந்த ஓவியமும் நன்றாகவே வந்திருந்தது. தான் பல வருடங்களுக்கு முன்பு வரைந்த கருணை பொங்கும் முகத்துக்குச் சொந்தக்காரன்தான், இப்போது கொடூரமாகச் சித்திரிக்கவும் கிடைத்திருக்கிறான் என்பது பிறகுதான் அந்த ஓவியருக்குத் தெரியவந்தது. பெத்தவங்க மட்டுமின்றி மத்தவங்களும் சேர்ந்துதான் வாழ்வை வடிவமைக்கிறார்கள்.

'பெத்தவங்க பாசமுண்டு
மத்தவங்க ஆசியுண்டு!
முத்துமணி ரத்தினத்த
குத்தஞ்சொல்ல யாருண்டு!' என்று பாடலாகிறது.

எங்கள் காதல் வாழ்க்கையில் அழகான இரண்டு ரத்தினங்கள் கிடைத்திருக்கின்றனர். இருவரும் பெண் குழந்தைகள். பெரியவள் 1995ல் பிறந்தாள். பாட்டின் வடிவத்துக்குப் பல்லவி முதன்மையாக அமைவதுபோல, முதல் பெண்ணுக்கு பல்லவி என்றே பெயரிட்டோம்; இப்போது எட்டாம் வகுப்பு படிக்கிறாள். இளையவள் மேகா, 2005ல் பிறந்தாள்; ப்ரி.கே.ஜி. படிக்கிறாள்.

பெரியவள் ரொம்ப சாது. சின்னவளோ அதற்கு எதிரானவள்தான். ரொம்ப குறும்பு. சுட்டிப் பெண் பாருங்க! நான் இல்லாத தருணங்களில் எல்லாம் பல்லவிதான் பார்த்துக்கொண்டாள். ஒரு முறை மேகாவுக்குப் பிறந்தநாள் கொண்டாட வழியின்றி நாங்கள் கச்சேரிக்காக வெளியூர் சென்றுவிட்டோம். சின்னவளின் பிறந்தநாள் விழாவை, பல்லவியே முன் நின்று எல்லோரையும் அழைத்து, உபசரித்து, பிறந்த நாள் கேக்

கலப்பு மண

வெட்டி என அமர்க்களப்படுத்திவிட்டாள். பன்னிரண்டு வயதுக்குள் ஒரு பெண் பிள்ளை ஒரு விழாவைப் பொறுப்புடன் நடத்தி வைப்பதென்பது, நாங்கள் பெருமைப்படுவதாக இருக்கிறது.

பொதுவாகவே, சொந்தத்தில் மணம் முடிக்காமல், கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளின் குழந்தைகள், சிறந்த அறிவாற்றலோடும் ஆரோக்கியமாகவும் வளர்வார்கள் என்று மருத்துவ அறிவியல் சொல்கிறது; நடைமுறை வாழ்க்கையில் அது நிரூபணமும் ஆகியுள்ளது.

அதனாலேயே நாங்கள்,

சொந்தத்தில் மண முடிச்சா
சோம்பலாகப் பொறக்குமடி!
வெளியூர் மாப்பிள்ளைக்கு
பரிசத்தப் போடு - இவ
விருப்பம்போல புத்திசாலி
பொறந்திடும் பாரு!

- என்று பாடுவோம்.

எங்கள் இருவருக்குமே பாட்டுதான் முகவரி. குரல் வளம்தான் எங்களை உயர்த்திய சொத்து. ஐரோப்பிய நாடுகளில் நடத்திய கச்சேரிகளில் எங்கள் பல்லவி, தனது நான்கு வயதிலேயே பாடியிருக்கிறாள்.

(அடுத்தவாரம் புஷ்பவனம் குப்புசாமி)


எழுத்தாக்கம் : **சிவன்**

* மேகா




விதைகள்!

"மருந்து, மாத்திரை, ஆபரேஷன்னு போயும், சரிவர செயல்படாத உடம்பை, அதன் இயல்பு நிலைக்குக் கொண்டு வரச் செய்யும் 'பிசியோதெரபி' பத்தி இன்னமும் ஏனோ நம்ம நாட்டிலே பலரும் தெரிஞ்சுக்காம இருக்கறாங்க!'' என்று கூறும் டாக்டர் சுந்தர், மனித உடம்பின் பிரச்னைகளைத் தீர்க்கும் 'பிசியோதெரபி' பற்றி விளக்குகிறார்.



"'பிசியோதெரபி'ன்னா தமிழில் 'மறுவாழ்வு மருத்துவம்'னு சொல்லலாம்! உடம்புக்கு ஏதாவது நோய் வருதுன்னா ஊசி, மருந்து, அறுவை சிகிச்சைன்னு குணப்படுத்திடறோம். ஆனா, எலும்பு முறிவு, நரம்புத் தளர்ச்சி, பக்கவாதம்னு வந்துட்டா, பாதிக்கப்படும் அந்த உடம்புக்கு 'பிசியோதெரபி'தான் சரியான மருத்துவம்.

உதாரணமா, நரம்புத் தளர்ச்சியால அவதிப்படறவங்களையும், அடிபட்டு கை, கால் முறிவுக்குப் பிறகு பழையபடி செயல்பட முடியாதவங்களையும் சில உடற்பயிற்சிகளைச் செய்ய வைக்கறது மூலமா, அவங்களோட பிரச்னைகளைத் தீர்த்து, பழையபடி செயல்பட வைக்கலாம்.



டாக்டர் சுந்தர்

திடீரென பக்கவாதம் வந்து கை, கால் செயலிழந்து போனவங்களை டாக்டர் கிட்டே அழைச்சுக்கிட்டுப் போறோம்; மருந்து தர்றோம்; அவர்களை நல்லபடியா பார்த்துக்கறோம். ஆனா, அவங்களை பழைய நிலைக்குக் கொண்டு வர, 'பிசியோதெரபி' வேணும்ங்கறதை பலரும் மறந்துடறாங்க.

"கொஞ்சம் வாழ்க்கை

உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டு படுக்கையில் விழுபவர்கள் மனநிலை எப்படியெல்லாம் பாதிக்கப்படும்? ஓடியாடிக்கிட்டு இருந்தவங்க, திடீரென படுத்த படுக்கையானா, மனநோயாளியாகவோ, 'பெட்ஸோர்'னு சொல்லக்கூடிய ஆபத்தான 'படுக்கைப் புண்' நோயாளியாகவோ மாறிடறாங்க. உடனடியா தேவைப்படறது இந்த 'மறுவாழ்வு வைத்தியம்'தான்!



அதேபோல இதய அறுவை சிகிச்சை, மூட்டு மாற்று அறுவை

சிகிச்சை, நியூரோ சர்ஜரி செய்துகொண்டவர்களுக்கும் 'பிசியோதெரபி'அவசியம்!'' என்கிறார் டாக்டர் சுந்தர்.

''தீராத உடல் வலியால் அவதிப்படுபவர்களுக்கும் மருந்து மாத்திரை இல்லாமல் 'அல்ட்ரா சவுண்ட், அல்ட்ரா வயலட்' சிகிச்சை மூலம் உடனடி வலி நிவர்த்தியும் செய்யலாம்.

இன்னைக்கு 'சாஃப்ட்வேர்' கம்பெனிகள்ல வேலை செய்யற இளம் வயதினர் பலரும் கழுத்துவலி, முதுகுவலி, இடுப்பு வலின்னு தொடர்ந்து ஏதாவது வலிகளில் தவிக்கறாங்க. அவங்க எப்படி நிற்கணும், எப்படி உட்காரணும்னு 'பிசியோதெரபி' டிப்ஸ் தந்தாலே போதும்! அதன் பிறகு ஐ.டி. துறை சார்ந்தவர்களை எந்த வலியும் அண்டவே செய்யாது! பெரிய பெரிய வெளி

வேணும்!''



நாட்டுக் கம்பெனிகள்ல எல்லாம் 'பிசியோ தெரபி' முறையை ரொம்பவும் சிறப்பா செயல்படுத்தறாங்க!'' என்கிறார்.

''மூளை வளர்ச்சியற்ற, உடல் ஊனமுற்ற குழந்தைகளைச் சரியான முறையில் 'பிசியோதெரபி' மூலம் மீட்டெடுக்க முடியும்! யாரையாவது சார்ந்து வாழ வேண்டிய நிலையிலிருந்து, தங்கள் வேலைகளைத் தாங்களே செய்து கொள்ளும்படியான நிலைக்கு அவர்களைத் தயார்ப்படுத்திட முடியும்!

நம்ம உடம்புங்கறது, அற்புதமான ஒரு படைப்பு! அதைச் சரியா முறைப்படுத்தினோம்னா, செய்ய முடியாத காரியம் எதுவுமே இல்லை! இந்த உண்மையை உணர்த்தற ஒரு சிறப்பான மருத்துவ முறை தான் இந்த 'பிசியோதெரபி' '' என்று ரத்தினச் சுருக்கமாகச் சொல்கிறார் டாக்டர் சுந்தர்.

'பிசியோதெரபி' பரவலாகி எல்லோருக்குமான எளிய மருத்துவமாய் பரவலாகிவிட்டால் போதும். பிறகு உங்களுக்கு என்ன வரம் வேண்டுமென ஒரு முதியவரைக் கேட்டால், 'வாழ்வதற்கு இன்னும் கொஞ்சம் வாழ்க்கை வேணும்' என்பார்.

– எம்.ஆர்.இராஜேந்திரன்



‘‘**பெ**ரியாரால் தேர்ச்சி பெற்றவராக அறிவிக்கப்பட்ட கலைஞருக்கு, மார்க் போடும் தகுதி எவருக்கும் கிடையாது’’ என்று கனிமொழி, கடலூர் தி.மு.க. மகளிர் அணி மாநாட்டில் பேசியபோதே பா.ம.க. கழற்றிவிடப்படும் என்று உடன் பிறப்பு களுக்குப் புரிந்துவிட்டது. மேலும் கலைஞ ரோடு மிக நெருக்கத்தில் இருக்கும் மத்திய அமைச்சர் ராஜா, பொன்முடி ஆகியோர் ‘பா.ம.க.வை உடனே கட் பண்ணிவிட வேண்டும்’ என்பதில் உறுதியாக இருந்தது காரணமாகச் சொல்லப்பட்டாலும், விஷ யத்தை ஆறப் போடாமல் முடி வெடுத்ததற்கு முக்கிய காரணம், ‘பா.ம.க. சார்பில் இரண்டு மாதங் களுக்கு முன்னரே ஜெயலலிதாவுடன் தொடர்பு கொள் ளப்பட்டு, கூட்டணி உறுதி செய்யப் பட்டதால்தான்’ என்று தி.மு.க. வட்டாரம் சொல் கிறது.





‘‘இப்போதே இந்தப் பிரிவு வரா மல் இருந்திருந்தால், தேர்தலின்போது கூட் டணி தொடரும் பட் சத்தில், ஒருவர் காலை ஒருவர் வாரிவிடும் வேலைதான் நடந்தி ருக்கும்’’ என்கிறார்கள் உடன்பிறப்புகள். மேலும், ‘ஆறு வட மாவட்டங்களில் உள்ள தி.மு.க. பிரமுகர் கள், பா.ம.க.வுடன் கூட்டணி அமைக்கும் பட்சத்தில், பெரும்பாலான இடங்களை அதற்கு விட்டுக் கொடுக்கும் கட்டாயம் இருக்கும் என்பதால் தயங்கினார்கள். கட்சி யின் செல்வாக்கு அந்த மாவட்டங்களில் வீழ்ந்து வருகிறது’ என்பதையும் கலைஞரி டம் சொல்லி வந்திருக்கிறார்கள். இப்போது தி.மு.க.வுக்கு, தேர்தலின் போது உடன் வர ஒரு வன்னிய அமைப்பு தேவை. காத்திருந்த ஜெகத்ரட்சகன், தி.மு.க. கூட்டணியில் இடங்கள் பெறத் தயாராகி விட்டார்.

பாராளுமன்றத் தேர்தலில் உருவாக வுள்ள கூட்டணி குறித்து, பல யூகங்கள் எழுந்திருக்கின்றன. பா.ஜ.க.வைச் சேர்க் காமல், அ.தி.மு.க - பா.ம.க - ம.தி.மு.க. முடிந்தால், சரத்குமார் ஆகியோரைச் சேர்த் துக்கொண்டு ஓர் அணி அமையக் கூடும் என்கிறார்கள். தேர்தலுக்குப் பிறகு மத்தியில் உருவாகும் சூழலைப் பொறுத்து, ஆட்சி அமைக்க வாய்ப்பு இருக்கும் தேசியக் கட்சியுடன் சேர்ந்து கொள்ளலாம் என்பது ஜெய லலிதாவின் இப்போதைய நிலைப்பாடாம். பா.ஜ.க. இல்லை யென்பது உறுதியானால், இந்த அணியில் இணைய திருமாவளவனுக்கு எந்தத் தயக்கமும் இருக்காதாம். காங்கிரஸ், தி.மு.க. அணியில் தொடரும் அதே வேளையில், விஜயகாந்தையும் வளைத்துப் போடப் பார்க்கிறது. இதற்கிடையில் காங்கிரஸ் இனி சமரச முயற்சிகளை மேற் கொண்டால்கூட, உடைந்த கூட்டணிக்

கண்ணாடி ஒட்டாது என்பதே பா.ம.க. நிலையாம்.

''இது போல பல பிரச்னைகள் வரும் என்றுதான் முதலிலேயே, 'வெளியில் இருந்து ஆதரிப்போம்' என்று தேர்தலின்போது சொன்னீர்களா?'' என்று பா.ம.க. தலைவர் ஜி.கே.மணியிடம் கேட்டோம். ''தோழமையோடு இருந்தால் நல்லது செய்யும்போது பாராட்டி, மக்கள் விரோதச் செயல்களைத் தட்டிக் கேட்கலாம் என்றுதான் அந்த முடிவை எடுத்தோம். ஆனால், பிரச்னைகளை எடுத்துச் சொன்னால் தி.மு.க. அதை விரும்பவில்லை என்பது தெரிகிறது. எங்களை நீக்கியதற்கு மிக அதிகபட்ச விலையை தி.மு.க. கொடுக்கும் என்பதை, எதிர்கால அரசியல் புரியவைக்கும்'' என்கிறார் ஜி.கே.மணி.

தி.மு.க. பாடு சற்றே திண்டாட்டம்தான் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்து.

- ப்ரியன்

கொண்டாடிய பா.ம.க... திண்டாடிய தி.மு.க.!

கூட்டணியை வெட்டிய காடுவெட்டி!



தி.மு.க. - பா.ம.க. பிரிவுக்குக் காரணமாகக் காட்டப்படுகிற வன்னியர் சங்கத் தலைவர் குருவுக்குச் சொந்த ஊர் ஜெயம்கொண்டான் தொகுதியில், மீன்சுருட்டிக்கு அருகில் உள்ள காடுவெட்டி கிராமம். இந்தக் கிராமம் கள்ளச்சாராயத்துக்குப் புகழ் பெற்றது. இவரது அப்பா ஒரு பொதுவுடைமைவாதி. அந்தப் பகுதியிலுள்ள தமிழ் தேசிய அமைப்புகளை ஊக்குவித்தவர்.

குருவின் படிப்பு, பத்தாம் வகுப்பு வரைதான். சிறு வயதிலிருந்தே ஊர் பொதுப் பணிகளில் நாட்டம் கொண்ட இவர், சில காலம் காங்கிரஸில் இருந்திருக்கிறார். நாளடைவில் கட்டைப் பஞ்சாயத்து, 'தாதா' என்று ஏரியாவில் அவரது செல்வாக்கு வளர்ந்தது. வன்னியர் சங்க இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தின்போது, வன்னியர் சங்கத்தில் சேர்ந்து, ஒன்றியச் செயலாளராக வளர்ந்தார். 'நீங்கள் இன்னமும் வேகமாகச் செயல்படவேண்டும்' என்று துடிப்புடன் டாக்டர் ராமதாஸுக்குப் பல கடிதங்களை எழுதியிருக்கிறார். அவரது வேகமான செயல்பாடுகள் டாக்டருக்குப் பிடித்துப் போக, சங்கத்தின் தலைவராகவே உருவாகிவிட்டார். இடையில் ஆள் கடத்தல், கொலை முயற்சி, கலாட்டா என்று இவர் மீது ஏகப்பட்ட வழக்குகள்.

தம் இதயத்தில் இடம் பிடித்த குருவுக்கு, தம்முடைய மனைவியின் வழியில் பெண் பார்த்துத் திருமணம் செய்து வைத்தவரும் மருத்துவரய்யாதான்! பெரம்பலூர் பகுதியில் இவரது செல்வாக்கை முடக்கும் முயற்சிகள் தி.மு.க. ஆட்சியில் எடுக்கப்பட்டபோது, மத்திய அமைச்சரான ராஜாவின் மீது கடுப்படைந்தார். இடையில் ஒரு முறை ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். இப்போது வன்னியர் சங்க இதழான 'கனல்' பத்திரிகைக்கு ஆசிரியராக இருக்கிறார். மிகவும் பாதுகாப்புடன் நடமாடும் குரு, சமீபகாலமாக பெரும்பாலும் சென்னை புறநகர்ப் பகுதியில் வசித்து வருகிறார்.



சுற்றுலா போட்டி முடிவு!

கல்கி (11.05.2008) இதழோடு இணைந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திய 'சுற்றலாம் வாங்க' பரிசுப் போட்டிக்கு, ஏராளமாக கடிதங்கள் குவிந்தன. அதில் அதிகமான கடிதங்கள் சரியான விடைகளைத் தாங்கி வந்ததில், எங்களுக்கு இரட்டிப்பு சந்தோஷம். எனவே, குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து அதிர்ஷ்டசாலிகள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்திருக்கும், வேலூர் தங்கக் கோயிலைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டசாலிகளுக்கு சுற்றுலாவுக்கான தேதி, கடிதம் மூலம் தெரிவிக்கப்படும்.

- ஆசிரியர்,
கல்கி

1. பூமாதேவி, விழுப்புரம்
2. மேரி டெனிஷா, கன்னியாகுமரி
3. கே. கிஷோர்குமார், மதுரை - 07
4. காயத்ரி, திருச்சி
5. உமாதேவி, சேலம்
6. கணேச சிதம்பரம், தேனி
7. த.சாந்தி, திருவாரூர்
8. விசாலாக்ஷி, சென்னை
9. ரா.ராஜாமணி, திண்டுக்கல்
10. உத்தமசீலன், நாகை

இன்னும் சில தினங்களில்...

செய்து மகிழ...

சூப்பர் சவால்...
சுறுசுறு விளையாட்டு...





கவர் ஸ்டோரி

எங்கள் செல்ல டோரா!

கோகுலம்

ஜூலை 2008 விலை ரூ.8/-

குழந்தைகளின் குதூகலம்!

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No. TN/CC(S)DN/144/06-08 Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08 Registered as a Newspaper in Srilanka.